87


"என் கடன் பணி செய்து கிடப்பதே"

OFFICE OF THE STATE EDITOR
158/GV/74
18 JUN 1974
18/6/74
GAZETTEER UNIT, MADRAS-8



# திருக்கோயில்

OFFICE OF THE STATE EDITOR
GAZETTEER UNIT, MADRAS
18 JUN 1974




மாலை 16 | ஆனந்த—ஆனி | ஜூன்—1974 | மணி 9

## பொருளடக்கம்

1. அறநிலையத் துறையின் அரும் பணிகள்
2. சங்க இலக்கியத்தில் தொழிலாளர்
3. சிவபிரானின் அருட் செயல்கள்
4. திருமங்கை மன்னன்
5. திருக்கண்ணமங்கை ஆண்டான்
6. செப்பேடு கல்வெட்டுக்களில் சங்ககாலச் செய்திகள்
7. வள்ளலார் கண்ட நால்வர்
8. நீதியால் தொழுக
9. திருவள்ளுவரின் வாழ்வியல் நோக்கு
10. தவம்
11. அமுதக் கவி
12. செய்திச் சுருக்கங்கள்

### சந்தாதாரர்களுக்கு வேண்டுகோள்!

ஆண்டுச் சந்தா ரூபா பத்து மட்டும். தனிப் பிரதி விலை ரூபா ஒன்று மட்டும்.

'திருக்கோயில்' இதழின் சந்தாதாரர்கள்ஆகச் சேர விரும்புபவர்கள் ''திரு. ஆணையர் அவர்கள், அறநிலைய ஆட்சித்துறை, சென்னை-600034'' என்னும் முகவரிக்கு ரூபா பத்து அனுப்பி எப்போது வேண்டுமாயினும் சந்தாதாரர்களாகச் சேர்ந்து கொள்ளலாம்.

அல்லது அவ்வவ்வட்டார அறநிலைய உதவி ஆணையர்களின் அலுவலகங்களிலும் மேற்படி சந்தாத் தொகையைச் செலுத்திச் சேரலாம்.

சந்தாதாரர்கள் தங்களுடைய சரியான முழு முகவரியைத் தெரிவித்துதவுதல் இதழ்கள் தவறுமற் சேர்வதற்கு மிகவும் இன்றியமையாதது.

—ஆசிரியர்.

# அறநிலையத் துறையின் அரும்பணிகள்

158593
600 008.



மாண்புமிகு
மு. கண்ணப்பன்
அறநிலையத்துறை அமைச்சர்

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே! பால் வழங்கும் துறையின் சார்பிலும், அறநிலையத் துறையின் சார்பிலும், கதர்த் துறையின் சார்பிலும் கோரப்பட்ட மானியங்களை வரவேற்று, சிறப்பான கருத்துக்களைத் தெரிவித்ததற்காக மாண்புமிகு உறுப்பினர்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். பால் வழங்கும் துறையைப் பொறுத்தவரையில் தமிழ்நாட்டு மக்களுக்கு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**

டாக்டர் ஹாண்டே அவர்கள் எழுந்து இந்தப் பேரவையிலே அவர் பேசுவதற்கு நேரம் தர வேண்டும் என்று கேட்டுக் கொண்டதிலிருந்து அவர்கள் வாக் அவுட் செய்த நிகழ்ச்சி வரையிலும் நிகழ்ச்சிக் குறிப்பிலிருந்து நீக்குகின்றேன்.

**மாண்புமிகு திரு மு. கண்ணப்பன்**

சாதாரண கிராமப்புறத்து மக்களாக இருந்தாலும், நகர்ப்புறத்து மக்களாக இருந்தாலும், அவர்களுக்குத் தேவையான பாலைச் சத்து உணவு என்ற வகையிலே வழங்க வேண்டும் என்று சாதாரண ஏழை மக்கள் அல்லது விவசாயத்தில் ஈடுபட்டிருக்கிற அத்தனை பேர்களுக்கும் துணைத் தொழிலாக இருக்கக்கூடிய இந்தப் பால் தொழில் தீவிரமான முறையில் செயல்பட வேண்டும் என்று கடந்த 2 ஆண்டுகளுக்கு முன்பு 'டையரி டெவலப்மெண்டு கார்ப்பரேஷன்' என்ற நிறுவனத்தைத் தமிழகத்தில் ஏற்படுத்த, இன்றைக்குச் சிறப்பான முறையில் இந்தக் கார்ப்பரேஷனைச் சேர்ந்த பகுதியாக இருந்தாலும், சேராத மற்ற பகுதியாக இருந்தாலும், எல்லா இடங்களிலும் திட்டமிட்டு நாம் ஏராளமாக அபிவிருத்திகளையெல்லாம் செய்திருக்கிறோம். ஏற்கனவே நான் குறிப்பிலே சொல்லியிருக்கிறேன். மேற்கொண்டும் சிறந்த முறையில் செயல்படுவதற்கு மேலான யோசனைகளையெல்லாம் உறுப்பினர்கள் சொல்லியிருக்கிறார்கள். குறிப்பில் சொல்லப்பட்டிருக்கிற மிக முக்கியமான திட்டங்களில் சேலம், நெல்லை ஆகிய இடங்களில் நாள் ஒன்றுக்கு 20,000 லிட்டர் வரை பதப்படுத்தக்கூடிய இயந்திரங்கள் ரூ. 30 லட்சம் செலவில் அமைக்க இருக்கிறோம். அதைப் போல 8 இடங்களில் பாலைக் குளிர வைக்கக்கூடிய நிலையங்களும் சுமார் 40 லட்சம் ரூபாய் செலவில் அமைக்க இருக்கிறோம். இங்கே பேசிய உறுப்பினர்கள் சென்னையிலும், மதுரையிலும் தவிர மற்ற இடங்களிலும் இப்படிப்பட்ட பால் துறையினுடைய ஏற்பாடுகள் செய்யப்படவில்லை என்ற குறையைச் சொன்னார்கள். அந்தக் குறையை

நீக்குகின்ற வகையில் 8 பாலைக் குளிர வைக்கின்ற நிலையங்கள் 40 லட்ச ரூபாய் செலவில் 20,000 லிட்டர் பால் பதப் படுத்தக்கூடிய இயந்திரங்களை நிறுவ ஏற் பாடு செய்திருக்கிறோம். மதுரை, முகவை நெல்லை, குமரி, தஞ்சை, திருச்சி ஆகிய இடங்களில் சுமார் ஒரு கோடி ரூபாய் செலவில் பாலைப் பக்குவப்படுத்தக்கூடிய இயந்திரங்களை எதிர்காலத்தில் நாம் அமைக்க இருக்கிறோம். இப்படி எல்லா இடங்களிலும் இந்த இயந்திரங்கள் அமைக் கப்படுகின்ற நேரத்தில் ஆங்காங்குக் கிடைக் கின்ற பாலைச் சேகரித்து அந்தப் பகுதி வாழ் மக்களுக்கு விநியோகம் செய்வதோடுமட்டு மல்லாமல், வேறு எந்தப் பெரிய நகரங்களில் தேவை இருக்குமானாலும் அங்கு அனுப்பு வோம், அல்லது பவுடர் தொழிற்சாலைக்கு அனுப்புவதற்கு ஏற்பாடுகள் செய்வோம். அப்பொழுது தமிழ்நாடு பூராவும் நிச்சயம் இந்தத் தொழில் சிறந்த முறையில் வளர்ச்சி அடையும் என்பதில் யாருக்கும் ஐயப்பாடு இருக்க முடியாது.

அதைப்போல இன்னொரு குறையையும் சொன்னார்கள். இப்பொழுது ஈரோடு, வேலூர், தர்மபுரி மாவட்டம் ஒரு பகுதி, நீலகிரி மாவட்டம், கோவை மாவட்டம் இப்படி பல்வேறு பகுதிகளிலிருந்து சென்னைக்குப் பாலைக் கொண்டு வருகிறோம். சென்னையில் இரண்டு பால் பண்ணைகள் இந்த ஆண்டில் முடிக்கப்பட்டு விடுகிற நேரத்தில் மேலும் அதிகப்படியாக நாள் ஒன்றுக்கு 3 லட்சம் லிட்டர் பாலைச் சென்னை நகரத்திலுள்ள மக்களுக்கு நாம் வழங்கு வோம். அப்படி வழங்குகிற நேரத்தில் ஈரோட்டிலிருக்கிற பால்பண்ணையிலும் வேலூரில் இருக்கிற பால்பண்ணையிலும் தற்போது இருக்கிற திறனைவிட திறனை அதிகமாக்கி நாள் ஒன்றுக்கு ஒரு லட்சம் லிட்டர் பால் திறன் உள்ள அளவுக்கு அந்தப் பண்ணைகளை ஃபீடர் பண்ணையாக மாற்றப் போகிறோம்.

அதைப்போல ஏழைகளுக்குக் குறைந்த விலையில் பால் வழங்கப்பட வேண்டும் என்ற ஒரு கருத்தையும் சொன்னார்கள். வெளி மார்க்கட்டில் இருப்பதைவிட சென்னை நகரத்தில் விற்கின்ற பால் மாதவரம் பால் பண்ணையிலிருந்து விற்கின்ற பால் குறைந்த விலைக்கு ஏற்கனவே விற்கப்படுகிறது. விவசாயிகளுக்கும், பால் உற்பத்தியாளர் களுக்கும் பால் விலை கட்டுப்படியாகவில்லை, அதிகப்படுத்த வேண்டும் என்ற கோரிக் கையைச் சொன்னார்கள். நான் அறிக்கை யில் குறிப்பிட்டபடி ஏப்ரல் முதல் தேதி யிலிருந்து மேலும் 10 பைசா அதிகப்படி யான விலையைத் தமிழ்நாடு பூராவும் இப் பொழுது பாலுக்காக உயர்த்தியிருக்கி றோம். ஏற்கனவே இந்தக் கோரிக்கையைச் சென்ற ஆண்டு சொன்ன நேரத்தில் சென்ற ஏப்ரல் மாதத்தில் லிட்டர் ஒன் றுக்கு 10 பைசா முதல் 18 பைசா வரை யில் அந்தப் பாலினுடைய சத்துக்குத் தகுந்தபடி நாம் விலையை ஏற்றினோம். இந்த ஆண்டு 10 பைசா விலையை உயர்த்திக் கொடுத்திருக்கிறோம். ஆனால் வாங்கிச் சாப்பிடுகிற மக்கள் பாதிக்கப்படாத வகை யில் இந்தப் பாலினுடைய விலையை ஏற்றி யிருக்கிறோம். அதோடு அல்லாமல் மதுரை நகரத்தில் அங்கே இருக்கிற பால் பண் ணைக்கு இயந்திரங்களையெல்லாம் "யுனிசிப்" நிறுவனம் நமக்கு நன்கொடையாகத் தந்தி ருக்கிறார்கள். ஆகவே, அங்கே இருக்கிற ஏழை மக்களுக்குக் குறைந்த விலையில் பால் கொடுக்க வேண்டும் என்று திட்ட மிட்டுத்தான் இந்த இயந்திரங்களை அவர் கள் வழங்கியிருக்கிறார்கள். அதை அடிப் படையாக வைத்து மதுரைப் பால் திட்டத் தின்கீழ் 1973-74-ஆம் ஆண்டில் 14,000 குடும்பங்களுக்குக் குறைந்த வருமானம் உள்ளவர்களுக்குப் பால் விநியோகம் செய் கிறோம், குறைந்த விலையில். வருகிற ஆண்டில் 1974-75-ஆம் ஆண்டில் 14,000 குடும்பங்களுக்குப் பதிலாக சுமார் 20,000 குடும்பங்களுக்கு குறைந்த வருமானம் உள்ளவர்களுக்கு, ஏழை மக்களுக்குப் பாலைக் குறைந்த விலைக்கு விற்பதற்கான ஏற்பாடுகளை இன்றைக்கு நாம் செய்திருக் கிறோம். அதைப்போல, கால்நடை உற் பத்தியைப் பொறுத்த வரையில் ஏராள மான நடவடிக்கைகளை எடுத்திருக்கிறோம். மாண்புமிகு உறுப்பினர்கள் பேசுகின்ற போது பல கருத்துக்களைச் சொன்னார்கள். குறிப்பாக லத்தீப் அவர்கள் ஏலகிரி மலை யில் பால்பண்ணை அமைப்பதைப் பற்றிச் சொன்னார்கள். ஏலகிரி மலை கடல் மட்டத் திலிருந்து 4,000 அடி உயரத்தில் இருக் கிறது; உயர் ஜாதி மாடுகளை வளர்ப்ப தற்கு ஏற்ற சூழ்நிலை இருக்கிறது என்று சொன்னார்கள். கால்நடை வளர்ச்சிக்கு ஏற்ற சாத்தியக் கூறுகள் இருப்பதாகத் தெரிந்தால், எதிர்காலத்திலே அதற்கான

நடவடிக்கைகளை எடுக்க அரசு பரிசீலனை செய்யும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

வந்தவாசி கூட்டுறவு பால் வழங்கு சங்கத்தில் முறைகேடுகள் நடந்திருப்பதாக மாண்புமிகு உறுப்பினர் வகாப் அவர்கள் சொன்னார்கள். அதைப்பற்றி விசாரணை செய்ய வேண்டுமென்று இதற்கு முன்னாலே என்னிடம் தெரிவித்தார்கள். அந்தச் சங்கத்தில் தவறு நடந்திருப்பதாகத் தெரிந்து உடனடியாக கையாடல் செய்த பணத்தைத் திருப்பிக் கட்ட வேண்டுமென்று உத்தர விட்டிருக்கிறோம். பணத்தைக் கட்டியிருக்கிறார்கள். பணத்தைத் திருப்பிக் கட்டிவிட்டால் மட்டும் அதற்கு பரிகாரம் ஏற்பட்டு விடாது; சம்பந்தப்பட்டவர்கள் சங்கத் தலைவராக இருந்தாலும் அதிகாரியாக இருந்தாலும் அவர்கள்மீது உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று ஆணையருக்குச் சொல்லியிருக்கிறோம். அவர்கள் விசாரணை செய்து யார் தவறு செய்திருந்தாலும், தவறு செய்தவர்கள் தண்டிக்கப் படுவார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பால் பவுடர் என்றாலே சத்து கிடையாது; கலப்படம் செய்யப்பட்டது என்று யாரும் எண்ண வேண்டியதில்லை. பால் பவுடர் என்றாலே மட்டம் என்று அர்த்தமல்ல. மிகுதியாக இருக்கின்ற பாலை உலர வைத்து, அதை நீண்டநாள் கெடாமல் பாதுகாப்பதற்கு என்று செய்யப்படுகின்ற ஒரு முறைதான் பாலைப் பால் பவுடராக மாற்றுவது. அதுவும் சுகாதார முறையிலே முழுவதும் இயந்திரங்களினாலேயே செய்யப்படுகிறது. எந்த இடத்திலேயும் அதைக் கையினால் தொடுவதுகூடக் கிடையாது. பால் பவுடராகி, டின்களில் அடைத்து சீல் வைப்பது வரையில் இயந்திரங்களினால்தான் நடைபெறுகிறது. ஆகவே பால் பவுடர் என்றாலே கலப்படம் செய்வது என்று யாரும் கூறவேண்டாமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, சுதந்திராக் கட்சித் தலைவர் வெங்கடசாமி அவர்கள் நல்ல இனக் கால்நடை வளர்ச்சிக்கு எந்த முயற்சியும் செய்யவில்லை என்று சொன்னார்கள். நம்முடைய கொள்கைக்குறிப்பிலேகூட அதைப் பற்றிச் சொல்லியிருக்கிறோம். வெளிநாடுகளிலிருந்து காளைகளை ஜெர்சி, ரெட்டேன் இனக் காளைகளை இறக்குமதி செய்து, கால்நடைகளின் தரத்தை உயர்த்திடும் முயற்சிகளைப் பெருமளவில் மேற்கொண்டிருக்கிறோம். இந்த முயற்சி பால் வளத்துறையில் மட்டுமல்ல; கால்நடைத் துறையிலும் மேற்கொள்ளப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தர்மபுரி மாவட்டத்திற்கு 'அப்ரேஷன் பிளெடுஸ்கீம்' விரிவுபடுத்தப்படுவது பற்றிக் குறிப்பிட்டார்கள். ஏற்கனவே தர்மபுரி மாவட்டத்தை இத்திட்டத்தின்கீழ் சேர்த்து பல்வேறு திட்டங்களை நிறைவேற்றிக் கொண்டிருக்கிறோம். கால்நடை அபிவிருத்திக்கான முயற்சிகள் மேற்கொள்ளப் பட்டிருக்கின்றன. கிருஷ்ணகிரி, மாத்தூர் பகுதிகளில் கால்நடை வைத்திருப்பவர்களிடமிருந்து உற்பத்தியாகின்ற பாலை எடுத்துக் கொண்டு, நல்ல விலை கொடுக்க ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. தர்மபுரி மாவட்டத்தைப் பொறுத்தவரையில் மற்ற மாவட்டங்களில் இல்லாத சிறப்பான பல வசதிகள் இருப்பதால் எதிர்காலத்தில் பால் வளத்தை அங்கே பெருக்குவதற்கான வாய்ப்புகளும் வசதிகளும் இருக்கின்றன. அந்த வகையிலே அங்குக் கால்நடை அபிவிருத்தித் திட்டம் தொடர்ந்து செயல் படுத்தப்படும்.

உதகைத்தொகுதி உறுப்பினர் தேவராசன் அவர்கள் ஜெர்சி இனங்களையும் ரெட்டேன் இனங்களையும் இறக்குமதி செய்ய வேண்டுமென்று சொன்னார்கள். ஏற்கெனவே இறக்குமதி செய்திருக்கிறோம். அவைகளுடைய செமன், இன அபிவிருத்திக்காகத் தமிழ்நாடு பூராவும் அனுப்பி வைக்கப் பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். உற்பத்தியாகின்ற உயர் இனக் கன்றுகள் வெளி மாநிலங்களுக்கு—மைசூர் மாநிலத்திற்கு விற்பனை செய்யப் படுவதாகச் சொன்னார்கள். அப்படி விற்கப்படுவதாக இருந்தால் அதைத் தடுப்பதற்கு என்னென்ன நடவடிக்கைகளை மேற்கொள்ளலாம் என்பதை அரசு பரிசீலனை செய்யும்.

அடுத்து, ஏ.கே. சுப்பையா அவர்கள் கிராமங்களுக்குக் கடன் கொடுப்பதில்லை என்று சொன்னார்கள். கூட்டுறவு மத்திய வங்கியின் மூலமாக இந்தப் பிரச்சினையைத் தீர்க்க வழி ஏற்படும். அதற்கு முயற்சிகள் எடுக்கப்பட்டிருக்கின்றன. தஞ்சை மாவட்டத்தைப் பொறுத்த வரையில் இப்போது மாவட்ட ஆட்சித் தலைவர் தலைமையில்

ஒரு குழு அமைக்கப்பட்டு, அந்தக் குழுவில் மத்திய வங்கித் தலைவரும் ஒரு உறுப்பின ராகப் பொறுப்பேற்று இருக்கிறார். எதிர் காலத்தில் தஞ்சை மாவட்டத்திலே எந் தெந்த வகையிலே பால் திட்டத்தை விரிவு படுத்தலாம் என்ற முறையிலே சிறந்த திட் டங்களை வகுத்திருக்கிறார்கள். மற்ற பகுதிகளிலும் கூட்டுறவு மத்திய வங்கி ஏராளமான அளவு நிதி உதவியும் செய்தி ருக்கிறது.

திருத்தணிப் பகுதியில் கூட்டுறவுச் சங் கங்கள் எல்லாம் செயலற்றிருக்கின்றன என்று திரு. தியாகராாசன் அவர்கள் கூறி னார்கள். நூற்றுக்கு மேற்பட்ட சங்கங்கள் சரியாகச் செயல்படவில்லை என்ற உண் மையை அதிகாரிகளும் ஒத்துக் கொண் டிருக்கிறார்கள். அவைகளைச் செயல்பட வைக்க என்னென்ன நடவடிக்கைகளை மேற் கொள்வது என்பது பற்றி அரசு பரிசீலனை செய்யும்.

திரு. ஏ. ஆர். சுப்பையா அவர்கள், இங்கு செமன் சென்டர்கள் நல்ல முறை யில் இல்லை; பிரோசன் செமன் சென்டர் களை உருவாக்க வேண்டுமென்று சொன் னார்கள். பிரோசன் செமன் சென்டர்களை நம்முடைய நாட்டிலே உருவாக்கக் கால் நடைத் துறையின் மூலமாக ஆராய்ச்சிகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. அதிலே ஒரு முடிவு கண்ட பிறகு, நம்முடைய துறையிலும் ஏற்படுத்துவது பற்றிப் பரி சீலனை செய்யப்படும்.

கால்நடைத் தீவனத்திற்கான திட்டம் பற்றி இந்தக் குறிப்பில் ஏதும் சொல்லப்பட வில்லை என்று பல உறுப்பினர்கள் குறை பட்டுக் கொண்டார்கள். குறிப்பில் விடு பட்டிருக்கும் என்று கருதுகிறேன். ஈரோட் டிலும் மதுரையிலும் இன்னும் சில இடங் களிலும் கால்நடைத் தீவனங்களை உற்பத்தி செய்கின்ற இயந்திரங்களை வைத்திருக் கிறோம். அந்தத் தீவனம் தமிழ்நாட்டிலே இருக்கின்ற பால் கொடுக்கின்ற கால்நடை களுக்குப் போதுமா என்றால் நிச்சயமாகப் போதாது. ஆகையால் மாதவரத்தில் சுமார் 10 லட்சம் ரூபாய் செலவில் நாள் ஒன்றுக்கு 100 டன் உற்பத்தி செய்யக் கூடிய கால்நடைத் தீவன உற்பத்தி இயந் திரம் ஒன்றைப் பொருத்தியிருக்கிறோம். அடுத்த மாதம் அது செயல்பட ஆரம்பிக்கு மானால் நமது தேவையை ஓரளவு பூர்த்தி செய்து கொள்ள முடியும்.

பால் பவுடர் தொழிற்சாலையை மதுரை யில் ஆரம்பித்திருக்கிறோம். மற்ற இடங் களிலும் ஏற்படுத்த முயற்சி செய்ய வேண்டு மென்று சொன்னார்கள். ஏற்கெனவே திட் டம் போடப்பட்டு, ஒவ்வொரு வட்டாரத் திலும் எப்படி எப்படி முடியுமோ அந்த அளவுக்குக் கால்நடை வளர்ச்சி அல்லது கால்நடை இன அபிவிருத்திக்காக ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. தொடர்ந்து மேலும் செய்யப்படும். இப்போது உற் பத்தியாகிற பாலை மதுரைப் பால் திட்டத் தின்கீழ் வாங்குகிறோம். தேவைக்கு அதிக மாக அங்கே உற்பத்தியாகின்ற பாலை வாங்க முடியவில்லை. ஆகவே, ஒரு லட்சம் லிட்டர் பால் அதிகமாகக் கிடைக் கும் என்று தெரிந்து, பால் பவுடர் உற் பத்தி செய்யும் திட்டத்தை உருவாக்கி யிருக்கிறோம். மற்ற இடங்களுக்கு விரிவு படுத்தும் சாத்தியக் கூறுகள் ஏற்பட்டால் விரிவுபடுத்தப்படும்.

பட்டதாரிகள் ஏராளமானவர்கள் வேலை யில்லாமல் இருக்கிறார்கள். அவர்களில் யார் யார் பால்பண்ணை வைக்க ஆர்வத் தோடு இருக்கிறார்களோ அவர்களுக்கு மாதவரம் பால் பண்ணையில் மூன்று மாதம் பயிற்சியளிக்கப்படுகிறது. பயிற்சிக் காலத் தில் மாதம் 150 ரூபாய் உதவிப் பணம் கொடுக்கப்படுகிறது. மூன்று மாதப் பயிற்சி முடிந்த பின்னும் மேலும் 9 மாதங் களுக்கு 150 ரூபாய் வீதம் உதவிப் பணம் கொடுக்கப்படுகிறது. அதன் பிறகு அவர் கள் மாதவரத்திலே பால் பண்ணை வைக்க விரும்பினாலோ அல்லது தமிழ்நாட்டிலே எந்த இடத்தில் பால் பண்ணை வைக்க வேண்டுமென்று விரும்புகிறார்களோ அங்கே பால்பண்ணை வைப்பதற்கு நாட்டு டைமையாக்கப்பட்ட வங்கிகளைத் தொடர்பு கொண்டு, போதுமான அளவுக்கு நிதி உதவி பெற்றுக்கொள்வதற்கு ஏற்பாடு செய்திருக்கிறோம். இத்திட்டத்தை அவர் கள் முழுமையாகப் பயன்படுத்திக் கொள்ள லாம்.

THIRUMATHI T. N. ANANDANAYAGI: Sir, I want to seek one clarification from the Hon. Minister. I want to know whether he has got a scheme to recruit at least 50 per cent of the graduates from among the women graduates to set up dairy farm.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: 50 சதவிகிதம் என்பது கூட அல்ல. விண்ணப்பம் போட்டால் பரிசீலித்து, பால் பண்ணை வைக்கத் தயாராக இருக்கின்ற பெண்கள் யாராக இருந்தாலும், பெண் பட்டதாரிகள் யாராக இருந்தாலும் எடுத்துக் கொள்ளலாம்.

அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் பொன்னப்ப நாடார் அவர்கள் ஈரோடு குழந்தை உணவுத் திட்டத்தைப் பற்றிச் சொன்னார்கள். மத்திய அரசிடம் நாம் ஏற்கெனவே இதைப்பற்றிச் சொல்லியிருக்கிறோம்.

இன்னொன்றையும் இங்கே சொன்னார்கள். பாலிலே எலி கிடந்தது என்று சொன்னார்கள். பாலிலே எலி கிடப்பது ஒவ்வொரு சட்டசபைக் கூட்டத்திலும் வழக்கமாகிவிட்டது. சென்ற முறையும் இந்த மானியக் கோரிக்கை வரும்போது பாலிலே எலி வந்துவிட்டது என்று சொன்னார்கள். அந்த மாதிரி இந்தக் கூட்டத்திலும் சொன்னார்கள். எப்படி பாலுக்குள் எலி வருகிறது என்றுதான் தெரியவில்லை. மாதவரம் பால் பண்ணைக்கு லாரி டாங்கர்களில் பால் கொண்டுவரப்படுகிறது. இங்கே வந்த பின்னால் சிறிய சிறிய குழாய்கள் மூலமாகப் பல்வேறு இடங்களுக்குப் பாலை எடுத்துச் சென்று பதப்படுத்திப் பாட்டில்களில் அடைக்கிறார்கள். எந்த இடத்திலும் மனிதர் கைகள் படுவதில்லை. சீல் வைப்பதுகூட இயந்திரம்தான். அப்படி இருக்கும்போது எப்படி எலி பாலில் வரும் என்பதைச் சிந்தித்துப் பார்க்க வேண்டும். இந்துப்பத்திரிகையில் இந்தச் செய்தி வந்தவுடன், நிச்சயமாக சட்டசபையில் இதைப் பற்றிப்பேசுவார்கள் என்று தெரிந்து, அந்த பத்திரிகைக்கு இதுபற்றிக் கடிதம் எழுதியது யார் என்று பார்த்து, அவரிடம் விசாரித்தோம். அவர் 'நான் நேரடியாகப் போய்ப் பால் வாங்குவதில்லை; 10, 12 வீடுகளுக்குச் சேர்த்து ஒரு பையன் பால் வாங்கி வருவான். இடையிலே அந்த பையன் ஏதாவது செய்திருக்கலாம்; நான் பால் துறையைக் குற்றம் சொல்லத் தயாராக இல்லை' என்று எழுத்து மூலமாகத் தெரிவித்திருக்கிறார். ஆகவே, பாலில் எலி வராது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திருமதி. த. ந. அனந்தநாயகி: பாட்டில்களில் பேப்பர் சீல் போட்டிருக்கிறார்கள். அதைச் சுலபமாக எடுத்துவிட்டு, தண்ணீர் ஊற்றி மீண்டும் மூடிவிடலாம். ஆகவே, பேப்பர் சீல் போடாமல் வேறு ஏதாவது முறையைக் கையாள வேண்டும். இல்லை என்றால் மில்க் வென்டார்கள் அதைச் சுலபமாக 'டாம்பர்' செய்து விடுவார்கள்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: இந்த விபரத்தை இங்கே இப்படி தெரிவித்திருக்க வேண்டியதில்லை. ஏனென்றால் இந்த விபரத்தைத் தெரிந்து பலர் செய்யக் கூடிய வாய்ப்பு ஏற்படும். பால்துறையைப் பொறுத்தவரையில் இன்னும் எதிர்காலத்தில் நல்ல முறையில் செயல்பட யோசனைகள் பல சொல்லியிருக்கிற உறுப்பினர்களுக்கு எல்லாம் நான் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

கதர்த் துறையைப் பொறுத்வரையில் இன்றைக்குக் கள் இறக்குவோர் இருபதாயிரம் பேர்களுக்கு மேல் வேலை இழந்திருக்கிறார்கள் என்று சொன்னதற்கு இது அதிகப்படியாக இருக்கும் என்று திரு பொன்னப்ப நாடார் அவர்கள் சொன்னார்கள். நாம் வேலையில் ஈடுபட்டிருந்தவர்கள் எண்ணிக்கையை நேரிடையாகக் கேட்டு அறிந்துதான், இந்த விவரத்தைக் கொடுத்திருக்கிறோம். கொஞ்சம் கூடுதலாகவே இருக்கிறது என்றாலும்-வேலை இழந்திருப்பதாகப் பதிவு செய்து கொண்டிருக்கிறவர்கள் அனைவருக்கும் உதவி அளிக்க அரசு நிச்சயமாக நடவடிக்கை எடுத்துக் கொள்ளும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

மதுவிலக்கினால் வேலை இழந்த 20 ஆயிரம் தொழிலாளர்களுக்கு உதவி செய்வதற்காகக் காதி கமிஷன் பணம் நமக்குக் கிடைத்திருக்கிறது. மாநில அரசாங்கமும், காதிக் கமிஷனும் இதுவரை 4457 பேர்களுக்கு, ஏழு லட்சத்து அறுபத்து நான்காயிரம் ரூபாய் கடனாகவும், ஒரு லட்சத்து ஒன்பதாயிரம் ரூபாய் மானியமாகவும் கொடுத்திருக்கிறார்கள்.

பனை மரத்தில் இருந்து விழுந்து இறந்தவர்கள் குடும்பங்களுக்கு உடனடியாக உதவித் தொகை கொடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

சுண்ணாம்பு உற்பத்தியை அதிகப்படுத்த வேண்டுமென்றும், சாணவாயுத்திட்டத்தை அதிகப்படுத்த வேண்டும் என்றும் திரு சுப்பையா முதலியார் அவர்கள் சொன்னார்கள். சாண வாயுத் திட்டத்தைப் பொறுத்த அளவில் இன்றைக்குப் பெரிய

ஸ்தாபனமாக இருக்கக் கூடியவைகள் உடனடியாக வைத்துக் கொள்வது பயனுடையதாக இருக்கும். பராசக்தி மகளிர் கல்லூரியில் கூட அது செயல்படுகிறது. தமிழ் நாட்டைப் பொறுத்தவரையில் 20 ஆயிரம் சாண வாயுத் திட்டம் ஏற்படுத்த வேண்டுமென்று காதிக் கமிஷன் திட்டம் போட்டிருக்கிறார்கள். உடனடியாகத் தமிழ்நாட்டில் இரண்டாயிரம் சாண வாயுத் திட்டத்தை 74-75-ஆம் ஆண்டிற்கு உருவாக்க வேண்டுமென்று திட்டம் போட்டிருக்கிறோம். இதற்கு ஆகும் செலவைத் தேசீயமாக்கப்பட்ட வங்கிகள் வழங்க முன் வந்திருக்கிறார்கள். சாணத்தில் இருந்து எரிவாயுவை எடுத்து அடுப்புக்கும் சரி, விளக்குக்கும் சரி பயன்படுத்திக் கொள்வதோடு, இப்போது எரிவாயு எடுக்கப்படாத சாணத்தைக் குழியில் தழைகளோடு போட்டு வைத்து ஆறு மாதங்களுக்குப் பிறகே எருவாகப் பயன்படுத்த முடிகிறது. அப்படியின்றி எரிவாயுவை எடுத்தவுடன் அந்தச் சாணத்தை எருவாகப் பயன்படுத்துகிறபோது இதில் கிடைக்கிற நைட்ரஜன் உரம்-எரிவாயு எடுக்கப்படாத சாணத்திற்குச் சரியாக இருக்கிறது என்பதனால் கிராமங்களில் உள்ள விவசாயிகளும் இதை வரவேற்கிறார்கள். ஆகவேதான் இந்த ஆண்டு தமிழ்நாட்டில் இரண்டாயிரம் சாண வாயுத் திட்டத்தை உருவாக்க நாம் நடவடிக்கை எடுத்து வருகிறோம்.

பட்டு உற்பத்தியைப் பொறுத்த வரையில் நம் மாநிலத்தில் பற்றாக்குறையாக இருக்கிறது. ஆகவேதான் கதர்த் துறையாக இருந்தாலும், கைத்தறித் துறையாக இருந்தாலும் வெளி மாநிலங்களில் இருந்துதான் பட்டு வாங்கிக் கொண்டிருக்கிறோம். இதை மாற்ற வேண்டும் என்பதற்கு இங்கேயே பட்டுப் பண்ணை ஒன்றை ஏற்படுத்தத் திட்டம் போட்டிருக்கிறோம். இது கதர்த்துறையும், தொழில் துறையும் இணைந்து செயல்படக் கூடிய ஒன்றாக இருக்க வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். தொழில் துறையோடு இதுபற்றி வைத்துப் பரிசீலிக்க நமக்கு எந்த விதமான ஆட்சேபணையும் இல்லை. கலந்து பரிசீலிக்கப்படும் என்று சொல்லிக் கொள்கிறேன்.

அடுத்து தர்மபுரி மாவட்டத்தில் இருந்த தீப்பெட்டித் தொழிற்சாலை மூடப்பட்டது குறித்து திரு வெங்கடசாமி அவர்கள் சொன்னார்கள். தீப்பெட்டிகள் அங்கே சிறந்த முறையில் உற்பத்தி செய்யப்படவில்லை-சிறந்த தொழிலாளர்கள் அங்கே இல்லை என்ற காரணத்தினால்தான் அது மூடப்பட்டது. சிறந்த தொழிலாளர்களைத் தேர்ந்தெடுத்து, சிறப்பான முறையில் தீப்பெட்டிகள் தயாரிக்க இந்த ஆண்டு அதைத் திறக்க ஏற்பாடு செய்யப்படும்.

அடுத்து சாத்தான்குளம் சட்டமன்ற உறுப்பினர் திரு கந்தசாமி அவர்கள் பனை வெல்லத் தொழிலாளர்களுக்கு இதுவரை உதவி கொடுக்கப்படவில்லை என்று சொன்னார்கள். திருநெல்வேலி மாவட்டத்தில் 435 பேர்களுக்கு உதவித் தொகை கொடுக்கப்பட்டிருக்கிறது. அவரது வட்டாரத்தில் யாருக்காவது கொடுக்கப்படவில்லை என்று சொன்னால் அங்கும் உடனடியாகக் கொடுக்க ஏற்பாடு செய்யப்படும்.

அதோடு தொழிலாளர்களுக்கு நாம் உதவியாகக் கொடுக்கிற பணம் நேரிடையாக அவர்கள் கைக்குப்போய்ச் சேருவதில்லை. இடையில் உள்ளவர்கள் எடுத்துக் கொண்டு போய்விடுகிறார்கள் என்று சொன்னார்கள். பணம் கொடுக்கிற நேரத்தில் அதிகாரிகளே நேரிடையாக இருந்து அவர்களது கண்காணிப்பில் கொடுக்க இந்தத் துறையில் ஏற்பாடு செய்யப்படும் என்று இந்த நேரத்தில் சொல்லிக் கொள்கிறேன்.

அடுத்து நெல்லை, கன்னியாகுமரி மாவட்டத்தில் இருந்து தூத்துக்குடி வழியாகப் பனை நுங்கு மட்டும் 19 லட்சத்திற்கு ஏற்றுமதி செய்திருக்கிறோம். இன்றைக்கு சுமார் 40 நாடுகள் நம்மிடம் இருந்து இந்தப் பனை நுங்கை எதிர்பார்த்திருக்கிறார்கள். வெளிநாட்டுத் தேவையைக் கருத்தில்கொண்டு இன்னும் அதிக அளவுக்கு ஏற்றுமதி செய்யவும் இந்தத் துறையில் நாம் முயற்சி செய்து கொண்டிருக்கிறோம். இங்கேயே ப்ராசஸ் செய்யலாம் என்று சொன்னார்கள். அதையும் இந்தத் துறையின் மூலம் பரிசீலிக்கச் செய்யலாம்.

'பாம் பெடரேஷன்' கலைக்கப்பட்ட காரணத்தினால் தும்புத் தொழிற்சாலை வேலை நிதானமாகிவிட்டது என்றார்கள். இந்தப் பைப்பர் தொழிலில் ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் ஈடுபட்டிருக்கிறார்கள்- இது நமக்கு அந்நியச் செலவாணியையும்

ஈட்டித் தருகிறது-ஆகவே இதற்கென்று ஒரு தனி அமைப்பையே ஏற்படுத்தலாமா என்பதுபற்றி நான் அதிகாரிகளுடன் கலந்து பேசிக்கொண்டிருக்கிறேன், இப்படி தனிப்பட்ட முறையில் இதைச் செய்வதற்கு அரசுக்கு எந்தவிதமான மறுப்பும் கிடையாது.

திரு ஏ. ஆர். சுப்பையா முதலியார்: நமக்கு இணையாக-பரவலாகக் காதி கமிஷன் இதே வேலையைச் செய்து கொண்டிருக்கிறார்கள். அவர்கள் கொடுக்கிற பணத்தை நம்மிடம் கொடுத்து நம்மையே செய்யச் சொல்லலாம்.

மாண்புமிகு திரு மு. கண்ணப்பன்: ஏற்கனவே இதுபோலக் கிடையாது. இப்போது புதிதாக ஏற்படுத்தியிருக்கிறார்கள். காதி கமிஷன் அதை நடத்துவது தேவையில்லை தான்.

கதர், கைத்தறி இரண்டையும் ஒன்றாக இணைக்க வேண்டுமென்று கருத்துத் தெரிவித்தார்கள். இது இரண்டும் மாறுபட்ட தொழிலாகும். இவை இரண்டுக்கும் நிறைய வேறுபாடுகள் இருக்கிற காரணத்தினால் இவற்றை இணைக்கிற சாத்தியக்கூறு இல்லை. கதர் உற்பத்தியில் மட்டும் இல்லாது, கைவினைப் பொருள்களைத் தயாரிப்பதிலும் பல பேர்கள் இருக்கிறார்கள். அவர்களுக்கும் எத்தனையோ உதவிகளைச் செய்து வருகிறோம். எதிர்காலத்திலும் செய்ய இருக்கிறோம்.

அடுத்து அறநிலையத்துறையை எடுத்துக் கொண்டால் ஆண்டுக்கு ஆண்டு அதிகமான கோயில்கள் இதன் நிர்வாகத்தின்கீழ் வருகின்றன, வருமானமாக இருந்தாலும் ஆண்டுக்கு ஆண்டு அதிகரித்து வந்திருக்கிறது என்பதை இங்கே இது பற்றிக் கொடுத்த குறிப்பில் நான் கொடுத்திருக்கிறேன்.

இப்படி வருமானம் வரக்கூடியதைத் திரும்பக் கோயில்களுக்கே பயன்படுத்த வேண்டும், வேறு காரியங்களுக்குப் பயன்படுத்தக்கூடாது என்ற கருத்தைச் சொன்னார்கள். கோயில்களின் திருப்பணி வேலைகளுக்குச் செலவிட்டதுபோக, பாக்கியுள்ளதைத்தான் சமுதாயத்திற்குச் செலவழிக்கிறோம். நாட்டு மக்களுக்குப் பயன்படுகிற வகையில்-பழனியில் 10 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் ஆங்கில முறை மருத்துவ மனை இருக்கிறது. அதில் மக்களுக்குச் சிறந்த மருத்துவ வசதி கிடைக்கக்கூடிய ஏற்பாடுகளைச் செய்திருக்கிறோம். அதைச் சுற்றியுள்ள பகுதி ஏழை மக்களுக்காக-நகரத்துக்கு வர வசதி அற்றவர்களுக்காக நடமாடும் மருத்துவ மனை ஒன்றையும் பழனிக் கோயிலில் இந்த ஆண்டு துவங்குவதாக இருக்கிறோம்.

திருச்செந்தூர் வட்டாரத்தில் கண் மருத்துவ மனையோ, தாய்சேய் மருத்துவ மனையோ கிடையாது. அவற்றுக்காக அவர்கள் நாற்பது ஐம்பது மைல்கள் வரவேண்டியிருக்கிறது. ஆகவே அங்குள்ள மக்களுக்கு நிவாரணம் அளிக்கிற வகையில் அங்கே தாய் சேய் மருத்துவ மனை ஒன்றை இந்த ஆண்டே துவங்குவதாக இருக்கிறோம்.

கண் மருத்துவமனைகள் திருத்தணியிலும், சமயபுரம் மாரியம்மன் கோயிலிலும், திருவேற்காட்டிலும் துவங்குவதாக இருக்கிறார்கள். இதை எல்லாம் நாட்டு மக்களும் வரவேற்கிறார்கள். எதிர்காலத்திலேயும் அதிகப்படியான மருத்துவ மனைகளைத் திறப்பதற்கு அறநிலையத் துறையிலே திட்டங்களைத் தீட்டி, அதற்கான ஏற்பாடுகளை நாம் செய்திருக்கிறோம்.

இங்கே பல நல்ல கருத்துக்களை எல்லாம் சொல்லி இருக்கிறார்கள். மாண்புமிகு திரு பொன்னப்ப நாடார் அவர்கள் தேவஸ்வம் போர்டிலே இருக்கிற குறைபாடுகளை எல்லாம் சொல்லி இருக்கிறார்கள். கடந்த ஓராண்டு, ஒன்றரை ஆண்டுகாலமாக, எப்படியாவது இந்தப் போர்டைக் கலைத்தால் போதும் என்பதுதான் எங்களுக்கும் இருக்கிற பிரச்னை. இப்போதுதான் மத்திய அரசாங்கம் அதற்கு அனுமதி தந்திருக்கிறது. நிச்சயமாக இந்தத் தொடர் கூட்டத்திலேயே அதற்கான சட்டம் கொண்டுவர நடவடிக்கை எடுப்பதாக இருக்கிறோம். ஏனென்றால், மேலே இருக்கிற அதிகாரிகளுக்கும் கட்டுப்படாமல், அவர்களாகவே ஏதேதோ செய்துகொண்டிருக்கிறார்கள்.

அர்ச்சகர்களுடைய சட்டத்திற்கு ஆதரவு தெரிவித்து அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். தேவஸ்வம் கல்லூரியைப் பற்றிச்

சொன்னார்கள். நிச்சயமாக அவருடைய கருத்து ஏற்றுக் கொள்ளப்படும். அந்தக் கல்லூரியை வேறு இடத்திற்கு எடுத்துச் செல்லாமல் அருகிலேயே வைப்போம். இப்பொழுது அக்கல்லூரிக்கு இட வசதி இல்லை. அந்தக் கட்டிட வசதி வந்த பிறகு அறங்காவலர்கள் நியமிக்கப்பட்டதற்குப் பிறகு, நிச்சயமாக அந்தக் காரியங்கள் எல்லாம் செய்யப்படும். தேவஸ்வம் போர்டு செய்யாத காரியங்கள் எவையிருந்தாலும் அவையெல்லாம் செய்யப்படும், குறைகள் எல்லாம் நிவர்த்திக்கப்படும் என்று இந்த நேரத்திலே கூறிக் கொள்கிறேன்.

வாடகைக் கட்டுப்பாடு சட்டத்தின் காரணமாக, வாடகையைக் குறைத்திருப்பதாகச் சொன்னார்கள். இந்து சமய அறக் கட்டளைக்கு உட்பட்ட கோயில்களில் மாத்திரமல்லாமல், முஸ்லீம் மதத்தைச் சேர்ந்த கிறிஸ்தவ மதத்தைச் சேர்ந்த, வீடுகள், கட்டிடங்கள், தொழுவங்கள், இவைகள் அனைத்தும் வாடகைக் கட்டுப்பாடுச் சட்டத்திற்கு உட்பட்டிருக்கிற காரணத்தால் நகர்ப்புறத்திலே இருக்கிற அந்தக் கட்டிடங்களுக்கு ஆயிரக்கணக்கிலே வரவேண்டிய வருவாய், நூற்றுக்கணக்கிலேதான் கிடைக்கிறது என்று மதிப்பீட்டுக் குழுவினர் கூடப் பரிசீலனை செய்தார்கள். வாடகைக் கட்டுப்பாடு சட்டத்திலிருந்து இந்து மதத்திற்கு மட்டுமல்ல, முஸ்லீம், கிறிஸ்தவ மதமாக இருந்தாலும், அம்மத நிறுவனங்களது கட்டிடங்களுக்கு விதி விலக்குக் கொடுக்கப்படும் என்று 3 மாதங்களுக்கு முன்னாலே முடிவு செய்திருக்கிறோம். அதற்கான உத்தரவு, வெகு சீக்கிரத்திலேயே பிறப்பிக்கப்படும் என்று இந்த நேரத்திலே சொல்லிக் கொள்ள விரும்புகின்றேன்.

நண்பர் கிருஷ்ணமூர்த்தி அவர்களும், மற்றுமுள்ள நண்பர்களும் பல கருத்துக்களைக் கோயில் அறங்காவலர்களை நியமிப்பதையும், நிர்வாகம் சீரான முறையிலே நடப்பதையும் பாராட்டினார்கள். மடங்களுக்கெல்லாம் நிலம் தேவைதானா என்று கேட்டார்கள்.

கோயில் நிலங்களுக்கு சப்சிஸ்டென்ஸ் அலவன்ஸ் கொடுப்பது பற்றியும் திரு. ஏ.கே. சுப்பையா அவர்கள் சொன்னார்கள். கேரளாவில் இருக்கிற நிலைமை பற்றிச் சொன்னார்கள். ஏற்கனவே, சில கோயில்களுக்கு, வருமானமில்லாத நிலையில், இது கொடுக்கப்பட்டு, அவர்களால், அப்படியும் நிர்வகிக்க முடியவில்லை. ஏற்கனவே உள்ள, நிலச் சீர்திருத்தச் சட்டப்படி கோயில் நிலங்களுக்கு விதி விலக்கு வேண்டு மென்று கேட்ட காரணத்தினால், இது பற்றி மறுபரிசீலனை செய்யப்படும் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ஆனால், நிலச் சீர்திருத்தச் சட்டத்திற்கு எந்தவகையிலும் ஊறு நேராத வகையில், இந்தத் திருத்தச் சட்டம் நிறைவேற்றப்படும் என்று முதலமைச்சர் அவர்கள் சொன்னார்கள். கோயில்களுக்குப் பாதகம் ஏற்படாத அளவில், எந்த அளவு செயல்படுத்த வேண்டுமோ, அந்த அளவு செயல்படுத்தப்படும் என்றும் சொன்னார்கள்.

கோயில் சிப்பந்திகளில் 18 சதவிகிதத்தினர் தாழ்த்தப்பட்டோராக இருக்க வேண்டுமென்று திரு ஏ.கே. சுப்பையா அவர்களும், திரு பாலசுந்தரம் அவர்களும் கேட்டார்கள். இப்பொழுதுள்ள சட்டத்திலே கட்டாயம் நியமிக்க வேண்டுமென்று இல்லாவிட்டாலும், அங்கங்கே சில இடங்களில் நியமித்திருக்கிறார்கள். ஆனால், நியமிக்கப்பட வேண்டுமென்பதற்குச் சட்டத் திருத்தம் தேவையா என்பதைப் பற்றிச் சட்டத் துறையிலே பரிசீலனை செய்து கொண்டிருக்கிறார்கள், தேவையென்றால், 18 சதவிகிதம் தாழ்த்தப்பட்டோர் இருக்க, திருத்தம் கொண்டு வருவதாகவும், கொஞ்ச நாளைக்கு முன்னால் கேள்வி நேரத்திலே நான் குறிப்பிட்டிருக்கிறேன். அதை மீண்டும் இப்பொழுது சொல்ல விரும்புகிறேன்.

அடுத்து, மடாதிபதி யாரோ செவர்லெட் கார் ஓட்டிக் கொண்டிருப்பதாக, திரு கே.எம்.எஸ். அவர்கள் சொன்னார்கள். 2, 3 மாதங்களுக்கு முன்பும் அவர் இதைச் சொன்னார். யாருக்காவது, கார் வாங்குவதற்கு நம்முடைய ஆணையர், துறையிலே அனுமதி கொடுத்திருக்கிறார்களா என்பதைப் பார்க்கும்போது, யாருக்கும் அனுமதி கொடுக்கவில்லை என்று தெரிவித்து இருக்கிறார். ஆகவே, அவர்கள் எந்தக் கார் வாங்கி, எப்படி எப்படி ஓட்டி இருப்பார்கள் என்பது எனக்குத் தெரியவில்லை.

கோயில் ஊழியர்களைப் பற்றியும், கோயில் ஊழியர்களுக்குச் செய்ய வேண்டிய பல்வேறு காரியங்களைப் பற்றியும், தம்பி தேவேந்திரன், பாலசுந்தரம், வடிவேல், கந்தசாமி ஆகியோர் நல்ல கருத்துக்களைச் சொல்லியிருக்கிறார்கள். அவைகளை எல்லாம் உள்ளத்திலே கொண்டு எதிர்காலத்திலே செயல்படுத்துவோம் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

திருவரங்கம் கோயில் திருப்பணியும், பவானிபுரம் பெரியபாளையம் கோயில் திருப்பணியும் எப்பொழுது செய்யப்படும் என்று கேட்டு, அவற்றைச் செய்ய வேண்டுமென்ற கோரிக்கையை உறுப்பினர் தெரிவித்தார். அந்தக் கோரிக்கையை ஏற்று, வெகு சீக்கிரத்திலே திருப்பணிகள் நடக்க நடவடிக்கை எடுப்போம் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து, திருமதி அனந்தநாயகி அவர்கள் ரூ. 15-இலட்சம் தானா அந்தத் திருப்பணிக்கு என்று கேட்டார்கள். காங்கிரஸ் ஆட்சிக் காலத்திலே ரூ. 50,000-தான் ஒதுக்கப்பட்டது. 1967-க்குப் பின்னர், அண்ணா அவர்கள் ஆட்சிக்கு வந்த பிறகு, ரூ. 3-இலட்சம் ஒதுக்கப்பட்டது. இந்த ஆண்டு ரூ. 15-இலட்சம் ஒதுக்கப்படுகிறது. இது அரசு செலவழிப்பது. இது தவிர, அறநிலையத் துறையிலே, கோயிலிலே வருகிற கணக்கைப் பார்த்தால், கோடிக்கணக்கான ரூபாயை நாம் செலவழிக்கிறோம். ஆகவே, ரூ. 15 - இலட்சம் என்று குறைத்து நாம் மதிப்பிட வேண்டிய அவசியமில்லை.

கோயில் அதிகாரிகளாகத் தாழ்த்தப்பட்டவர்களை நியமிக்க வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். எக்ஸிக்யூடிவ் ஆபீஸர்களாக வருபவர்களை, பப்ளிக் சர்வீஸ் கமிஷன் மூலமாகத் தேர்ந்தெடுக்கிறோம். அவர்கள் என்ன என்ன விதிமுறைகளை வைத்திருக்கிறார்களோ, அந்த அடிப்படையிலே, தாழ்த்தப்பட்டவர்களாக இருந்தாலும், பிற்படுத்தப்பட்டவர்களாக இருந்தாலும், நிச்சயமாக அவர்களுக்குச் செய்ய வேண்டியதைச் செய்கிறோம். அதைப்பற்றி யாரும் அச்சப்படத் தேவையில்லை.

இன்னும் பல கருத்துக்கள் சொல்லப்பட்டிருக்கின்றன. எதிர்காலத்திலே, மிகச் சிறந்த முறையிலே நடவடிக்கை எடுக்கப்படும் என்ற வகையில் (குறுக்கீடு) மாநில அரசாங்க ஊழியர்களாக, கோயில் ஊழியர்களை மாற்ற வேண்டுமென்று மதிப்பிற்குரிய தியாகராசன் அவர்கள் கேட்கிறார்கள். கோயிலிலே வருகிற வருமானம் அவர்களுக்குத் தெரியும். அதில், அவர்களுக்கு எப்படி சம்பளம் கொடுக்க முடியும்? அவர்களுடைய நிலைமையை எல்லாம் பரிசீலனை செய்து, இந்த ஆண்டு எவ்வளவு செய்ய முடியுமோ, அந்த அளவு கோயில்களுக்குக் கொடுத்துக் கொண்டிருக்கிறோம். பழமைக் கோயில்களிலுள்ள வருமானத்தை எடுத்து, வருமானமில்லாத கோயில்களிலுள்ள ஊழியர்களுக்குச் சம்பளம் கொடுக்க முடியாது. திருப்பணி வேண்டுமானால் செய்யலாம், அப்பணத்தை எடுத்து. ஆகவே அப்படிப்பட்ட நிலைமையில், நாம் பல்வேறு தரப்பட்ட நிலைமைகளைப் பார்த்து, கோயில் வருமானத்திற்குத் தகுந்தாற்போல் நிர்ணயம் செய்திருக்கிறோம். பல நூற்றாண்டுகளாகக் கொடுக்காத சம்பளத்தை நாம் கொடுத்துக் கொண்டிருக்கிறோம்.

பாலாற்றங்கரைக் கோயிலைப் பற்றிச் சிந்திக்கவில்லை யென்று லத்தீப் அவர்கள் சொன்னார்கள். அதுபற்றிச் சிந்திக்கப்படும். அதிதீஸ்வரம் கோயில் திருப்பணிக்காக நடவடிக்கை எடுக்கிறோம் என்று தெரிவித்துக் கொண்டு நல்ல கருத்துக்களைச் சொல்லிய உறுப்பினர்களுக்கு நன்றி சொல்லி, வெட்டுத் தீர்மானங்களை வலியுறுத்தாமல் இந்த மானியக் கோரிக்கைகளை ஏகமனதாக நிறைவேற்றித் தர வேண்டுமென்று கேட்டுக்கொண்டு விடை பெறுகிறேன்.

[சட்டப் பேரவையில் அறநிலையத் துறையின் மானியக் கோரிக்கை மீது மாண்புமிகு உறுப்பினர்கள் நிகழ்த்திய உரைகளுக்குப் பதில் அளித்து மாண்புமிகு அறநிலைய அமைச்சர் அவர்கள் ஆற்றிய பேருரை].

# சங்க இலக்கியத்தில் தொழிலாளர்



வணக்கம்.

வாஞ்சைமிகும் அமைச்சருக்கும்,
வந்திருக்கும் பெரியோர்க்கும், வணக்கம்.
வருடந் தவறினாலும் பாரியின் புகழ்ப் பாதம்
வருடத் தவறாமல் வந்திருக்கும் புலவர்க்கும், வணக்கம்.

வாரி வழங்கும் மன்னன் பாரி—மனம்
சொன்னதைக் கொடுக்கும் தென்புல வள்ளல்—
சுந்தரத் திருநாள் சுவைத் தமிழ் மணக்கச்
சொக்கர் பக்தர் தவத்திரு அடியார்
அழைப்பினை ஏற்று அனைவரும் வந்தோம்—

உட்பகையால் உயிரிழந்தான் பாரி மன்னன்,
அப்பகையால் அழிவதெனில் எனக்கும் சுகமே;
உள்ளிருந்தே கொல்லும் பிணியாய்,
உடனிருந்தே கொல்லும் அணிகள்
எனக்கென்றே வாய்த்த பெருமை—பாரி
தனக் கென்றே கொண்ட பெருமை!

பாடிட வந்த பாவலர் குழுவே! தமிழ்
பருகிட வந்த என்னுடை வணக்கம்!



மாண்புமிகு
டாக்டர். கலைஞர்
முதல்வர்

[பறம்புமலையில் 1-5-74 மாலை, நமது தமிழக முதல்வர் தமிழவேள் மாண்புமிகு டாக்டர் கலைஞர் அவர்களின் தலைமையில் நடைபெற்ற பாரி விழாக் கவியரங்கில், சிவகெங்கை இராசேந்திரன், மாணிக்கவாசகம், நாராயண சாமி, தமிழண்ணல், ஞானச்செல்வன், முடியரசன் ஆகிய ஆறு கவிஞர்கள் இலக்கியத்தில் உழவர், நெய்வோர், ஓவியர், ஆடுநர், பாடுநர், கொல்லர், படைஞர் என்ற தலைப்புகளில் பாடினர். அக்கவியரங்கில் நமது மாண்புமிகு முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களின் தலைமையுரைக் கவிதை, இங்குப் பெரிதும் போற்றி மகிழ்ச்சியுடன் வெளி யிடப்பெறுகின்றது.

—ஆசிரியர்.]

ஆடுநர் பாடுநர் அழகாம் ஓவியர்
அஞ்சாப் படைஞர் அன்புடை நெய்வோர்
அமைதி உழவர் அணிசேர் கொல்லர்
அத்தனைபேரும் சொற் சித்திரமாவர்—
அள்ளித் தருக கவியாம் அமுதை!

ஆகாயக் கானகத்தில் அன்னப் படகு ஒன்று
அடியில்லா மரம் போல ஆறுதலை நாகமுடன்
வேதாக மங்கள் விறலிவிடு தூதுக்கள்
பேஷான சுண்டல் வடை பாயாசம்
கும்பகோணம் மாமாங்கம் குடமுழுக்கு
கூளப்ப நாயக்கன் காதல் குமரேச சதகம் துள்ளக்
குங்குமத்தைப் பொட்டிட்டுக் கூந்தலையும் சிறைப்படுத்திச்
சந்தனத்துப் பிணவாடை சவ்வாதுப் பாலாடை
சலசலக்கும் தென்றலிலே ''ஜன்னல் கண்'' கொண்டிங்கே
பளபளக்கும் விழிகாட்டிப் பாவைநீ கண்வளராய்!

புலவர்களே!

புரிகிறதா கவிதை? இல்லை புலன் ஐந்தும் எரிகிறதா?
புரட்சிக் கவிதை எனப் புரியாமல் எழுதுகின்ற
வறட்சிச் சிறுவர்களின் பாட்டுக்கோர் எடுத்துக்காட்டு!
இவரெல்லாம் கவிஞர்எனத் திரிகின்ற தமிழ் நிலத்தில்—குட்டிச்
சுவரெல்லாம் தமிழ்த் தலைமை கோருவதும் நியாயந் தானே!
நான்குபுறம் சட்டமில்லாச் சித்திரம் போல்
நான் எழுதும் பாட்டுக்குச் சீர்தளைகள் இருப்பதில்லை ;

அதனுலே

சித்திரமும் இல்லை என்று செப்புவரோ தமிழ் நாட்டார்?
சிந்தை அணு ஒவ்வொன்றும் சிலிர்க்கின்ற உணர்வுகளே என் பாட்டு;
செந்தமிழர் நலமிசைக்கச் சீர்திருத்த முறைகூற எழுந்த பாட்டு;
மரபொழுக்கம், மானம், வீரம், ஈகை, இவைமலிந்த
திருநாட்டுச் சிறப்புயர்த்தப் பாடல் வேண்டும்!
மாற்ருரும் நம்மவர்போல் நடித்துத் தாக்கிக்
காற்ருடிக் கொள்கையினுல் கவரும் முயற்சி
தோற்ருேடிப் போவதற்குப் பாடல் வேண்டும்!
ஏழைகளின் முதுகெலும்பில் ஏணைகட்டி
ஏற்றமுற்ருேர் துயில்கொள்ளல்—பார்த்திருத்தல்
கோழைகளின் செயல் என்று பாடல் வேண்டும்!
சாதிமத பேதங்களை மேடையிலே சாடி,
மீதிநேரம் வீட்டுக்குள் அவைகளையே நாடும்
பாதிமனப் பகுத்தறிவு வாதிகளைத் தேடிப்
பக்குவமாய் எச்சரிக்கப் பாடல் வேண்டும்!

உறவுக்குக் கை கொடுக்கப் பாட்டு,
உரிமைக்குக் குரல் கொடுக்கப் பாட்டு,
உத்தமர்க்குப் புகழ் பாடப் பாட்டு,
ஊருக்கு நலம்பொழியப் பாட்டு,

தமிழ் வாழப் பாட்டு—தமிழர்
கொடி வாழப் பாட்டு,
பார் செழிக்கப் பாட்டு—இன்று
பாரி விழாப் பாட்டு!

மாண்டுவிட்டான் என்றிருந்தோம் மன்னன் பாரி,
ஆண்டுதோறும் அடிகளார்தான் எழுப்புகின்றார் அவனை;

தோண்டிவிட்டால் கிணற்றுக்குள் தண்ணீர் வரும்,
தூண்டிவிட்டால் மீன்கள் வரும் குளத்திருந்து,
வேண்டிவிட்டால் வெகுமதிகள் நிறைய வரும்—பாரி நாட்டில்
மீண்டுவிட்டால் இறைவனும்—மழை பொழியும் பொன்னாக!

* * *

மொழி வளர்த்தல், கலைவளர்த்தல்—உலகில்
மூத்த தமிழ்க் குலம் வளர்த்தல்
விழிமலரை இமை இலைகள் காப்பது போல்,
வேந்தர்க்கு அந்நாளில் கடமைகளாம்.
பழியுரைத்து இந்நாளில் பாம்புகளாய்க் கடிக்கின்றார்;
பசுந்தமிழ் வளர்க்கப் பணிகளை நாம் மேற்கொண்டால்
தேரை நிறுத்திக் கொடிகாத்த பாரி நாளில் கேட்கின்றேன்
தேரைகளா நாம், பாம்புகட்குத் தீனியாக? இல்லை, இல்லை;
கீரிகளாய் மாறிடுவோம்—கிளர்ந்தெழுவோம்
கீரைத் தண்டுகள்போல் கிழித்தெறிவோம் பாம்பினத்தை!
''கிளம்பிற்றுக் காண் தமிழ்ச் சிங்கக் கூட்டம்
கிழித்தெறியத் தேடுதுகாண் பகைக் கூட்டத்தை'' எனப்
பாவேந்தன் பாடியது மறந்தா போகும்?
பாவிநீ மறந்தாலே உன் மானம் போகும்!

* * *

தமிழ் விழா எடுத்தனர்
தகத்தகாயப் பொன்விழா எடுத்தனர்
தளதள வெனக் கிழவர்கள் வந்தனர்
தந்தச் சிலையென மகளிர் கூடினர்
திண்தோள் இளைஞர் திரளாய்க் குழுமினர்
தெவிட்டா அமுத மழலைகள் திரண்டனர்

அணிகள் மணிகள் கண்ணைப் பறித்தன
ஆட்டம் பாட்டம் அகமிக மயக்கின
கோயில் யானையின் கோலமே கோலம்
கோமளக் குயிலின் கீதமே கீதம்
கொடிகள், சுருட்டிகள், கோபுரப் பந்தல்
கொள்ளை யழகு! கொள்ளை யழகு!
விழாப் பயன் இதுவே எனிலோ, எந்தன் வேதனைமிகுமே!
அழாக் குறையாக அன்னைத் தமிழாள் இருப்பதை எண்ணி,

இனி,

எழாத் தமிழரும் எழுந்திடல் வேண்டும்—அன்றே
விழாப் பயனைச் சுமந்திடும் தென்றல்!

கபிலர் என்றொரு புலவர் உண்டு—அவர்
கவிகள் அனைத்தும் தேன் கனி கற்கண்டு!
அகம் புறம் என்ற தொகுப்புகள் உண்டு—அவை
இக பரம் பற்றிய பாடல்களன்று!
கன்னியர் ஆடவர் காதலோர் புறம்—காளையர்
களிற்றை அடக்கிடுமாற்றல் ஓர் புறம்!
எண்ணியர் திண்ணியர் மன்னர் வாழ்ந்தனர்!
கண்ணியம் கடமை போற்றி ஆண்டனர்!
வேல்கொண்டு மண்காத்த வேந்தர்கள் கொற்றம்,
விரைந்து தமிழ்கொண்டு கவிபாடும் புலவர்கள் சுற்றம்!

இப்படி
எட்டாக் கனியாய் இலக்கிய நூல்களில்
இருக்கும் சிறப்பை எடுத்து விளக்க
எளிமையில் கவிதைகள் இயற்றல் நன்று!
எந்தன் பணியும் இவற்றில் ஒன்று—
மறைந்த தமிழரின் மறையாச் சரிதம்
மங்கா விளக்கென எங்கும் திகழ
விரைந்து செயல்கள் விளைப்போம் வாரீர்!

கரிகாற் சோழன் கட்டிய புகாரும்
கடல்வாய் வீழ்ந்து அழிந்ததை அறிவோம்;
கட்டியே முடிப்போம் புதிய புகார் எனத்
தட்டிய தோளுடன் தலைநிமிர்ந் தெழுந்தோம்!
பாஞ்சைப் பதியின் பாயும் புலியாம்
பரங்கியர் பகைவன் பாண்டிய பொம்மன்
மண்ணொடு கலந்த மறவன் கோட்டை
மறுஉருக் கொண்டு மாண்புகளுடனே
மரபினைச் சொல்ல எழுவது காணீர்!
வள்ளுவர் வாழ்ந்த வளமிகு மயிலை
வண்ணக் கோயில் பழுதுறு நிலையை
உள்ளவும் இயலா உணர்வுடன் தடுத்துச்
செந்நாப் போதார் சிறப்பினைச் சொல்லச்
சென்னையில் கோட்டம் திருப்பணி தொடங்கும்!
சங்கப் புலவர்கள் தங்கச் செய்யுள்
எங்கும் ஒளிவிட ஏற்றோம் தொண்டு!

இனி,

எழாத் தமிழரும் எழுந்திடல் வேண்டும்-அன்றே
விழாப் பயனைச் சுமந்திடும் தென்றல்!

மன்னரும் புலவருந்தான் இலக்கியத்தில் இருக்கின்றார்.
மற்றெவரும் இல்லையென்று எண்ணுதீர்!
தென்னவர் தம் திருநாட்டு இலக்கியத்தில்

திறன்மலி உழவர், தீதிலா ஓவியர்,
உரமலி படைஞர், ஒப்பிலா நெய்வோர்,
ஆடுநர், பாடுநர், அழியாக் கொல்லர்
ஆக்கும் தொழில்கள் ஆற்றினர் அன்று!

**உழவர்:**

''பண்ணியும் அட்டியும், பசும்பதம் கொடுத்தும்
புண்ணியம் முட்டாத் தண்ணிழல் வாழ்க்கை
கொடுமேழி நசை உழவர்..''
எனப் பாடும்; இலக்கிய ஏடும்!

**நெய்வோர்:**

ஆற்றுப்படையின் அழகுறு தமிழும்
நூற்று வாழ்வோர் மேன்மையைப் புகழும்
''நோக்கு நுழைகல்லா நுண்மைய பூக்கனிந்து
அரவுரியன்ன அறுவை''

**ஓவியர்:**

ஓவியர் புகழோ உச்சியில் நின்றது!
''ஓவத் தன்ன இடனுடை வரைப்பு''
சித்திரம் பற்றிய முத்திரைப் பாட்டில்
கைத்திறம் வியந்து கவிஞர் பெருமான்
போற்றிய சொற்கள் புறப்பாட்டுடைத்து!

**ஆடுநர்:**

கோட்டமும் கொற்றமும் குடையுங் கொண்டான்
ஆட்டன் அத்தி என்பான் வாழ்ந்தான்
இன்னும், ''விழவிற்
கோடியர் நீர்மைபோல் முறைமுறை
ஆடுநர் கழியும் இவ்வுலகத்து'' என்றே
பாடிய புலவர் முதுகண்(ண) சாத்தன்.

**பாடுநர்:**

பாணர் பொருநர் கூத்தர் நல்இசை
வாணர் என்றே நாட்டின் தலைவன்
ஆனை குதிரை அணிமணி போன்று
ஆயிரம் பரிசுகள் அள்ளித் தருவான்

**கொல்லர்:**

கொல்லன் எங்கே இலக்கியத்தில்
கூறென்று கேட்பவர்க்கு-பொற்
கொல்லரையே காட்டிடலாம் சிலம்பு நூலில்!
''வேல்வடித்துக் கொடுத்தல் கொல்லர்க்குக் கடனே'' எனப்
பால்வடித்துக் கொடுக்கும் புற நூல் பகரும்.

**படைஞர்:**

வில்லெடுத்து எய்த கணை
வீழ்த்தியது வேழத்தை-நில்லாது
பொல்லாத புலியொன்றைத் தீர்த்துப்
பூமிகிளர் பன்றியினைச் சாய்த்துப்
புற்றுக்குள் உடும்பினையே தாக்கும்
புதுமைதனைப் பழமையிலே கண்டோம்.

''வேழம் வீழ்த்த விழுத்தொடைப் பகழி
பேழ்வாய் உழுவையைப் பெரும்பிறி துறீஇப்
புழற்றலைப் புகர்க்கலை யுருட்டி உரற்றலைக்
கேழற் பன்றி வீழ அயலது
ஆழற் புற்றத் துடும்பிற் செற்றும்
வல்வில் வேட்டம் வலம்படுத் திருந்தோன்''

என,
வில் வல்லோன் ஓரிதனை ஒரு
சொல் வல்லோனே வன்பரணன்
வாழ்த்தியதே இந்தப் பாடல்!

* * * *

வந்தவரை வரவேற்று நொந்தவரைக் காப்பாற்றிச்
சந்தமிகு தமிழ்வாழப் பறம்பு நாட்டைச்
சொந்தமுடன் ஆண்டிருந்த பாரிவேளின்
அந்தமிகு திருவிழாவில் ஆணையிட்டுச் சொல்கின்றேன்!
அனைவருமே சபதம் ஏற்போம்!
பனை வயிர நெஞ்சுடனே சூளுரைப்போம்!
பழந்தமிழர் மரபு காப்போம்!
பகைப்புலத்தை இன்றே சாய்ப்போம்!

பண்டு தொட்டு வாழ்ந்த இனம்-மாய்வதா?
ஒண்ட வந்த பேய்கள் குலம்-பாய்வதா?
நாம் மாய்வதா?
வண்டுநிகர் கூந்தல் மாதர்
பெண்டு பிள்ளை தாய்கள் குலம்-கோழையா?
செண்டு கொண்டு செருமுனையில்-வெற்றி
கண்ட வீரர் எல்லாம்-மோழையா?

பண்டு தொட்டு வாழ்ந்த இனம்-மாய்வதா?
ஒண்ட வந்த பேய்கள் குலம்-பாய்வதா?
நாம் மாய்வதா?
கண்ணகியின் வழியில் வந்த கற்பரசி வீழ்வதாம்!
கருணையும் காதலித்த பாஞ்சாலி வாழ்வதாம்!

கரிகால் வளவனைக் கொல்வதாம்-ஒரு
கருங்காலி மனிதன் வெல்வதாம்!
கடமை தோற்பதாம்!
மடமை கெலிப்பதாம்!
கழகம்அழிவதாம்!
கலகம் வளர்வதாம்!

ஏடா தமிழா எடுடா சபதம்!
காடோ மேடோ நடந்திடு கடுகி,
வீடா நாடா விளக்கிடு விரைவில்!
ஆடோ மாடோ அறிவிலா இனமோ?
கோடோ குன்றோ ஏற்றிடு கொடியை!
ஈடோ இணையோ எதிரிகள் உனக்கு?
ஏடா தமிழா எடுடா சபதம்!

158593

# சிவபிரானின் அருட் செயல்கள்

'திருக்குறள் வேள்' திரு கு. வரதராசப் பிள்ளை அவர்கள், B. A., திருச்சி.

## ஐந்தொழில்

இறைவன் உயிர்கள் உய்தி பெறும் பொருட்டு, படைத்தல் காத்தல் அழித்தல் மறைத்தல் அருளல் என்னும் ஐந்தொழில்களை இடைவிடாது இயற்றி வருகின்முன். ஆசிரியர் திருமூலர் படைத்தலைச் சருவ சிருட்டி என்றும், கர்ப்பக் கிரியை என்றும் இரண்டு வகையாகக் கூறுகிமுர். சருவ சிருட்டியாவது, உலகத் தோற்றம் முதலியவற்றைப் பற்றியது. கர்ப்பக் கிரியை யாவது, தாயின் கருப்பத்தில் இறைவன் சேய்க்குப் புரியும் உபகாரமாகும்.

பராபரன் ஆதியும் அந்தமும் இல்லாத பரம் பொருளாகும். அவனது சத்தியே பராபரையாவள். உலகைத் தோற்றுவிக்க வேண்டும் என்று எண்ணங் கொண்டபோது அவன் பரன் என்றும், அவனது சத்தி பரை என்றும் பெயர் பெறுவர். பரையினிடமாகத் தோன்றுவது நாதமாகும் (381). நாதத்திலிருந்து விந்துவும், நாத விந்துக்களிலிருந்து சிவம் சத்தியும் தோன்றும். சிவசத்தி புவனங்களை எல்லாம் படைக்கும். பிரமன் திருமால் உருத்திரன் மகேசுவரன் சதாசிவன் ஆகிய ஐவரும் சிவம் சத்திகளின் ஏவல் வழி நின்று உலகினைப் படைத்து, அளித்து, அழித்து, மறைந்து, அருளிக் காப்பவராவர்.

## படைத்தல்

அடுத்து சதாசிவனே படைத்தற் கடவுளாகிய பிரமனை அதிட்டித்து நின்று உலகம் முதலியவற்றைச் சிருட்டித்து அருளுகின்முன். அப் பெருமான் பிரமனோடு உடனாய் நின்று படைத்தலோடு சொற் பிரபஞ்சம் பொருட் பிரபஞ்சமாகவும் அவனே உள்ளான். வன்னம் பதம் மந்திரம் என்பன சொற்பிரபஞ்சம். கலை தத்துவம் புவனம் என்பன பொருட் பிரபஞ்சம் ஆகும். வன்னமாவது எழுத்து; பதமாவது சொல்; மந்திரமாவது வாக்கியம் ஆகும். கலை யாவன: நிவிர்த்தி பிரதிட்டை வித்தை சாந்தி சாந்தியதீதை என்பன. தத்துவமாவது முப்பத்தாறு தத்துவமாம். இவை ஆன்ம தத்துவம் 24, வித்தியா தத்துவம் 7, சிவ தத்துவம் 5 ஆக 36 ஆகும். புவனங்கள் 224 ஆகும். இவை பலவகைப்பட்ட உயிர்களும் வாழ்வதற்குரிய இடங்களாம்.

சிவ பெருமானே படைத்தல் முதலிய தொழில்களைச் செய்வதில்லை; அவை அவனது சந்நிதியில் நிகழ்கின்றன. சிவனோடு பொருந்திய சத்தியே இச் செயல்களை நிகழ்த்துகிமுள். அவளே சதாசிவ மூர்த்தியாய்ப் படைத்தலாகிய ஐந்தொழிலையும் செய்வாள். ஒரே சத்தி பல பேதங்களாய் விரிந்து சீவர்களுக்கு வினைக்கேற்ப உலக அனுபவத்தில் ஆழ்த்தி உய்திபெறச் செய்வாள்.

''வாரணி கொங்கை மனோன்மணி மங்கலி
காரணி காரிய மாகக் கலந்தவள்
வாரணி ஆரணி வானவர் மோகினி
பூரணி போதாதி போதமு மாமே'' (402)

அடுத்து சூரியன் சந்திரன் அக்கினி ஆகிய மூன்று ஒளிப் பொருள்களும், எட்டுத் திக்குப் பாலகர்களும், நிலம் நீர் தீ காற்று விண் ஆகிய பஞ்ச பூதங்களும், சத்தம் பரிசம் ரூபம் ரசம் கந்தம் ஆகிய ஐந்து தன் மாத்திரைகளும், வாக்கு பாதம் பாணி பாயுரு உபத்தம் ஆகிய ஐந்து கன்மேந்திரியங்களும், மனம் புத்தி சித்தம் அகங்காரம் ஆகிய நான்கு அந்தக் கரணங்களும், மாயையினின்றும் தோற்றுவிக்கப் பட்டனவேயாம்.

''ஆதித்தன் சந்திரன் அங்கிஎண் பாலகர்கள்
போதித்த வானொலி பொங்கிய நீர்புவி
வாதித்த சத்தாதி வாக்கு மனாதிகள்
ஓதுற்ற மாயையின் விந்துவின்உற்றதே''(410)

இவ்வாறு படைக்கப்பட்ட பொருள்கள் உருவத்தாலும் குணத்தாலும் ஒன்றுபோல் மற்றொன்று இருப்பது இல்லை. அனாதி

காலந்தொட்டு இன்றுவரை படைப்புப் பேதங்கள் எத்துணை வகையாக உள்ளன? பறவைகள் போல் மிருகங்கள் இல்லை ; மிருகங்கள் போல் மக்கள் இல்லை; மக்களைப் போல் தேவர் இல்லை. இனி மனிதரில் எத்துணைப் பேதம்? இந்தியரைப்போல் ஐரோப்பியர் இல்லை; ஐரோப்பியரைப் போல் ஆப்பிரிக்கர் இல்லை. நிறத்தால் குணத்தால் வேறுபாடுகள் இருக்கத்தானே செய்கின்றன! அதனால்தான் திருமூலர் படைப்புப் பேதங்களைச் சொல்லும்போது எண்பத்து நான்கு நூறாயிரம் பேதங்கள் என்று விரித்துக் கூறுகிறார்.

''அப்பரி செண்பத்து நான்குநூ றாயிரம்
மெய்ப்பரி செய்தி விரிந்துயிராய் நிற்கும்
பொய்ப்பரி செய்திப் புகலும் மனிதர்கட்
கிப்பரி சேஇருள் மூடி நின்றானே'' (409)

## கர்ப்பக் கிரியை

ஆதியாகிய சிவபெருமான் பிரமனாதி ஐவர்க்கும் ஆதாரமாய் இருந்து சத்தியைக் கொண்டு பிரபஞ்சத்தைப் படைத்தருளுவதோடு, சகல சீவராசிகளும் வாழ்வதற்கு அவை அவை செய்த வினைக்கேற்பத் தத்துவங்களைக் கருவிலே புணர்த்துகின்றான். அவ்வாறு புணர்த்துகின்றவற்றை அக் கருப்பையில் இருந்து காத்தும் உதவுகின்றான். (451). இருபத்தைந்தாவன: அறிவுப் பொறி 5, செயற் பொறி 5, தன் மாத்திரைகள் 5, பூதம் 5, அந்தக் கரணம் 4, புருடன் 1 ஆகும்.

## தத்துவச் சேர்க்கை

கருப்பையில் படைப்பதற்குக் கருத்தா நாம் என்று தருக்குவோம். ஆண் பெண் கூட்டுறவால் உண்டாகும் சுக்கில சுரோணிதக் கலப்பால் கரு அமைகிறது என்று எண்ணுகிறோம். அஃது ஓரளவுதான் உண்மையாகும். ஆனால் அமைதியாக ஆணவக் கருவறையில் கண்ணிலாக் குழவிபோல் தடுமாறிக் கொண்டிருந்த உயிர்களுக்குச் சூக்கும உடம்பைக் கொடுத்து அருளியவன் தனக்கு ஒரு முதல் இல்லாத இறைவன் ஆவான். இச் சூக்கும உடம்பு மனம் புத்தி அகங்காரம் சுவை ஒளி ஊறு ஓசை நாற்றம் ஆகிய எட்டும் கூடியதாகும். இதனைப் புரியட்டக சரீரம் என்று கூறுவர்.

இச் சரீரம் படைப்பின் போது சீவனோடு கூட்டப் பெற்று முத்திக் காலத்தில் இறைவனால் நீக்கப்பெறும். இப் படைப்பினைச் செய்தலால் இறைவன் உயிர்களுக்குத் தாயும் தந்தையுமாவான். நாத விந்துக் கலப்பினால் கருவில் சீவன் அமையும்போது அது அங்குப் பத்து மாதங்கள் தங்க வேண்டும் என்ற நியதியையும், அஃது உலகில் வாழ வேண்டிய கால எல்லையையும் இறைவன் அமைக்கிறான். கருவினுள்ளே தூல உடம்பு அமைவதற்கான தத்துவங்கள் கூட்டப் பெறுகின்றன. அத்துடன் அக் கரு வளர்ச்சி பெற்று ஞானம் பெறுவதற்கான சாதனமும் அங்கு இறைவன் அமைக்கின்றான். அது மட்டுமல்ல. அக் கரு பாதுகாவலாக வளர்வதற்கேற்ப வெம்மை மிகாமலும், குறையாமலும் இருக்கும் வண்ணம் தாயின் வயிற்றிலே அமைத்து அருளுகின்றான்.

''பழிபல செய்கின்ற பாசக் கருவைச்
சுழிபல வாங்கிச் சுடாமல்வைத் தானே''

என்று கருப்பையிலுள்ள இடர்களை ஆசிரியர் குறிப்பிடுகிறார். மணிவாசகர் தமது போற்றித் திருவகவலில், தாயின் வயிற்றில் இருக்கும் கருவிற்கு முறையே பத்து மாதங்களிலும் ஏற்படுகின்ற இடர்ப்பாடுகளைக் குறிப்பிட்டிருப்பதும், இங்கு நாம் உணர்ந்து இன்புறத் தக்கது. இத்துணைத் துன்பத்தையும் இறைவன் கருணை இல்லாவிடில், கருவானது தன்னுடைய முயற்சியால் கடக்க முடியுமா? முடியாது.

''வகுத்த பிறவியை மாதுநல் லாளுந்
தொகுத்திருள் நீக்கிய சோதி யவனும்
பகுத்துணர் வாகிய பல்லுயிர் எல்லாம்
வகுத்துள்ளும் நின்றதோர் மாண்பது வாமே'' (476)

இவ்வாறு இறைவன் கருப்பத்தில் சிசுவினைப் புகும்படி செய்து, அங்கு வேண்டிய பாதுகாவலை அமைத்து, பின்னர் புற உலகத்தில் அச் சிசு முழுத் தன்மையும் பெற்று வளரத் தனு கரண புவன போகங்களையும் படைக்கின்றான்.

## காத்தல்

சருவ சிருட்டியைச் செய்யும் சிவனே கருப்பையில் கருவைப் பதிப்பதற்கும், அங்குக் காப்பதற்கும் காரணமாக இருந்து

சீவர்களுக்கு உடல் முதலியவை அருளி மாயையாகிய தாயை வளர்க்கச் செய்கிறுன். அவ்வாறு அவள் வளர்க்க உதவுவதோடு தானும் உடனிருந்து வளர்த்துக் காக்கிறுன். அஃது எதுபோலும் எனின், கணக்கு வகுப்பில் ஆசிரியர் மாணுக்கருக்குக் கணக்குச் சொல்லிக் கொடுப்பதோடு தானும் உடனிருந்து போட்டுக் காட்டுவது போல் ஆகும். அம் முறையில் சிவன் சீவர்களுக்குச் சகல நிலையில் (உடம்போடு கூடியிருக்கும் நிலையில்) போகத்தைக் கொடுப்பதோடு தானும் உடனிருந்து ஊட்டி வினைகளைக் கழிக்க உதவுகிறுன். (411).

## போகப் பொருள் தருதல்

சீவர்கள் போகங்களை அனுபவிக்க வேண்டுமே! அப்பொழுதுதானே வினை கழியும். அதற்காகப் பெருமானே உடல் உயிர்த் தத்துவங்களாக உள்ளான். அவனே கடலாகவும், மலையாகவும், மேகமாகவும் இருந்து மழை பொழிவித்து உலகினைச் செழிக்கச் செய்கின்றுன். கடல், மலை, மேகம் ஆகிய மூன்றுமே மழைக்குக் காரணம் என்பதை விஞ்ஞானம் உணர்த்துகிறது. இத்துணையும் அருளுவதற்கு அவன் தலைவனுகவும் உள்ளான். (412).

## பண்பு அருளல்

சீவர்களுக்கு உடம்பு கருவி உலகம் போகம் என்பவை மட்டும் போதுமா? இவற்றையெல்லாம் விளையாட்டுக்காகவா கொடுக்கின்றுன் இறைவன். இப் படைப்பினுக்கு ஒரு காரணம் வேண்டும். கேவல நிலையில் பிறவிக்கு வருவதற்கு முன்னுள்ள நிலையில் அறிவற்றிருந்த சீவர்கள் அறிவு பெற்றுச் சுத்த நிலை (முத்தி நிலை) எய்த வேண்டும் என்பதே இறைவனது திருவுள்ளம். அதனுல் அவன் அன்பு அறிவு அடக்கம் ஆகிய நற்பண்புகளைச் சீவர்களுக்கு அருளி, இன்பம் பெற்று வாழச் செய்கிறுன்.

''அன்பும் அறிவும் அடக்கமுமாய் நிற்கும்
இன்பமும் இன்பக் கலவியு மாய்நிற்கும்''



## பிராண இயக்கம்

இவற்றுக்கும் மேலாக நம் உடம்பினுள்ள கண் முதலிய ஒன்பது துவாரங்களின் வழியே மூச்சு வெளியே சென்று விடாதபடி, குறிப்பிட்ட காலம் வரை வாழ வகை செய்துள்ளதை நினைக்கும் போது அவன் புரியும் உபகாரம் நன்கு விளங்குகிறது. மூச்சு வெளியே போவதும், உள்ளே வருவதும் நம் செயலால் அல்ல; நம் செயலாயின் தூங்கும்போது மூச்சு ஓடிக் கொண்டிருக்கிறதே! ஆதலின் அவ்வோட்டம் இறைவனுல் உயிர்களின் பொருட்டு அமைக்கப்பட்ட ஒன்றுகும். அதனுலே ஒரு பெரியவர் இத்துணைத் துவாரங்களை யுடைய உடம்பில், பிராணன் நிலைத்திருப்பதுதான் ஆச்சரியமே தவிர வெளியே ஓடி விடுவது ஆச்சரியமல்ல என்றுர். இறைவன், பிராணன் கால எல்லைக்குள் வெளியே போகாதவாறு 'ஊனுகி உயிராகி அதனுள் நின்ற உணர்வாகி'க் கலந்து இருந்து காக்கின்றுன்.

## முத்தியிலும் காத்தல்

இனி, இறைவன் சகல நிலையில் இங்ஙனம் தனு கரண புவன போகங்களை அருளி, முத்திக்கு ஏதுவாய் நற்பண்புகளையும் கொடுத்துச் சீவர்களைக் காப்பதோடு முத்தி நிலையிலும் காத்து உதவுகின்றுன். அவனைத் தவிரப் பல்லுயிரையும் தாங்கும் தன்மை ஒருவர்க்கும் இல்லை. திருமால் காத்தற் கடவுள் என்று உலகவர் கூறுவர். திருமாலாய் இருந்து காத்தலைச் செய்பவனும் சிவனே யாவான் என்பது கருத்து. 'தான்ஒரு காலம் தண்மாயனும் ஆமே' என்பது திருமந்திரம்.

இறைவன் படைத்தல் காத்தலோடு சங்காரமும் செய்கின்றுன். சங்காரம் செய்வது சீவர்கள் ஒய்வு பெறும் பொருட்டேயாகும். படைப்பன யாவும் அழிவில்லாமல் இருப்பின் என்ன ஆகும்? உலகில் வாழ இடம் இருக்குமா? இருக்காது. ஆதலால் இறைவன் பரம கருணையோடு செய்யும் செயல், அழித்தல் எனப்படும் சங்காரம் ஆகும். இது மூன்று வகைப்படும்.

### நித்த சங்காரம்

சாதாரணமாக எட்டு மணி நேரத்துக்கு மேல் அலுவலகத்திலோ பிறஇடங்களிலோ அலுவலர்கள் வேலை செய்வதை இன்று நாம் காண்கிறோம். ஒரு நாளைக்கு இத்துணை மணி நேரம்தான் வேலை செய்ய வேண்டும் என்பது நிர்ணயிக்கப்பட்டுள்ளது. அதற்கு மேல் வேலை செய்பவர்க்கு ஓய்வு தர வேண்டும். அப்பொழுதுதான் வேலை திறமாக இயங்கும். அதுபோல இறைவன் சீவர்களுக்கு நாள்தோறும் ஓய்வு தரும் பொருட்டு உறக்கத்தைக் கொடுக்கிறான். உறக்கமே சீவர்களுக்கு ஓய்வைக்கொடுத்து இன்பம் தருவதாகும். இவ்வுறக்கத்தினை 'நித்த சங்காரம்' என்பார் திருமூலர்.

### இடைநிலைச் சங்காரம்

இரண்டாவதாக உள்ளது சீவராசிகளுக்கு மரணத்தால் உண்டாகும் சங்காரம். இது நித்த சங்காரத்துக்கும், சர்வ சங்காரத்துக்கும் இடைப்பட்ட ஒன்றாகும். சீவராசிகள் ஒவ்வொரு பிறப்பிலும் தோன்றி நின்று ஒடுங்குவதே இடைப்பட்ட சங்காரமாகும். இதுவும் ஒவ்வோர் சீவனும் ஓய்வு பெறுவதற்காகச் செய்யும் சங்காரமாகும்.

### கற்ப சங்காரம்

மூன்றாவதாக ஒவ்வொரு கற்ப முடிவிலும் செய்யும் சங்காரம் கற்பாந்த சங்காரமாகும். இதனையே பிரளயம் என்று கூறுவர். அண்ட சராசரங்கள் எல்லாம் வெந்து சாம்பலாகும் என்பர். 'சென்று சென்று அணுவாய்த் தேய்ந்து தேய்ந்தொன்றாந் திருப்பெருந் துறையுறை சிவனே'' என்று மாணிக்கவாசகர் விளக்குகிறார். அப்பொழுது சகல சீவராசிகளும் உலையிலிட்ட அரிசி கொதிப்பது போலக் கொதித்து அழியும். இவ்வாறு சங்காரங்கள் மூன்றையும் ''இலயங்கள் மூன்று'' என்பார் திருமூலர். (422). மகா சங்காரத்தில் பொருட் பிரபஞ்சமாக விரிந்த விந்து சத்தி, சொற் பிரபஞ்சமாகவுள்ள நாதசத்தியில் ஒடுங்கி, நாதம் சத்தியில் ஒடுங்கிச், சத்தி சிவத்தில் ஒடுங்குமாம் (424).

### சங்காரத்தில் சிவனருள் தோய்வு

சங்காரத்தில் சிவனருள் சீவர் மாட்டுத் தோய்கின்ற நிலைகளை நான்காகப் பகுத்து விளக்குகிறார். நாள்தோறும் இயல்பாக உறக்கத்தில் பொருந்தியிருக்கும் நிலை நித்த சங்காரம். அப்போது சீவன் செயலினின்றும் நீங்கி இளைப்பாறும். அடுத்து வைத்த சங்காரம் என்று ஒன்று கூறுவார். அஃதாவது பிறவி முடிந்து மீண்டும் பிறவிக்கு வருவதற்கு வைத்த பழமையான ஏற்பாடு. மூன்றாவதாகச் சுத்த சங்காரத்தைப் பற்றிக் கூறுகிறார். சுத்த சங்காரத்தின்போது சீவர்கள் தத்துவங்களினின்றும் நீங்கியும், சிவனருள் தோயாத நிலை. இந்நிலையில் இருக்கும் சீவர் மீண்டும் பிறப்பார். நான்காவதாக ஆசிரியர் சிறப்பித்துக் கூறுவது 'உய்த்த சங்காரம்'. இந்நிலையில் சீவர்கள் தத்துவங்களினின்றும் நீங்கிச் சிவனருளில் தோய்ந்திருப்பர். இதுவே சாயுச்சிய நிலை. இந் நிலை எய்திய சீவர்கள் மீண்டும் வரமாட்டார். இவ்வாறு நான்குவகையாகச் சங்காரத்தை விளக்கிச் சிவனருள் தோய்கின்ற முறையைக் காட்டுகிறார்.

''நித்த சங்காரமும் நீடிளைப் பாற்றலின்
வைத்த சங்காரமும் மன்னும் அனாதியிற்
சுத்தசங் காரமும் தோயாப் பரன்அருள்
உய்த்தசங் காரமும் நாலாம் உதிக்கிலே''

(428)

சுத்த சங்காரத்தினால் சீவன் கருவி கரணங்கள் நீங்கித் தூய்மை பெறும். ஆனால் சிவனோடு பொருந்தியிருக்கும் பழமையான பாழாக அது இராது. இச் சீவன் மீண்டும் பிரமன் திருமால் ஆகியோர் ஆளுகைக்கு உட்பட்டுப் பிறப்புக்கு வரும். ஆனால் உய்த்த சங்காரமே பழமையான பாழாகிய சாயுச்சிய பதத்தைக் கொடுக்க வல்லதாம். இந் நிலையைத்தான் மாணிக்கவாசகர், ''மீண்டு வாரா வழியருள் புரிபவன்'' என்று கீர்த்தித் திருவகவலில் கூறுகிறார். இதனால் சிவபெருமானே சங்காரத்தைச் செய்பவன் என்பதும், இச் சங்காரமும் அருட் செயல் என்பதும் விளங்கும்.

### திரோபவம் அல்லது மறைத்தல்

இறைவன் படைத்தல் காத்தல் அழித்தல் மறைத்தல் அருளல் ஆகிய ஐந்தொழில்கள் புரிகின்றான் என்று நூல்கள் கூறும்.

அவ் ஐந்தனுள் படைத்தல், காத்தல், அழித்தல் ஆகிய முத்தொழில்களும் உடல் களுக்கும், புவனங்களுக்கும் ஆகும். சீவர் களை இறைவன் படைப்பதில்லை என்பது சித்தாந்தம். ஆனால் மறைத்தல் அருளல் ஆகிய இரு தொழில்களும் சீவர்களிடத்தில் ஆகும். இறைவன் மறைப்புத் தொழிலைச் சீவரது உள்ளத்தில் இருந்து சீவரது அறி வுக்குத் தன்னைப் புலப்படுத்தாமல் உலகை நோக்கி நிற்கச் செய்து கொண்டிருக்கிறான். அவன் இமைப்பொழுதும் நெஞ்சத்தை விட்டு நீங்குவது இல்லை. ''இமைப்பொழு தும் என் நெஞ்சில் நீங்காதான் தாள் வாழ்க'' என்பார் மாணிக்க வாசகர். அவ் வாறு உள்ளத்தைவிட்டு ஓரடியும் நீங்காது சோதி மயமாக விளங்கும் பெருமானைச் சீவர்கள் அறியாமல் இருப்பது தான் ஆச்ச ரியம். இதுவே திரோபவமாகும்.

''உள்ளத் தொருவனை உள்ளூறு சோதியை
உள்ளம்விட் டோரடி நீங்கா ஒருவனை
உள்ளமுந் தானும் உடனே இருக்கினும்
உள்ளம் அவனை உருவறி யாதே'' (451)

திருஞான சம்பந்தர் இறைவனை, ''உள் ளம் கவர் கள்வன்'' என்கிறார். இறை வனது செயலைச் சீவர்கள் அறியாததோடு மட்டும் அல்ல ; பிரமன் திருமால் உருத்தி ரன் ஆகிய மும்மூர்த்திகளும் அறியார். ஆதலால் இச் சீவர்களுக்கு உடல் வந்த வாறும், உயிர் வைத்தவாறும் அவர்கள் அறியமாட்டாதவராயினர். (433). இறை வன் கண்ணினுள் ஒளியாக விளங்குகிறான். அவன் ஆணோ, பெண்ணோ அலியோ அல்ல. அவன் கண்டத்துக்கு மேல் அண்ணாக்கின் உள்ளே சோதியாக விளங்குபவன். அப் பெருமானை உணர்ந்து சிரசின் மேலுள்ள சகஸ்ர தளத்துக்குச் செல்லும் வழியைச் சீவர்கள் அறிய வேண்டும். அவ்வாறு அறியவில்லையே என்று ஆசிரியர் இரங்கு கிறார்.

''காண்கின்ற கண்ணொளி காதல்செய் ஈசனை
ஆண் பெண் அலியுரு வாய்நின்ற ஆதியை
ஊண்படு நாவுடை நெஞ்சம் உணர்ந்திட்டுச்
சேண்படு பொய்கைச் செயலணை யாரே'' (434)

கேவல நிலையில் அறியாமையில் இருந்து சீவர்களை மாயையினிடமாக வைத்துக் கன்மத்தை ஊட்டிக் கழிக்கச் செய்து அறிவு கொஞ்சி இராப்பகலற்ற இடத்தே செல்லும்படியாக இறைவன் சீவர்கள் அறியாவண்ணம் செய்கின்றான்.

அவ்வாறு மறைப்பினைச் செய்யும்போது அவன் மகேசுவரன் எனப் பெறுகின்றான். இவனே சீவர்கள் பக்குவம் பெறும்வரை பிரமன் திருமால் உருத்திரனாக இருந்து படைப்பாதி முத்தொழில்களையும் செய்கி றான். அஃதாவது, மகேசுவரனே அவ ருக்குக் கீழேயுள்ள முக் கடவுளரையும் அதிட்டித்து நின்று முச்செயலைச் செய்கி றான் என்பதாம். முன்னே சதாசிவ மூர்த் தியே ஏனைய நான்கு கடவுளரையும் அதிட் டித்து நின்று செய்கின்றார் என்று சொன் னார். அவரவர் எல்லைக்குட்பட்ட புவனங் களை அவரவரே படைத்தளித்து அழிக்கும் வல்லமை பெற்றவர் என்பது பொருள். இக் கடவுளர் யாவர்க்கும் மேலாக உள் ளது சிவசத்தி என்பதை உணர்ந்துகொள்க.

''நின்றது தானாய் நிறைந்த மகேசுவரன்
சென்றங் கியங்கி யரன்திரு மாலவன்
நன்றது செய்யும் மலர்மிசை மேலயன்
என்றிவ ராகி இசைந்திருந் தானே'' (438)

இனிச்சீவர்கள் அறியாவண்ணம் செய்யும் மறைப்புச் செயலை ஓர் உவமை வாயிலாக விளக்குகிறார். உடல் உறுப்புக்களுள் மிகச் சிறந்தது கண் ஆகும். ''கண்ணிற் சிறந்த உறுப்பில்லை'' என்பர் பெரியோர். ஏன்? கண் புறத்தேயுள்ள பொருள்களைச் சென்று பற்றுந் தன்மையது. ஆனால் காது முதலிய உறுப்புக்கள் தம்மிடம் வந்த புலன்களை மட்டும் பற்றுந் தன்மையன. அதனால் கண் ஏனை உறுப்புக்களைக் காட்டி லும் சிறப்புடையதாகும். எனினும், இச் சிறப்புடைய கண்ணும் புறத்தேயுள்ள பொருள்களைச் சென்று பற்றுமே ஒழியத் தன்னையும் தன்னுள் மறைந்திருக்கும் சிவனை யும் காணமாட்டாது. இவ்வண்ணமே சீவனும் புறத்தேயுள்ள பொருளை அறியுமே ஒழியத் தன்னையும் தன் தலைவனையும் அறியமாட்டாது.

''கண்ணொன்று தான்பல காணுந் தனைக்காணா
அண்ணலும் இவ்வண்ண மாகிநின் றானே''

சீவர்கள் இம் மறைப்பினைப் போக்கிக் கொள்ளத் திருவடியாகிய கரையை நாடி அறியாமையாகிய ஆற்றைக் கடக்க வேண் டும். அவ்வாறு கடப்பதற்கு அருள் செய்ப வன் சிவனேயாவான்.

## அநுக்கிரகம் அல்லது அருளல்


மறைப்பினைச் செய்து, சீவர்களுக்கு உலக போகங்களைத் துய்ப்பிக்கும்படி செய்தபின், பெருமான் அநுக்கிரகத்தைச் செய்து தன் திருவடிகளில் சேர்த்துக் கொள்கிறான். இதுவே அவன் சீவர்கள் மாட்டுச் செய்யும் அநுக்கிரகச் செயலாம். சீவர்களது வினைக்கேற்ப ஐம்பூத பரிணாமமாகிய இவ்வுடம்புள் உயிரினைப் புணர்த்திப் பிராரத்த கன்ம (நிகழ்வினை) முடிவில் உடம்பினின்றும் உயிரைப் பிரிக்கிறான். மேலும் சீவன் மும்மலங்களின் கட்டு நீங்கிப் பிறவிப் பெருங்கடலைக் கலக்குமாயின் ஆதிப் படைப்பில் உண்டான புரியட்டக சரீரமும் நீங்கும். இதனையும் கண்ணுதற் பெருமான் உணர்ந்து சீவர்களுக்கு அருள் புரிவான் (441).

இவ்வாறு சாயுச்சிய பதம் பெறச் சீவன் உலகில் வாழும்போது இடைவிடாது ஞான சாதனையில் விளங்கும் நாதத்தை விரும்பியிருக்க வேண்டும். அப்போது மூலாதாரத்திலுள்ள அக்கினிகலை சுழுமுனை நாடி வழியாகச் சோம சூரியாக்கினியாகிய மும் மண்டலங்களையும் கடந்து மேல் நோக்கிச் சென்று சகஸ்ரதளத்தை (தலையின் உச்சி) அடையுமாயின் நாதம் உண்டாகும். அவ்வாறு உண்டாகும் நாதத்தில் இலயித்திருந்தால் இறைவன் அருள் பெறலாம் எனத் திருமந்திர நூல் கூறுகின்றது.

''உச்சியில் ஓங்கி ஒளிதிகழ் நாதத்தை
நச்சியே இன்பங்கொள் வார்க்கு நமன்இல்லை
விச்சும் விரிசுடர் மூன்றும் உலகுக்குத்
தச்சும் அவனே சமைக்கவல் லானே''

—திருமூலர்.

இறைவன் ஒருவன் உண்டு என்பதும், அவனே உலகினை ஓர் ஒழுங்குபடி நடத்துகிறான் என்றும், அவன் உயிர்கள்மாட்டு நிகழ்த்தும் அறச் செயல்களும், மறச்செயல்களும் அவை உய்தி பெறுவதற்கேயாம் என்பதும் பெற்றாம்.



சேலம் அருள்மிகு சுகவனேசுவரசுவாமி திருக்கோயிலின் பொறுப்பில் நிகழ்ந்த இலவசத் திருமணவிழாவில், திருமணம் செய்துகொண்ட திருமண மக்கள். (4-3-74)

# திருமங்கை மன்னன்

திரு டி. கே. இராமானுசதாச நாயுடு அவர்கள்,

தலைவர், நம்பிள்ளை சபை, சென்னை-5.

வாழிபரகாலன் வாழிகலிகன்றி
வாழிகுறையலூர் வாழ்வேந்தன்
—வாழியரோ
மாயோனை வாள்வலியால் மந்திரங்கொள்
மங்கையர்கோன்
தூயோன் சுடர்மான வேல்.

ஆழ்வார்கள் பன்னிருவருள் ஒருவரான திருமங்கையாழ்வார் கங்கையிற் புனிதமாய காவிரி நதி பாயும் சோழ மண்டலம் —திருமங்கை நாடு—திருவாலித் திருநகரிக்கு அருகிலுள்ள திருக்குறையலூர் என்னும் ஊரில் கள்ளர் குடியில், கலியுகம் முந்நூற்றுத் தொண்ணூற்றெட்டாவதான நள வருஷம் கார்த்திகை மாதம் கார்த்திகை நட்சத்திரத்தில் பூர்ணிமை பொருந்திய வியாழக் கிழமையில் சார்ங்கமென்கிற கார்முகத்தின் அம்சமாய் அவதரித்தார். இவர் நீலநிறமுடையவராய் இருந்தமையால் இவருக்கு 'நீலன்' என்று பெயரிட்டார் இவரது தந்தை.

இவர் இளமையிலேயே ஆயுத வித்தையில் தேர்ச்சி பெற்றுத் தமது தந்தையைப் போல் சோழ அரசனிடத்தில் சேனதிபதி உத்தியோகத்தில் அமர்ந்து, கடும் போரில் தமது பராக்கிரமம், வல்லமை இவற்ருல் 'பரகாலன்' என்று பெயர் பெற்று வெற்றி வாகை சூடினர். அதனுல் சோழ அரசன் இவரை அந் நாட்டின் குறுநில மன்னனுக்கினன். இம் மங்கை நாட்டுக் கோமான், தன் அரசாங்கத்தைக் குறைவற நடத்திப் புகழ் பெற்று இள மங்கையர் கலவியில் மிகவும் பிரியம் கொண்டவராய் விளங்கி வந்தார்.

இப்படியிருக்கையில், அந் நாட்டில் திருவெள்ளக் குளம் என்ற திருப்பதியிலுள்ள தாமரைப் பொய்கையில் பல தேவமாதர்கள் வந்து நீராடுங்கால், ஒரு தேவ மாது குமுதமலர் கொய்து கொண்டிருக்கையில் மற்ற தேவ மாதர்கள் அவளைத் தனியே விட்டுவிட்டு ஏகினர். இவள் மானிட வடிவம் பெற்றுத் தனித்து நிற்கையில் அங்கு நீராட வந்த ஒரு வைணவ வைத்தியன் இவளைக் கண்டு விசாரிக்க, தன்னுடன் வந்த தேவ மாதர்கள் தன்னைவிட்டுவிட்டுச் சென்றமையால் தனித்து நிற்கும்படி நேரிட்டு விட்டது ; தன்னைப் பாதுகாத்து அருள வேண்டுமென்று வேண்ட, அம் மருத்துவனும் மகிழ்ச்சியோடு அவளைத் தனது மனைக்கு அழைத்துப் போய் மனையாள் வசம் விட்டனன்; தங்களுக்கு மக்கட்பேறு இல்லாத குறையை இறைவன்தீர்த்து வைத்தான் என்று அவர்கள் இவளை அன்போடு வளர்த்து வந்தனர். இவள் குமுத மலர் கொய்து நின்ற காரணத்தால், இக் கன்னிகையைக் 'குமுதவல்லி' என்றுஅழைத்தனர். இவளுக்குத் திருமணப் பருவம் வந்ததும் இவளுக்கு ஏற்ற கணவன் யாவனே என்று இவர்கள் மனத்திற்குள் கவலைப்படலாயினர்.

இப்படியிருக்க, நீலனுடைய ஆட்கள் இவளுடைய ரூப லாவண்யத்தையும் குணதிசயத்தையும் நீலனிடம் தெரிவிக்க, அவர் இவளைக் காண்பதற்குத் திருவெள்ளக் குளத்திலுள்ள அவ் வைணவ வைத்தியருடைய மாளிகைக்கு வந்து அவரோடு வார்த்தையாடிக் கொண்டிருக்கையில், குமுதவல்லி அவர் கண்ணில் பட, அவர் இவளைக் கண்டவுடன் காதல் விஞ்சி, இவள் வரலாற்றை இவள் தந்தையாலே அறிந்ததும், இவளை எனக்குத் திருமணம் செய்து தர வேண்டுமென்று வினயத்துடன் கேட்க, அவரும் அதற்கு உடன்படுமளவில், குமுதவல்லி குறுக்கிட்டு, ''சங்க சக்கர

முத்திரையும், பன்னிரண்டு திருமண்ணும் தரித்த வைணவருக்கே வாழ்க்கைப்படுவேன்'' என்று கூறினாள்.

அதைக் கேட்டதும் ஆலி நாடர் அதிவிரைவாகத் திருநறையூர் சென்று, அங்குக் கோயில் கொண்டிருக்கும் 'நம்பி' என்ற எம்பெருமானதுதிருமுன்பே நின்றுபிரார்த்திக்க, அப் பெருமானால் 'சங்கு சக்கர முத்திரைகளைப் பெற்று, பன்னிரண்டு திருமண் காப்புகளைத் தரித்தவராய் வந்து சேர, மீண்டும் அந் நங்கை ''நீர் ஓராண்டளவும் தினமும் ஆயிரத்தெட்டு வைணவர்களுக்கு அமுது செய்வித்து, அவர்களுடைய திருவடித் தீர்த்தத்தையும், அவர்கள் உண்ட சேடத்தையும் உட்கொண்டாலன்றி, உம்மை நான் கொழுநனாக ஏற்றுக்கொள்ளேன்'' என்று கூற, அவள்பால் கொண்ட வேட்கையினால் அவ்விரதத்திற்கும் உட்பட்டு, அப்படியே செய்வதாக வாக்குக் கொடுத்து இவளை மணந்துகொண்டார்.

அவர் அப்படியே பாகவதாராதனம் செய்து கொண்டு வரலாயினர். இதனால் அவர் அரசனுக்குச் செலுத்த வேண்டிய பகுதிப் பணம் முழுவதும் செலவழிந்து போனதால், அரசன் மிகவும் கோபித்துத் திரைப் பணம் வாங்கி வரத் தன் ஏவலாளரை அனுப்பினான். இவர் கொடாமையால் இவரைப் பிடித்து ஒரு தேவாலயத்தில் சிறை வைக்க, இவர் உணவு இல்லாமல் மூன்று நாட்கள் பட்டினி கிடக்க, அதிபதியாகிய பேரருளாளப் பெருமாள் இவரது கனவிலே தோன்றி, ''உனக்கு வேண்டிய பொருள் தருகிறோம் வா'' என்று அழைத்து, வேகவதி நதிக் கரையில் பொருளுள்ள இடத்தையும் குறிப்பிட, இவரும் சென்று அப் பொருளைக் கண்டு எடுத்துக் கொண்டு வந்து, அரசனுக்குச் சேர வேண்டியதைச் செலுத்தி மிகுந்த பொருளைப் பாகவதாராதனத்துக்கு வைத்துக் கொண்டார்.


பிறகு, பரகாலன் தன் கைவசமிருந்த பொருளெல்லாம் ததியாராதனம் நடத்திச் செலவழிந்து விட்டபடியால், வழிப்பறி நடத்தியாவது பொருளீட்டிக் கைங்கர்யத்தை முட்டின்றி நிறைவேற்ற வேண்டித் துணிந்து, தமது கையாட்களான நீர்மேல் நடப்பான், நிழலிலொதுங்குவான், தாளூதுவான், தோலாவழக்கன், என்ற நால்வரைத் துணைக் கொண்டு வழிச் செல்வோரைச் சூறையாடிப் பொருள் கொணர்ந்து திருமாலடியார்களைப் பூசித்து வந்தார்.

இவர் இப்படிக் கொள்ளையடிப்பதானது வைணவர்களை வழிபடுவதற்கே யாதலால், எம் பெருமான், இவர் செயலை நல்வினையாகக் கொண்டு, இவரை விசேட அருள் பெறச் செயத் திருவுள்ளம் கொண்டு, தாமே தம் தேவியோடு பார்ப்பன வடிவங் கொண்டு பல அணிகலன்களைப் பூண்டு திருமணக் கோலத்தோடு இவரிருக்கிற வழியாக எழுந்தருளினார். அப்பொழுது திருமணங் கொல்லையில் திருவரச மரத்தின் கீழ்ப் பதுங்கியிருந்த குமுத வல்லி மணாளர் கண்டு களித்து, ஆயுத பாணியாய்ப் பரிவாரத்துடன் வந்து வளைத்து, வத்திராபரணங்களை எல்லாம் பறிக்கையில், மணமகள் கால் விரலில் அணிந்துள்ள மோதிரத்தைக் கழற்ற முடியாமையால், அதனையும் விடாமல் பற்களினாலே கடித்து வாங்க, அதன் காரணமாகவே எம்பெருமான் இவருக்குக் 'கலியன்' என்று பெயர் கூறியருளினான்.

பின் இவர் கைப்பற்றிய பொருள்களையெல்லாம் சுமையாகக் கட்டி வைத்துச் சுமையை எடுத்துப் பார்க்க, அது இடம் விட்டுப் பெயராமலும் அசையாமலும் இருக்க, 'ஆலிநாடர்' அவ் அந்தணனை நோக்கி, 'நீ என்ன மந்திரம் பண்ணினாய்?' என்றுவாட்படையைக் காட்டிஅச்சுறுத்திக் கேட்க, எம்பெருமானும், ''அம் மந்திரத்தினை உமக்குச் சொல்லுகின்றோம் அருகில் வாரும்'' என அழைத்து, பிறவித் துயர் அறுத்துப் பேரின்பம் அளிக்கும்படியான எட்டெழுத்து மந்திரத்தை அவர் செவியிலே உபதேசித்தருளி, உடனே கருடன் மேல் பொன்மலை மீது மின்னுடன் விளங்கும் கார்முகில் போல் கருணை வடிவாகத் திருமகளோடு சேவை தந்தருளினான்.

அங்ஙனம் மந்திர உபதேசம் பெற்றதினாலும், அவருடைய திவ்விய ரூபதரிசனம் பெற்றதினாலும், காலாழி வாங்கியபோது எம்பெருமானின் பாதார விந்தத்தில் வாய் வைத்ததினாலும், கலியன் அஞ்ஞானம் ஒழிந்து, தத்துவ ஞானம் உதிக்கப்பெற்று, இறைவனைப் பரிபூர்ணாநுபவம் பண்ணி அவ்

ஆனந்த பூர்வமாக வெளியிடுமாறு ஆசு, மதுரம், சித்திரம், வித்தாரம், என்னும் நால்வகைக் கவிகளையும் பாட வல்ல பாண் டித்தியமுடையவராய், 'வாடினேன் வாடி வருந்தினேன் மனத்தால்'' என்று தொடங்கிப் பாடலுற்று, ''குலந்தரும் செல்வம் தந்திடும் . .நாராயணவென்னும் நாமம்'' என்று தமது அனுபவத்தை வெளி யிட்டு, வடமொழியிலே மறைகள் நான்குக் கும் ஆறு அங்கங்கள் அமைந்திருப்பது போல, அவ் வேதங்களின் உட்பொருளால் நம்மாழ்வார் அருளிச் செய்த நான்கு திவ் வியப் பிரபந்தங்களுக்கும், தமது பிரபந்தங் கள் அங்கங்களாக அமையும்படி 'பெரிய திருமொழி, திருக்குறுந்தாண்டகம், திரு நெடுந்தாண்டகம், திருவெழு கூற்றிருக்கை சிறிய திருமடல், பெரிய திருமடல்'' என்று ஆறு திவ்விய நூல்களைத் திருவாய் மலர்ந் தருளித் திருமங்கையாழ்வார் என்று திரு நாமம் பெற்றார். *



இராமேசுவரம் கோயிலில் தமிழவேள் திரு சர். பி. டி. ராஜன் அவர்கள், இராஜா பாஸ்கர சேதுபதி அவர்களின் சிலையைத் திறந்துவைத்தல் (11—2—74).

# திருக்கண்ணமங்கை ஆண்டான்

முன்னுரை :

திருக்கண்ணமங்கை என்பது, சோழ நாட்டிலுள்ள திருமால் தலங்களுள் மிகவும் சிறப்புடையதொன்று. இந்தத் திவ்விய தேசம், திருவாரூர் இருப்புப் பாதை நிலையத்திலிருந்து வடமேற்கே, நான்கு கல் தொலைவில் உள்ளது. சுவாமியின் பெயர் பக்தவத்சலப் பெருமாள், பத்தர் ஆவிப் பெருமாள். தாயார், அபிடேகவல்லித் தாயார். விமானம், உத்பலாவதக விமானம். தீர்த்தம், தர்சபுட்கரிணி. கிழக்கே திருமுக மண்டலம். நின்ற திருக்கோலம். வருணனுக்கும் உரோமச முனிவருக்கும் அருள் புரிந்த தலம். முனிவர்கள் இங்குத் தேனீக்களாக இருந்து பெருமாளை ஆராதிக்கின்றனர் என்பது ஐதிகம். இதற்குச் சான்ருக இங்கு ஒரு பெருந் தேன் கூடு இன்றும் உள்ளது. திருமங்கையாழ்வார் இத் தலத்தைக் குறித்து 14 பாசுரங்கள் பாடி மங்களாசாசனம் செய்துள்ளார். கண்ணபிரானின் ஐம்பெரும் தலங்கள் (பஞ்ச கிருஷ்ண க்ஷேத்திரம்) எனப்படும் திருக்கண்ணபுரம், திருக்கண்ணங்குடி, திருக்கண்ணமங்கை, திருக்கண்ணன் கவித்தலம், திருக்கோவலூர் என்பனவற்றுள், திருக்கண்ணமங்கையும் ஒரு சிறந்த தலமாக விளங்கி வருகின்றது.

## திருக்கண்ணமங்கை யாண்டான் :

இத்தகைய சிறப்பு மிக்க திருக்கண்ணமங்கையில், திவ்வியப் பிரபந்தம் நாலாயிரத்தையும் தேடித் தொகுத்து உலகிற் பரப்பியருளியவரும், அவற்றைத் தமிழ் வேதம் என வகுத்துக் கொடுத்தவரும், 'தமிழ் மறை இன்னிசை தந்த வள்ளல்' என்று வைணவப் பெருமக்களால் போற்றப்பெறுபவரும், வைணவ சமய ஆசாரியர்களில் முதல்வராக விளங்குபவருமாகிய நாதமுனிகள் என்னும் வைணவப் பெருஞ் சான்ருேருடைய, சகோதரியின் புதல்வராக இலட்சுமிநாத தாதாச்சாரியார் என்பவர் ஒருவர், வாழ்ந்து வந்தார். அவர் செல்வவளம் நிறைந்தவராக, திருக்கண்ணமங்கைத் தலத்தின் முதல்வராகி, மிக்க பெருஞ் சிறப்புடன் விளங்கி வந்தார். அதனுல் அவருக்குத் திருக்கண்ணமங்கையாண்டான் என்றே, ஒரு சிறப்புப் பெயர் வழங்கி வருவதாயிற்று.

திருக்கண்ணமங்கையாண்டான், தனது தாய் மாமனுகிய அருட்டிரு நாதமுனிகளைப் போலவே, பலவகைக் கல்வி கேள்விகளில் தேர்ச்சி பெற்றுத் திகழ்ந்தார். நாதமுனிகளின் திருவடிகளை இடையருது வழுத்தி, ஞானபக்தி வைராக்கியங்களில் சிறந்தோங்கினுர். அந்தத் தலத்து பக்தவத்சலப் பெருமாளுக்குத் துளசி மாலைத் திருத்தொண்டு செய்து வந்தார்.

## வேடர்களும், நாய்களும் :

இங்ஙனம் திருக்கண்ணமங்கையாண்டான் இருந்துவர, ஒரு நாள் இரண்டு வேடர்கள், வாள் ஏந்தியவர்களாய்த் தாங்கள் வளர்த்துக் கொண்டு வந்த வேட்டை நாய்களுடன், ஏதோ வேலையாக வேற்றூருக்குச் செல்லும் வழியில், திருக்கண்ணமங்கைப் பெருமாள் கோயிலைக் கண்டு வியந்து மகிழ்ந்தனர். அவர்கள் அக்கோயிலுக்குக்குள் சென்று, பெருமாளை வணங்க விரும்பினுர்கள். அவ்விரு வேடர்களும் தாங்கள் அணிந்திருந்த தோல் மிதியடிகளைக் கோயிலுக்கு வெளியே கழற்றி, தம் நாய்களை அவற்றிற்குக் காவல் வைத்து விட்டுச் சென்றனர். இருவரும் கோயிலுக்கு உள்ளேசென்று பெருமாளை வணங்கிச் சிறிது நேரம் கழித்துத் திரும்பினர். வேடர்கள் இருவரும் கோயிலுக்குச் சென்றிருந்த வேளையில், ஒரு நாய் மற்ருெரு நாயின் காவலிலிருந்த தோற் செருப்பைக் கடித்தது. அது கண்ட அந் நாய் சினந்து, மற்ருெரு நாயின் காவலிலிருந்த தோலின்

செருப்பைக் கடிக்க முற்பட்டது. அதனுல் இரு நாய்களுக்குள்ளும் சீற்றமும் பூசலும் ஏற்பட்டன. அதனுல் இரு நாய்களும் ஒன்றையொன்று கடுமையாகக் கடித்துக் கொண்டு, சண்டை செய்ய முற்பட்டன. அச் சண்டையில் ஒரு நாய் இறந்துபட்டது. நாயின் பூசல் ஒலி கேட்டு, வேடர்கள் கோயில் வழிபாட்டை முடித்துக்கொண்டு விரைவில் வெளிவந்தனர். தன்னுடைய நாய் இறந்து கிடந்ததை, அவ் வேடர்களில் ஒருவன் கண்டான். மிகுந்த கோபம் கொண்டான். தன் நாயைக் கடித்துக் கொன்ற நாயை அடித்துக் கொன்றுன். அதன் சொந்தக் காரனுகிய வேடன் மீதும் மிகுந்த சீற்றம் கொண்டான். • இருவருக்கும் பேச்சு முற்றிக் கைகலப்பும், தீவிரமான சண்டையும் ஏற்பட்டன. இருவருமே ஒருவரையொருவர் சினந்து, வாட்போர் செய்து, குத்திக் கொண்டு மாண்டொழிந்தனர்.

## நிகழ்ச்சியும் நினைவும் :

இந் நிகழ்ச்சியையும் காட்சியையும் காணப் பெருங் கூட்டம் கூடியது. அப்போது அவ்வழியே பல்லக்கில் ஏறி வந்த திருக்கண்ணமங்கையாண்டான், மக்கள் பெருந் திரளாகக் கூடி நிற்பதைக் கண்டு அருகிருந்தவர்களைக் காரணம் கேட்டார். அருகிருந்த மக்கள் சிலர், நாய்களின் சண்டை காரணமாக வேடர்கள் தங்களுக்குள் தாம் சண்டையிட்டுக் கொண்டு மடிந்தொழிந்த செய்தியைக் கூறினர். அது கேட்ட திருக்கண்ணமங்கையாண்டான் மிகவும் வியப்பு அடைந்தார். நாய்களின் சண்டை முற்றி, நாய்கள் செத்ததுமன்றி, அவற்றின் உரிமையாளர்களாகிய வேடர்களும், தத்தம் நாய்களுக்காகப் பரிந்து ஒருவரை யொருவர் வாளால் வெட்டிக் கொண்டு இறந்தொழிந்தனரே என்று, அவர் பெரிதும் பரிவு கொண்டார். அவர் தம் திருவுள்ளம் மிகவும் உருகியது. அவர் நீள நினைந்து பெரும் சிந்தனையில் ஆழ்ந்தார். "நாய்கள் தங்களுடைய உரிமையாளர்களின் சேவையில் பெரிதும் ஈடுபட்டன. தம்முடைய உரிமையாளர்களின் தோற் செருப்பைப் பாதுகாக்கும் பொருட்டுத் தத்தம் உயிரையே துறந்தன. தம்மிடம் மிகவும் அன்பு கொண்டு தொண்டு பூண்ட நாய்களுக்காக, அவற்றின்பால் பரிவும் பாசமும் கொண்ட வேடர்கள், அவற்றின் பொருட்டுப் பழிக்குப் பழி வாங்க முயன்று தங்கள் உயிரையும் துறக்கத் துணிந்தனர். என்ன விந்தை இது" என்று வியந்தார்.

## ஆண்டானின் பிரபத்தி :

"தன்னலம் மிகுந்த சிறுமா மனிதர்களே, இங்ஙனம் தம்மை நம்பித் தம் பக்கல் அன்புடன் தொண்டு பூண்ட நாய்களைக் காப்பாற்றத் தம் உயிரையும் ஒரு பொருட்டாக மதியாது துறந்தொழிக்க முற்படுவாராயின், கருணையே வடிவமான கடவுள் தன்னையே நம்பி, தனக்கே அடிமை பூண்டு, தன்னை வழிபட்டு வரும் அடியவர்களைக் காவாது கைவிடுவானே? அருளே வடிவமான இறைவனின் பெருங் கருணை எப்படியெல்லாம் தன்னை நம்பியுள்ள அன்பிற் சிறந்த அடியவர்களைக் காப்பாற்றுதற்கு முனைந்து நலம் புரியும்!" என்று, எத்தனையோ பல சிந்தனைகள் திருக்கண்ணமங்கையாண்டானின் திருவுள்ளத்தில் முகிழ்த்து அரும்பி மலர்ந்தன. தம்மை நம்பிய நாய்களுக்காகத் தன் உயிரையும் விடுவதற்குக்கூட மனிதர்கள் முற்படுவார்களாயின், கருணையே வடிவமான பெருமானை நாம் மனமார நேசித்து, அவனையே நம்பி அன்பு பூண்டு ஒழுகி வந்தால், பெருமாள் நம்மைக் கைவிடுவானே? ஒரு போதும் கைவிடான், காப்பாற்றியே கருணை புரிவான் என்று, அவர் தம் உள்ளம் தேறித் தெளிந்தது. அவ்வளவில் அவர் தம்முடைய செல்வம் பதவி அதிகாரம் சுற்றம் அனைத்தையும் துறந்தொழிந்தார். பெருமாள் கோயில் திருமுற்றத்திலேயே, அவனுடைய திருவடிகளே தஞ்சம் என்று அடைக்கலம் புகுந்து, வேறு எதிலும் சிந்தை செலுத்தாமல், படுகாடு கிடந்து பக்தி செய்து வந்தார். அவருடைய பக்தியின் உறுதியையும், ஞானத்தின் சிறப்பையும், சரணுகதி நிலையினையும் கண்டு மகிழ்ந்த பெருமாள், அவருக்குப் பரம பதம் கொடுத்து அருள் புரிந்தார்.

## பிள்ளை லோகாசாரியர் :

இறையருளைப் பெற விரும்புபவர்கள், நம்மை நாம் காப்பாற்றிக் கொள்ளமுடியும் என்று நினைத்தலாகாது. அவ்வாறே, இறைவனுக்குத் தொண்டு செய்பவர்கள், அத் தொண்டில் நாணம் கொள்ளலாகாது. நம்மை இறைவன் காப்பாற்றியருள்வான்

என்ற உறுதியான நம்பிக்கையும், திடமான பக்தியும் கொண்டிருக்க வேண்டுமே யல்லாமல், அவைகள் இன்றி, நாமே நம்முடைய ஆற்றலால் நம்மைப் பாதுகாத்துக் கொள்வோம், என்று, நாம் நம் சுய முயற்சிகளில் ஈடுபடுதல் ஆகாது.

இவ்வுண்மையை விளக்குங்கால் ''உபாயத்துக்குப் பிராட்டியையும், திரௌபதியையும், திருக்கண்ண மங்கையாண்டானையும் போல இருக்க வேணும். பிராட்டி தனது ஆற்றலைக் கைவிட்டாள். திரௌபதி நாணத்தை விட்டாள். திருக்கண்ண மங்கையாண்டான் தன் முயற்சியை விட்டான்'' என்று பிள்ளை லோகாசாரியர் தம்முடைய நூலில் குறிப்பிட்டருள்கின்றார்.

**மணவாள மாமுனிகள்:**

இதற்கு, மணவாள மாமுனிகள், ''ஒரு வேலைக் காரனுடைய நாயினை மற்றொரு வேலைக்காரன் அடிக்க, அவன் அது பொறுமல், அடித்தவனை எதிர்த்துப் பொருது, அவனையும் கொன்று, தானும் குத்திக் கொள்வதாக இருக்கிறபடியைக் கண்டு, ஒரு சிறிய மனிதன் தன்னபிமானத்திலே ஒதுங்கினது என்னும் இவ்வளவுக்காகத் தன்னை அழியமாறினபடி கண்டால், 'பரம சேதனன் அபிமானத்திலே ஒதுங்கினால் அவன் என்படுமோ!' என்று தம்மைப் பாதுகாத்துக் கொள்ளுதற்குரிய செயல்களை முழுவதும் விட்டு, அந் நாயினைப் போன்று, தம்மை நினைத்துக் கொண்டு, அப்போதே வந்து திருக்கண்ணமங்கையில் பத்தராவிப் பெருமாள் திருவாசலில் கைப் புடையிலே புகுந்து கண் வளர்ந்தார் என்பது பிரசித்தமன்றோ!'' என உரை விளக்கம் செய்தருளியிருக்கின்றார்.

**பட்டர்:**

வைணவப் பெருஞ் சான்றோர் ஆகிய பட்டர், தம்முடைய மாணவரான நஞ்சீயர் என்பவருக்குத் திருக்கண்ணமங்கை யாண்டானின் சிறப்பை யுணர்த்தும் நிலையில், குருக்ஷேத்திரப் பூமியில் கண்ணபிரான் முன்னொருகால் திருத்தேர்த்தட்டில் ''நீ எல்லாவற்றையும் கைவிட்டு, என்னுடைய திருவடிகளையே அடைக்கலமாகக் கைப் பற்று. யான் உன்னை எல்லாப் பாவங்களிலிருந்தும் விடுவித்து, உனக்கு வீடுபேற்றைத் தருகின்றேன்'' என்று அருளிச் செய்த சரம சுலோகத்தின் பொருளியல் அனுபவம் இருக்கும் திறனைப் பக்தவத்சலப் பெருமான் திருக்கண்ணமங்கையில் பலரும் அறிந்து கொள்ளும் பொருட்டுத் திருக்கண்ணமங்கை ஆண்டான் மூலமாகக் காட்டியருளினார்'' என்று அருளிச் செய்தாராம். இவ்வரலாறும், கருத்து விளக்கமும், நாம் நம் உள்ளத்தில் என்றும் இருத்தி வைத்துப் போற்றுதற்குரியனவாகும்.

—ஆசிரியர்.

---

காவி யுடுத்தும் தாழ்சடை வைத்தும்
காடுகள் புக்கும் தடுமாறிக்
காய்கனி துய்த்தும் காயம் ஒறுத்தும்
காசினி முற்றும் திரியாதே,

சீவன் ஒடுக்கம் பூத ஒடுக்கம்
தேற உதிக்கும் பாசஞான-
தீப விளக்கம் காண எனக்குன்
சீதள பத்மம் தருவாயே;

பாவ நிறத்தின் தாருக வர்க்கம்
பாழ்பட உக்ரம் தருவீரா-
பாணிகள் கொட்டும் பேய்கள் பிதற்றும்
பாடலை மெச்சும் கதிர்வேலா;

தூவிகள் நிற்கும் சாலி வளைக்கும்
சோலை சிறக்கும் புலியூரா-
சூரர் மிகக்கொண் டாட நடிக்கும்
தோகை நடத்தும் பெருமாளே!

—அருணகிரியார்

# செப்பேடு கல்வெட்டுக்களில் சங்ககாலச் செய்திகள்

வித்துவான் திரு வே. மகாதேவன்,
திருப்பனந்தாள்

**முன்னுரை :**

சங்ககாலச் செய்திகளை இலக்கண இலக்கிய நூல்கள் பல கூறுகின்றன. செப்பேடு கல்வெட்டுக்களோடு இலக்கியச் செய்திகள் பல ஒத்துக்காணப்பெறுகின்றன. இலக்கியங்களுட் கூறப்படாத சங்ககாலச் செய்திகளும், சில கல்வெட்டுக்களுட் கூறப்படுகின்றன. 'தற்காலத்தே படித்து முடிக்கப்பெற்றுள்ள தமிழ்க் கல்வெட்டுக்கள் சில சங்க காலத்தின' என அறிஞர் பெருமக்கள் உறுதியாக உரைக்கின்றனர். கல்வெட்டுக்கள், செப்பேடுகள் முதலிய வற்றுள் சங்ககால வேந்தர்கள். புலவர்கள் பற்றிக் காணப்பெறும் செய்திகள் சிலவற்றைத் தொகுத்தல் இக்கட்டுரையின் நோக்கமாகும்.

**வடிம்பலம்ப நின்ற பாண்டியன் :**

கடைச் சங்ககாலத்துக்கு முற்பட்டவனாக இப் பாண்டியன் திரு. சதாசிவ பண்டாரத்தாரால் குறிக்கப் பெறுபவன். ''நிலம் தந்த பேருதவிப் பொலந்தார் மார்பின் நெடியோன்'' என மதுரைக் காஞ்சி (வரி. 60-61) குறிப்பது இவனையே ஆகும். செல்லி நகர்ப் பெரும்பற்றப் புலியூர் நம்பி எழுதியருளிய திருவாலவாயுடையார் திருவிளையாடல், ''மதுரையை அழிக்கவந்த கடல் வற்றும்படிப் பாண்டியன் ஒருவன் வேலை எறிந்தான்; கடல் வற்றியது; அவன் கால்களைக் கழுவியது. எனவே இவன் வடிம்பலம்ப நின்ற பாண்டியன் எனப்பட்டான்'' என்று குறிப்பிடுகிறது; ''மாலைமுடியோன் வேலை வடிம்பலம்ப நின்றதனால், வேலை வடிம்பலம்ப நின்றான் என்றெங்கும் விளங்கியதால்'' என்பது நம்பியின் திருவாக்கு.

பாண்டியன் பல்யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதியை நெட்டிமையார் பாடுங்கால்,

''முந்நீர் விழவின் நெடியோன்
நன்னீர்ப் பஃறுளி மணலினும் பலவே''

எனக் குறிக்கிறார். வடிம்பலம்ப நின்ற பாண்டியன் கடல் தெய்வத்துக்கு விழா எடுத்ததனையும், பஃறுளி யாற்றினை வெட்டியமையையும், வடிம்பலம்ப நின்றதனையும், இப்பாடலும் இதன் பழைய குறிப்புரையும் காட்டுகின்றன.

''அடியிற் றன்னள வரசர்க் குணர்த்தி
வடிவேல் எறிந்த வான்பகை பொருது
பஃறுளி யாற்றுடன் பன்மலை யடுக்கத்துக்
குமரிக்கோடும் கொடுங் கடல் கொள்ள''
(காடுகாண் காதை, 17—20)

என்ற சிலம்படிகளிலும், கல்லாடம் 78-வது பாடலிலும், இவ்வரலாறு குறிக்கப்பெறுகிறது.

வேள்விக்குடிச் செப்பேடு, 'எல்லா அரசரும் அழிந்த பின்னரும் ஒரே ஒரு வேந்தன்-பாண்டிய மன்னன் உயிர்வாழ்ந்ததாக' வடமொழிப் பகுதியில் கூறுகிறது.

''விசையொடு விண்மீனெடுபோர்
மிக்கெழுந்த கடற்றிரைகள்
சென்றுதன் சேவடிபணிய
அன்றுநின்ற ஒருவன்''

எனச் சடையவர்மன் பராந்தகனின் செப்பேட்டிலும்,

''செம்மணிப் பூணொடும் தோன்றித்
தென்தமிழின் கரைகண்டும்
வெம்முனைவேல் ஒன்றுவிட்டும்
விரைவரவிற் கடல்மீட்டும்''

என மூன்றும் இராசசிம்மனுடைய சின்னமனூர்ச் செப்பேட்டிலும்,

''மன்னர்பிரான் வழுதியர்கோன்
வடிம்பலம்ப நின்றருளி
மாக்கடலை எறிந்தருளி''

எனப் பராந்தக பாண்டியன் மெய்க் கீர்த்தியுள்ளும் குறிக்கப் பெறும் வரலாற்று நிகழ்ச்சி இப் பாண்டியனைப் பற்றியதே என்று கூறலாம்.

**தலையாலங்கானப்போரும், பாண்டியன் நெடுஞ்செழியனும் :**

சோழன் இராசூயம் வேட்ட பெருநற் கிள்ளியும், சேரமான் யானைக்கட்சேய் மாந்தரஞ் சேரலிரும்பொறையும், வேளிர் ஐவரும் ஒன்றுகூடி மதுரையைச் சூழ்ந்தனர். பாண்டியன் நெடுஞ்செழியன் 'நகுதக் கனரே' எனத் துவங்கும் புறப்பாடலைப் பாடி வஞ்சினம் மொழிந்தான்; எழுவரை யும் புறங்கண்டான். பகைவரைக்கொன்று பகைநாடு கைப்பற்றினன். இச்செய்தி யினைப் புறநானூறு நெடுநல்வாடை முதலிய சங்க இலக்கியங்கள் காட்டுகின் றன. தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன் என்பது தலையாலங்கா னம் என்ற இடத்தில் கடும்போருடற்றி வென்றதனையே காரணமாகக் கொண்டு அமைந்த பெயராகும். இவ்வேந்தன் தனக்குச் சமமான சேரன், சோழன் என் னும் இருவேந்தரையும் கொன்றதனைத்,

''தலையாலங் கானத்தில்
தன்னொக்கும் இருவேந்தரைக்
கொலைவாளில் தலைதுமித்தும்
குறைத்தலையின் கூத்தொழித்தும்''

என மூன்றும் இராசசிம்மனின் சின்ன மனூர்ச் செப்பேடு குறிக்கிறது. சடைய வர்மன் பராந்தகனின் தளவாய்புரச் செப் பேட்டில், 'ஆலங்கானத்தமர் வென்று ஞாலங்காவல் நன் கெய்தியும்' என்ற வரி யில் இப்போர் குறிக்கப்பட்டுள்ளது.

திருநெல்வேலி மாவட்டத்தில் மீனாட்சி புரம் என்னும் சிற்றூரில் உள்ள மலைக் குகையில் உள்ள கல்வெட்டுக்கள் இரண்டு, பாண்டியன் நெடுஞ்செழியன் பற்றிக் குறிக்கின்றன. இக்கல்வெட்டொன்றில் நெடுஞ்செழியன் 'பணவன்' 'கடலன்' என்ற பாண்டியர் குலப்பெயர்களோடு கூறப்பெறுகிறான். மற்றொன்று 'நெடுஞ் செழியனின் சகளன் (ஸாலகன்) இளஞ் செழியன் தந்தை செழியன்' என்று கூறு கிறது.

திரு. ஐ. மகாதேவன் அவர்கள் இக் கல்வெட்டு, கிறித்துவிற்குக் காலத்தால் முற்பட்டது. எனவே பாண்டியன் தலை யாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ் செழியனையோ அல்லது ஆரியப்படை கடந்த நெடுஞ்செழியனையோ குறிக்கா தென்பர். ஆரியப்படை கடந்தவன் சிலப் பதிகாரக் காலத்தவன். தலையானங்கா னத்துச் செருவென்ற நெடுஞ்செழியன் கி.பி.-யில் ஆண்டான் என்று உறுதியாகக் கூறவியலாது. இக்கல்வெட்டிற் கண்டவன் இவனேயாதல் கூடும்.

**சங்ககாலச் சேரர் :**

திருச்சிக் கருவூரினின்று பத்துக்கல்தொலை வில் புகளூர் என்னும் ஊர் உள்ளது. அங் குள்ள ஆறுநாட்டார் மலையில் வேலாயுதம் பாளையம் மலைக்கோவிலுக்குத் தென்புறம் உள்ள கல்வெட்டு, சங்கச் சேரர் மரபினை கூறுகிறது. தென்புறக் குகையில் இரண்டு பழந்தமிழ் எழுத்துக் கல்வெட்டுக்கள் உள. சேரன் இளங்கடுங்கோ இளங்கோவாகிய ஞான்று யாற்றூரினன் செங்காயபனுக்குப் பாழி அமைத்தளித்ததனை இக் கல்வெட்டுக் கூறுகின்றது. பதிற்றுப்பத்து ஏழாம்பத் தின் தலைவனாகிய செல்வக் கடுங்கோ வாழி யாதன், கோ ஆதன் செல்லிரும்பொறை எனவும், இளங்கடுங்கோ, பெருங்கடுங்கோ எனக் குறிக்கப்படுவோர் 8, 9 பத்துகட் குரிய பெருஞ்சேரல் இளம்பொறை, இளஞ் சேரல் இரும்பொறை ஆவர் எனவும் ஐ. மகாதேவன் கூறுகிறார். இவர் பாலை பாடிய பெருங்கடுங்கோ எனவும், மருதம் பாடிய இளங்கடுங்கோ எனவும் கூறப்படும் வழிவழிக் கருத்தினை ஆதாரமாகக் காட்டு கிறார். கல்வெட்டு, 'கோ ஆதன் செல்லி ரும்பொறைகள் பெருங்கடுங்கோன் மகன்' என இம் மரபைக் கூறுகிறது.

**மலைபடுகடாம் :**

இரணிய முட்டத்துப் பெருங்குன்றூர்ப் பெருங்கௌசிகனார், பல்குன்றக் கோட்டத் துச் செங்கண் மாத்துவேள் நன்னன் மகன் நன்னனைப் பாடிய நூலாகக் குறிக்கப்படும் மலைபடுகடாம், பத்துப்பாட்டு நூல்களில் ஒன்று. குன்று சூழியற்கை நாடாக அமைந்தது பல்குன்றக்கோட்டம். பேரிசை நவிரம் எனப் புகழப்படும் மலை, இக்

காலத்துச் சீபர்வதம், திரிசூலகிரி என்று கூறப்பெறும் திருவண்ணாமலைக்கு வடமேற்கிலுள்ள மலையாகும். செங்கண்மா எனக் கூறப்படுவது இன்றைய செங்கம் ஆகும். இச்செங்கம் வட்டாரத்தில் பல கல்வெட்டுக்களையும், நடுகற்களையும் அறிஞர்கள் கண்டுபிடித்துள்ளனர். அவர்கள் செங்கம் சிவன் கோவிலில் ஒரு கல்வெட்டினைப் படி எடுத்துள்ளனர். முற்பகுதி தமிழ் வெண்பாவாகவும், பிற்பகுதி கிரந்த எழுத்திலும் அமைந்த அக் கல்வெட்டு மலைபடுகடாம் பற்றிக் கூறுகிறது.

''வண்டறைதார் மன்னர் மலைபடைத்தெம்
மன்னரைவெந்
கண்டதிறற் காங்கேயன் கண்சிவப்பப்—
பண்டே
மலைகடாம்பாட்டுண்டமால்வரைச்செஞ்சோரி
அலைகடாம் பாட்டுண் டது''

என்பது அப்பாடல். (கல்வெட்டியல் பக். 103-4).

**பட்டினப் பாலை :**

பட்டினப் பாலை என்றபத்துப்பாட்டுள் உள்ளதொரு நூல், கரிகாற் பெருவளத்தான் மீது கண்ணனார் என்ற புலவர் பாடிய நூலாகும். கலிங்கத்துப் பரணி இராச பாரம்பரியம் இருபத்தொன்றும் பாடல் கரிகாற் பெருவளத்தான் கடியலூர் உருத்திரங் கண்ணற்குப் பட்டினப்பாலை பாடியதற்குப் பரிசாகப் பதினாறு நூறாயிரம் பொன் தந்ததாகக் கூறுகிறது.

திருவெள்ளறையில் உள்ள கல்வெட்டுக் கலித்துறைப்பா, (செந்தமிழ்த் தொகுதி 41 பக். 215) முதல் மாறவர்மன் சுந்தரபாண்டியன், தஞ்சை உறந்தை பழையாறை நகரங்களைப் பாழ்படுத்தியபோதும், ''கண்ணனின் பட்டினப்பாலைக்குப் பரிசாகத் தரப்பெற்ற பதினாறுகால் மண்டபத்தை மட்டும் அழிக்காமல் விடுத்தான்'' என்று கூறிப் பாண்டியனின் தமிழ்ப்பற்றைப் பகர்கிறது.

வெறியார் தளவத் தொடைச்செய மாறன்
வெகுண்ட தொன்றும்
அறியாத செம்பியன் காவிரி
நாட்டில் அரமியத்துப்
பறியாத தூணில்லை; கண்ணன்
செய்பட்டினப் பாலைக் கன்று
நெறியால் விடும்தூண் பதினாறுமே
அங்கு நின்றனவே

என்பது, அக்கல்வெட்டிற் காணப்படும் அழகிய பாடல் ஆகும்.

முற்காலத்தார் தந்தை பெயரொடு தம் பெயரையும் சேர்த்து வழங்குவர். 'கண்ணன் செய்பட்டினப்பாலை' எனக் கூறியுள்ளமையின், உருத்திரன் என்பார் பட்டினப்பாலை ஆசானின் தந்தை என்பது புலனும். 'புறவுப்புறத் தன்ன' என்னும் குறுந்தொகைப் பாடலைப் பாடியுள்ள உருத்திரனாரின் மகன், பட்டினப்பாலையாசான் என்ற கருத்து இக் கல்வெட்டால் வலிவடைகிறது.

**சங்கம் இருந்தமை :**

நெடுஞ்சடையன் பராந்தகனின் செப்பேடு ''.....தென்மதுரா புரஞ்செய்து அங்கதனில் அருந்தமிழ் நற்சங்கம் அமைத்துத் தமிழ் வளர்த்தும்'' எனக் குறிப்பிடுகிறது. சின்னமனூர்ச் செப்பேடு, மதுராபுரிச் சங்கம் வைத்து மாபாரதம் தமிழ்ப்படுத்ததாகக் கூறுகிறது. இங்குக் குறிக்கப் பெறும் பாரதம் பெருந்தேவனாரால் செய்யப்பெற்றதோ என ஆய்தல் வேண்டும். இச் செப்பேட்டுச் சான்றுகள் சங்கமிருந்ததனைச் சாற்றுகின்ற சான்றுகளேயாம்.

**கபிலக்கல் :**

பொய்யா வாய்மொழிக் கபிலன் எனப் புகழ்ந்துரைக்கப்படும் கபிலர் பாரியின் காலத்தவர். 'பாரி இறந்தபின் பாரி மகளிரை விச்சிக்கோ, இருங்கோவேள் ஆகியோரிடம் அழைத்துச் சென்று மணம் புரிந்து கொள்ளுமாறு வேண்டினர். அவர் மறுத்தனர். பின் 'பாரி மகளிரைப் பார்ப் பார்ப் படுத்துமாய்ந்தார்' என்று புறம் 200, 202. 239-ஆம் பாடல்களால் அறியலாம்.

கபிலர் பாரிமகளிருள் ஒருத்தியை மலையமானுக்கு மணம் செய்து கொடுத்து அனல் புக்கு மாய்ந்ததாக இராசராசன் காலக் கல்வெட்டுக் கூறுகிறது. திருக்கோவிலூரில் கபிலர் கனல்புக்க இடம் கபிலக்கல் என இராசராசன் காலத்தும் வழங்கப்பெற்றமை அறியலுறும்.

''மொய்வைத் தியலும் முத்தமிழ் நான்மைத்
தெய்வக் கவிதைச் செஞ்சொற் கபிலன்
மூரிவண் தடக்கைப் பாரிதன் அடைக்கலப்
பெண்ணை மலையற் குதவிப் பெண்ணை
அலைபுனல் அழுவத் தந்திரிக்ஷும் செல
மினல்புகும் விசும்பின் வீடுபே றெண்ணிக்
கனல்புகும் கபிலக் கல்லது''

என்பது கல்வெட்டுப் பகுதி.

**அந்துவன்:**

ஆசிரியர் நல்லந்துவனர் பரிபாடலில் 6, 8, 11, 20 ஆகிய நான்கு பாடல்களைப் பாடியுள்ளார். 'நல்லந்துவன் நெய்தல்' பாடியவர். மதுரையாசிரியர் நல்லந்துவனர் எனப் பெறுவர். பரிபாடல் எட்டனுள் திருமால் முதலியோர் வந்து தொழுதலின் 'பரங்குன்று இமயக்குன்றம் நிகர்க்கும்' எனவும், சரவணப் பொய்கையைப் பரங்குன்றின் சுனை ஒக்கும் எனவும் பாடியுள்ளார். மதுரை மருதனிளநாகனர்,

''சூர்மருங் கறுத்த சுடரிலை நெடுவேல்
சீர்மிகு முருகன் தண்பரங் குன்றத்து
அந்துவன் பாடிய சந்துகெழு நெடுவரை
இன்தீம் பைஞ்சுனை''

என இச் செய்தியினை அகநானூற்றில் குறிப்பர்.

மதுரை மாட்டம் திருப்பரங்குன்றத்தில் மூன்று பழங்காலத்தைச் சேர்ந்த கல்வெட்டுக்கள் உள. (140-142/1951-52) இக் கல்வெட்டுக்களில் ஒன்று 'அந்துவன் கொடுப்பித்தவன்' என்பது. இக் கல்வெட்டுத் திருப்பரங்குன்றம் சுனையருகாக உள்ள குகையில் மேற்பகுதியில் உள்ளது. இது நல்லந்துவனையே குறிப்பது எனலாம். இது கி.மு. 2 முதல் 1 வரை அமைந்த காலத்தில் வெட்டப்பெற்றது ஆகும்.

**சங்கப் புலவர் மரபினர்:**

இராமநாதபுரம் சீமாறன் சீவல்லவன் கல்வெட்டகவல் ஒன்றில் 'இருப்பைக்குடி கிழவன் எட்டிச் சாத்தன்' என்பவனைக் குறிக்கிறது. இவன் தமிழ்கெழுகூடற் சங்கப் பலகையில் வீற்றிருந்ததாகக் குறிக்கிறது. செங்கை மாவட்டத் திருக்கச்சூர்க் கச்சபேசுவரர் கோவிற் கல்வெட்டு, பெருநம்பி முத்தமிழ் ஆசான் என்பவர் சாத்தனர் வம்சத்தவராகக் குறிக்கப்பெறுகிறுர். இவர்கள் மணிமேகலை ஆசான் தண்டமிழ்ச் சாத்தன் மரபினர் எனச் சாசனத் தமிழ்க் கவி சரித்திரத்தில் குறிக்கப்பட்டுள்ளனர்.

**தொகுப்புரை:**

சங்ககால அரசர், சேரவேந்தர் மூவர், பாண்டியன் நெடுஞ்செழியன் காலக் கல்வெட்டுக்கள் கிடைத்துள்ளன. இலக்கியங்களுட் கூறப்பெருத பல கருத்துக்கள் கல்வெட்டு, செப்பேடுகளில் காணப் பெறுகின்றன. அண்மைக் காலத்தில் ஆராய்ச்சியாளர்களிடையில் முகிழ்த்துள்ள கல்வெட்டுணர்வு காரணமாகப் பல புதுக் கல்வெட்டுக்கள் கண்டுபிடிக்கப்படும். அப்போது சங்ககாலச் செய்திகள் பல கிடைத்தல் வெள்ளிடைமலை.

---

அவகுண விரகனை வேதாள ரூபனை
அசடனை மசடனை ஆசார ஈனனை
அகதியை மறவனை ஆதாளி வாயனை—அஞ்சுபூதம்

அடைசிய சவடனை மோடாதி மோடனை
அழிகரு வழிவரு வீணுதி வீணனை
அழுகலை அவிசலை ஆருன ஊணனை—அன்பிலாத

கவடனை விகடனை நானு விகாரனை
வெகுளியை வெகுவித மூதேவி மூடிய
கலியனை அலியனை ஆதேச வாழ்வனை—வெம்பிவீழும்

களியனை அறிவுரை பேணுத மானுட
கசனியை அசனியை மாபாதன் ஆகிய
கதியிலை தனைஅடி நாயேனை ஆளுவது—எந்தநாளோ?

—அருணகிரிநாதர்

# வள்ளலார் கண்ட நால்வர்

'சன்மார்க்கச் சான்றோர்'
திரு. நா. மகாலிங்கம், B.Sc., M.I.E.

சமரச சுத்த சன்மார்க்கம் கண்ட திருவருட் பிரகாச வள்ளலார் தனக்கு முந்தைய அருளாளர்களிடம் பரமபக்தி உடையவராய்த் திகழ்ந்தவர். 'வாழையடி வாழையென வந்த திருக்கூட்ட மரபினில் யான் ஒருவன் அன்றோ' என்று அவர் உருகிப்பாடுவதைக் காணும்போது, முந்தையோர் பாடல்களை அவர் முறையாகப் போற்றியதை உணர்கிறோம். தேவார ஆசிரியர்களான முதல் மூவரையும், திருவாசகம், திருக்கோவை யார் தந்த மணிவாசகரையும், தனித்தனியே பத்துப் பத்துப் பாடல்களில் அவர் பாராட்டி உரைக்கின்றார். நேரடியாக அவர்களைப் போற்றுவது என்றும், அவர்கள் அருளிச் செயல்களையும், தொண்டுகளையும் பாராட்டுவது என்றும் வகுத்துக் கொண்டு அவர் போற்றுகிறார். முதல் திருமுறையில் கணபதி, முருகன், சிவன் முதலிய தெய்வங்களை முன்னோர்களைப் போலவே பாராட்டுகின்றார். திருவருட்பாவில் முதல் திருமுறையில் திருஞானசம்பந்தர் 'எலும்பைப் பெண்ணாக்கிய' அற்புதச் செயலையும், பெரு மணநல்லூரில் திருமணம் காண வந்தவர்கள் அனைவருக்கும் முக்தி வழங்கியதையும், திருநாவுக்கரசருக்குச் சிவபெருமான் கட்டுச் சோறு கொடுத்த வரலாற்றையும், சுந்தரமூர்த்தி சுவாமிகளுக்காகத் திருவாரூரில் தூது நடந்த செய்தியையும், திருமணத்தில் தடுத்தாட் கொண்ட செய்தியையும் போற்றிப் பாடுகின்றார். மாணிக்கவாசகருக்காகச் சிவபெருமான் எடுத்த குதிரைச் சேவகனுடைய வடிவத்தை என் கனவிலாயினும் காட்டுக என்றும், பிட்டுக்கு மண் சுமந்த அன்று இறைவன் பிரம்படி பட்டபொழுது வாதவூரர் மனது என்ன பாடுபட்டதோ என்றும், அதனை இன்று கேட்டபோது தனது உள்ளம் இடிந்து போயிற்று என்றும் கூறி வருந்துகின்றார்.

ஒரு முறை என்னுடன் உரையாடிக் கொண்டிருந்த போது, பள்ளியகரம் திரு. நீ. கந்தசாமி பிள்ளை அவர்கள் வள்ளலாரைப் பற்றிக் கூறியதை, எங்கள் இராமலிங்கர் பணி மன்ற முத்திங்களிதழிலும் கட்டுரை வடிவில் எழுதியிருக்கிறார்.

திருவருட்பா என வழங்கும் வள்ளலார் அருளிய தெய்விகப் பாடல்கள் அனைத்தும், அவருடைய தெய்விகக் கையினால் எழுதப் பெற்றவையே யல்லாமல்திருவாய் மலர்ந்தவையல்ல. அவருடைய பாட்டுக்களை அவர் பாடுவதேயில்லை. எப்போதும் திருமுறைப் பாடல்களையே பாடிக் கொண்டிருப்பார். சில சமயம் ஒரு அடியையே தொடர்ச்சியாகப் பல நாழிகை பாடிக் கொண்டிருப்பதும் உண்டு. அவ்வாறு பாடிக்கொண்டிருக்கும்போது, அக்கம் பக்கத்தில் என்ன நடக்கிறது என்பதும் தெரியாது. கண்ணீர் ஆறாகப் பெருகி ஆடையை நனைத்து விட, அருகில் உள்ளவர்கள் மாற்றுடை உடுத்தி விடுவார்கள். இந்த நிலையிலிருந்து சிறிது உணர்ச்சி பெற்றவுடனேதிருமுறைப் பாடல்களைத்தொடர்ந்து பாடிக்கொண்டே தன்னுடைய பாடல்களை விரைவாகத் தாளில் எழுதுவார். இவ்வாறு எழுதும் பாடல்கள், திருமுறைகளில் தோய்ந்த திருவுள்ளத்தில் எழுகின்றவைகள் ஆனபடியால், அத் திருமுறைகளை ஓதுவதில் பயனை அளிக்க வல்லவை என அன்பர்கள் கருதினார்கள்.

சைவ சமய குரவர்களாகிய நால்வரின் பெருமையைச் சிவப்பிரகாச சுவாமிகள் நால்வர் நான்மணி மாலையில் மிக உருக்கமாகப் பாடியுள்ளார். அதே வகையில் நம் வள்ளலார் நான்காம் திருமுறையில் ஆளுடைய பிள்ளை மாலை, ஆளுடைய அரசு மாலை, ஆளுடைய நம்பி மாலை, ஆளுடைய அடிகள் மாலை என்ற தலைப்பில் அற்புதமான பாடல்களை மனம் உருகப் பாடியுள்ளார். சைவ உலகம் உச்சி மேல் வைத்துக்கொண்டாடத் தக்க வழிபாட்டுப் பாடல்களாக இவைகள் விளங்குகின்றன.

வள்ளலார் தம் இளமையில் திருஞான சம்பந்தப் பெருமானை உபாசன குருவாகக் கொண்டார்கள். 'ஞானசம்பந்தச் செல்வமே எனது சற்குருவே' என்று கூறுவதோடு, அருளுலகத்தில் ஞான அரசு நடத்திய முதல் துரை என்றும் அவரைக் குறிப்பிடுகிறார். சத்திய தருமச் சாலையில் குரு வாரமாகிய வியாழக் கிழமைகளில் சிறப்பு வழிபாடும் நடந்து வருகின்றது.

''உயிர் அனுபவம் உற்றிடில் அதன் இடத்தே
ஓங்கு அருள் அனுபவம் உறும் அச்
செயல்இல் நல் அனுபவத்திலே சுத்த
சிவ அனுபவம் உறும் என்றாய்''

என்று கூறி உயிர் அனுபவம், அருள் அனுபவம், சிவ அனுபவம் என்னும் மூன்று வகையான அனுபவங்களையும் தனக்கு உணர்த்தியதாகக் குறிப்பிடுகின்றார். சுத்த சன்மார்க்க நெறியில் முன்புறு நிலை, பின்புறு நிலை எதுவென்று மனம் தடுமாறிய போது, தம் தேவாரப் பாசுரத்தால் ஞான சம்பந்தர் விளக்கம் தந்ததாகவும் வள்ளலார் குறிப்பிடுகிறார்.

''முன்பு உறுநிலையும் பின்பு உறுநிலையும்
முன்னி நின்று உளம் மயக்குறுங்கால்
அன்புறு நெறியால் திருநெறித் தமிழ் கொண்டு
ஐயம் நீத்து அருளிய அரசே''

—ஆளுடையபிள்ளையார் அருள்மாலை.

திருநாவுக்கரசுப் பெருமானை நினைக்கத் தொடங்கும்போதே அவருடைய அருமைத் தமக்கையாரின் அருளால்தான், நாவுக்கரசருக்கு ஞான வாழ்வு வந்தது என்பதைக் கருதி, 'அருள் வழங்கு திலகவதி அம்மையார் பின் அவதரித்த மணியே' என்று பாடுகின்றார்.

திருநாவுக்கரசரைச் சமணர்கள் கல்லில் கட்டிக் கடலில் எறிந்தனர். நமசிவாயத்தை ஓதி அவர் கரையேறினார். அதுபோல மாயையாகிய சமணர்கள் மனமாகிய கல்லைக் கட்டிப் பாவமாகிய கடலில் எறிகின்றனர். நானும் பஞ்சாட்சரத்தை ஓதி வருகின்றேன். என்னைக் கரையேற்றுவாயாக என்று வள்ளலார் உருகி வேண்டுகிறார்.

சுந்தரரின் தேனான செந்தமிழ்ப் பாடல்களைத் தினந்தோறும் வள்ளலார் பாடியிருக்கின்றார். ''தேன் படிக்கும் அமுதாம் உன் திருப்பாட்டைத் தினந்தோறும் நான் படிக்கும் போதென்னை நானறியேன் . .'' என்று கூறுகிறார். சுந்தரர் திருமணத்தைச் சிவபெருமான் தடுத்தாட் கொண்ட போது அடிமை ஓலையைக் காட்டினார். அப்போதும் சுந்தரர் மறுத்தார். நான் அடிமையாக மாட்டேன் என்று முதலில் கடுமையாக வாதமும் செய்தார். என்னை அப்படி ஆட்கொள்ள வருவதென்றால் சிவனே! நீ ஓலையைக் காட்ட வேண்டாம். தொண்டன் நீ என்று சொன்னால் போதும். ஒரு பணியல்ல, ஆயிரம் பணிகளானாலும் வெறுப்பில்லாமல் நான் செய்வேன் என்று, கொடி விண்ணப்பத்தில் வள்ளலார் குறிப்பிடக் காணலாம்.

திருவாசகம் வள்ளலாரின் ஞான நூலாகும். திருவாசகத்தை அனுபவிக்கும் ஞானானுபவத்தைத் தனக்கு மாணிக்க வாசகர் அருளுமாறு வேண்டுகிறார். அன்புருவம் பெற்று அதன் பின்னால் அருளுருவத்தை அடைந்து, முடிவில் இன்புருவத்தை மாணிவாசகர் அடைந்தார் எனவும் வள்ளலார் குறிக்கின்றார். இவைகளைச் சுத்த தேகம், பிரணவ தேகம், ஞான தேகம் என்று வள்ளலார் விளக்குகிறார். திருவாசகத்தில் வரும் ஒரு வாசகம்கூடச் சிவனோடு தன்னைச் சேர்த்துவிடும் ஆற்றல் வாய்ந்த ஆசாரிய உபதேசமாகும் என்பதை,

''வருமொழி செய் மாணிக்க
வாசக நின் வாசகத்தின்
ஒருமொழியே என்னையும்
என் உடையனையும் ஒன்று வித்துத்
தருமொழியாம்....''

திருமண வாழ்க்கையைத் தொடங்கிய முதல் நாளிலேயே திருவாசகத்தை மணந்தவராக வள்ளற் பெருமான் இருந்தாரென்பது நாடறிந்த உண்மையாகும்.

இருந்தாலும் சைவ உலகம் வள்ளற் பெருமான் கருத்துக்களை நன்கு உணர்ந்ததாகத் தெரியவில்லை. நால்வரைப் பற்றித் தெள்ளத் தெளிவாக வள்ளலாரைப்போல் யாரும் புரிந்து கொண்டு போற்றியதில்லை. தனக்கு முன்னோடிகளான சமய குரவர் நால்வரைப் போற்றிப் பழமையில் தான்

வைத்திருக்கும் பற்றையும், அதன் அடிப் படையில் புதுமையை எப்படி வளர்த்திருக் கிருர் என்பதையும் பலர் அறிய முயல வேண்டும். நவீன விஞ்ஞானம் எவ்வாறு வளர்ந்து வருகிறதோ அந்த வளர்ச்சிக்கு இணையாகச் சமயக் கருத்துக்களும் மாற்றங் களோடு வளர வேண்டும். முறையான அந்த ஞான வளர்ச்சியை வள்ளற் பெரு மானின் பாடல்களில் காணமுடிகிறது.

இவ்வாறு வள்ளலார் நால்வரையும் போற்றுகிற திறம் நாம் அறிந்து பின் பற்றத் தக்கதாகும். பெரியோர்களைப் பின்பற்றுவது, ஒருவர் பெருமைக்கு மேலும் பெருமை சேர்ப்பதாகும். இவ்வாறு வள்ளலார் வாழையடி வாழை என வந்த திருக்கூட்ட மரபைச் சேர்ந்த ஒருவராக அல்ல, பெரியவராகச் சிறந்து விளங்கும் பெரு ஞானியாவார்.

சேல்வரும் கண்ணி யிடத்தோய்! நின்
சீர்த்தியைச் சேர்த்தி, அந்த
நால்வரும் செய்தமிழ் கேட்டுப்
புறத்தில் நடக்கச் சற்றே
கால்வரு மாயினும், இன்புரு
வாகிக் கனிமனம், அப்
பால்வருமோ? அதன்பாற் பெண்களை
விட்டுப் பாக்கினுமே! (1)

தேன்படிக்கும் அமுதாம் உன்
திருப்பாட்டைத் தினந்தோறும்
நான்படிக்கும் போது, என்னை
நான் அறியேன்; நாஒன்றோ,
ஊன் படிக்கும், உளம் படிக்கும்,
உயிர்படிக்கும், உயிர்க்குயிரும்
தான்படிக்கும்; அநுபவங்காண்
தனிக்கருணைப் பெருந்தகையே!

—இராமலிங்க வள்ளலார் (2)



சோளிங்கபுரம், திருமலைப்படி விழாவில் கலந்து கொண்டபோது, தவத்திரு திருவலம் சிவானந்த மௌன சுவாமிகள் அவர்கள் நிறைகுடத்துடன், அறங்காவலர் குழுத்தலைவர் திரு. கே. எம். நடராசன், B.A.,B.L., முதலிய பெருமக்களால் வரவேற்கப்பெறுதல் *(1-1-74)*

# நீதியால் தொழுக

தவத்திரு. குன்றக்குடி அடிகளார்.

மனிதனது தேவைக்கேற்ப வருமானம் வந்து கொண்டிருந்தால், அவன் நேர்மைத் திறமுடையவனுக, ஒழுக்க சீலனுக, அறத்தின்வழிச் செல்பவனுகத் திகழ்கிருன். தேவை நிறைவு செய்யப்பட முடியவில்லையாளுல் திசை மாறித் திரும்புகிருன். தேவைப் பூர்த்திக்காக ; சிந்தனை ஓட்டத்திலும் மாற்றம் ஏற்படுகின்றது. அவன் சிந்திப்பதெல்லாம், 'தேவை நிறைவு' பற்றித்தான். அவ்வாறு முனையும்போது, அவனுக்கு முன்னுலே தோன்றும் நீதி, நேர்மை, ஒழுக்கம் முதலியவற்றைப் புறக்கணிக்க முயலுகிருன்.

இங்குதான் சமயம் மனிதனைத் திருத்தி, நல்லாற்றுப்படுத்துகின்றது. 'சின்னுள் தேவைக்காக உலகின் நிலை பேருன ஒழுக்க நெறியை விட்டு வழுவாதே' என்று நல்லுரை பகருகின்றது சமயம். மனிதனது மனத்திலே தோன்றும் தீய எண்ணங்கள், தாறுமாருன சிந்தனைகள் இவைகளுக்குத் தடை போடுகின்றது சமயம். சமயச் சார்பற்ற ஒழுக்க நெறி ஊற்றுக் கசிவில்லாத ஓடை போன்றதாகும் ; மணற்பரப்பின் மீது கட்டப்பட்ட மனை போன்றதாகும் ; வேரில்லாத மரம் போன்றதாகும். மனிதனை மனிதன் வஞ்சித்து ஏமாற்றி வாழ்கின்ற காலத்தில் சிந்தனையைத் திருத்துகிறது சமயம். சிந்தனை செயலாக வந்த பின்னர் செயலைத் திருத்த முற்படுகிறது அரசியல். குற்றங்கள் நிகழ்ந்த பின்னர் குற்றவாளிகளைக் கண்டுபிடித்து அவர்களுக்குத் தண்டனை வழங்குகிறது சட்டம் ; இந்தக் குற்றத்திற்கு அடிப்படையாக இருக்கும் எண்ணத்தையே—சிந்தனையையே திருப்பி நல்வழிப் படுத்துகிறது சமயம்.

வாழ்க்கை எப்பொழுதுமே குறைவு உடையதுதான். சில இடங்களில் இதற்கு மாருகத் தோற்றமளிக்கலாம். ஆனுல் எல்லோருக்கும், எவ்வகையிலேனும் குறைவு இருந்து கொண்டேதான் இருக்கும். நிறைவான பொருள் எது என்பதைத் துருவித் துருவி ஆராய்கின்ற பொழுது ஆதியும் அந்தமுமற்ற இறைவன் ஒருவன் தான் என்ற முடிவு ஏற்படுகின்றது. இறைவன் குறைவற்றவனுக அன்பே உருவாக இன்பமே வடிவினனுக இருக்கின்றுன். இத்தகு பொருளை மனிதன் சார்ந்திருப்பதனுல் சான்ருண்மை மிக்கவனுக மாறிவிடுகின்ருன். இறைவனைச் சார்வதற்குச் சமயமும் வழிபாடும் உறு துணையானவை.

இறைவனைத் தொழுதல் ஓர் அறிவியல் முயற்சி. அறியாமையில் அல்லலுறும் உயிர், ஞானத்திரளோனுக நிற்கும் அவனைத் தொழுதல் மூலம், அறியாமை நீங்கப்பெறுகிறது. உயிர் ஞானம் பெறுகிறது. துன்பத் தொடக்கில் தொல்லையுறும் உயிர், துன்பத் தொடக்கிலிருந்து விடுதலை பெற்று, இன்பத்தில் திளைத்து மகிழ்கிறது. இறைவனைத் தொழுதல் இறைவனுக்காக அல்ல. அவன் பெறக்கூடியது ஒன்றும் இல்லை. இறைவனைத் தொழுதல் உயிரின் வளர்ச்சியேயாம். இறைவனைத் தொழுதல் என்ருல் உடனடியாகச் சடங்குகளே நினைவுக்கு வரும். சடங்குகள் சமயமாகா; இறைவனைத் தொழுதல் ஆகா. ஆனுல் அவையின்றியும் சமய வாழ்வு வாராது; கடவுளைத் தொழுதலும் ஆகாது. சடங்குகள் சமய வாழ்க்கைப் பயிற்சிக்குத் தொடக்க நிலையில் துணை செய்வன. வழிபாட்டுணர்வில் நிலைத்து நிற்கக் காப்பாகத் துணைசெய்வன. இறைவனைச் சடங்குகளால் தொழும் அளவிலேயே தொழுகை முற்றுப் பெருது. சடங்குகள் தொடக்க நிலையின. இறைவனைத் தொழுதலாகிய பயன் அல்லது சமய வாழ்க்கை அகநிறை அன்பால், அருளார்ந்த சீலத்தால், நீதியால் என்று முழுமை பெறுகிறதோ, அன்றே இறைவனைத் தொழுதல் முழுமை நலம் எய்துகிறது.

சிலர் இறைவனைச் சடங்குகளால் தொழுகின்றனர். இல்லை; நாடகத்தால் நடிக்கின்றனர். ஆனால் அவர்கள் வாழ்க்கையில் அழுக்காறு அடங்கவில்லை ; அழுக்காறு தோன்றுவதற்குரிய கூறுகளும் கெடவில்லை. அவாக்களால் அலைப்புறுகின்றனர். வெகுளியால் வெந்து அழிகின்றனர். சுடுமொழி பேசுகின்றனர். ஆங்காரத்தில் விஞ்சுகின்றனர். பகைத் தீயால் பலருக்குத் துன்பம் செய்கின்றனர். தற்சார்பே தழைத்து நிற்கிறது. அநியாயமே ஆட்சி செய்கிறது. அநீதி அணிகலனாக விளங்குகிறது. இத்தகையோர் மனிதரில் ''பொக்கு'' போன்றவர். ''பொக்கு'' என்றால் உள்ளீடில்லாத பதர். ''பொக்கம் மிக்கவர் பூவும் நீரும் கண்டு நக்கு நிற்பன்'' என்பது அப்பரடிகள் வாக்கு. இத்தகையோர் சமய வேடங்கள் பூணலாம். ஆரவாரமான சமயச் சடங்குகளைச் செய்யலாம். ஆயினும் என்? அது இறைவனைத் தொழுதலாகாது.

திருஞானசம்பந்தப் பெருமான், இறைவனைத் தொழும் நெறி காட்டுகிறார். இறைவனைத் தொழுதல் என்பதே இறைவனின் குணங்களை மேற்கொண்டு தொழுதல் என்பதே பொருள். பொறிகளால் செய்யும் நூறாயிரம் சடங்கைவிடப் புலன்களால் நின்றொழுகும் பண்பு ஒன்றே யாயினும், அதற்கு உரிய தகுதி உண்டு; பயன் உண்டு. பல நூறு பண்புகள் புலனில் நின்றொழுகுதலிலும் உயிர்க்கு அவற்றைப் பண்பாகச் சேர்த்தல் அதனிலும் விழுமியது. ஆதலால் வாழும் வாழ்க்கை முறையால் இறைவனைத் தொழுதல் சிறந்த தொழுகை முறை.

இறைவன் துலாக்கோலனையன், வேண்டுதல் வேண்டாமை யிலாதவன், நீதியின் வடிவம். இல்லை அவனே நீதி! நீதி மனித உலகத்தைத் தழுவியது. இல்லை! நீதி உயிர்க் குலமனைத்தையும் தழுவியது. உயிர்க் குலமனைத்துக்கும் ஊறு செய்யாத தத்துவமே நீதி. உயிர்க் குலத்திற்கு இயல்பில் அன்பு காட்டுவதே நீதி, உயிர்க் குலத்தைக் காக்க அவசியம் ஏற்படும்போது தம்மை ஒறுத்துக் கொள்ளுதலே நீதி. நீதி உழைப்பைக் கவர்வதில் மகிழ்வதல்ல, உழைப்பில் மகிழ்வது. நீதி துய்ப்பில் மகிழ்வதல்ல துறவில் மகிழ்வது. நீதி தற்சார்பைச் சார்ந்ததல்ல, நீதி புறவுயிர்ச் சார்பேயாம். நீதி மகிழ்விப்பதில் மகிழ்வது. நீதி இன்புறுத்துவதில் இன்புறுவது. நீதி வாழ்விப்பதில் வாழ்வது. இத்தகைய சீலம் நிறைந்த, நீதியாய் வாழ்கின்ற வாழ்க்கை முறையில் இறைவனைத் தொழு. வினைச் சார்பு வராது என்கிறார் திருஞான சம்பந்தர். ஆம், செயல் புரிவது உயிரின் இயற்கை. செயல் மாண்டு அடங்குதல் எளிதன்று. செயலில் தவம் செய்தலே நம்மனோர்க்குச் சாலும். அதாவது வினை செய்தலில் தவம் செய்தலே நம்மனோர்க்கு இசைந்தது. வினை செய்தால் அவ்வழி பற்றும் பாசமும், இன்பமும் துன்பமும் வரத்தானே செய்யும். அவ்வழி உயிர் மன அலைவுகளுக்கு ஆளாகும். ஆனால் நீதியால் நின்று வினை செய்யும் பொழுது அந்த வினை செயலைப் பெருக்குவதை விட, செயல் மாட்டடங்கத் துணை செய்கிறது. ஆதலால் செயல் செய்க! தற்சார்பான செயல்களைத் தவிர்த்திடுக. உலகுயிர் தழைத்து இனிது மகிழ்ந்து வாழச் செயல் செய்க! அதுவே, இறைவனைத் தொழும் முறை என்பது திருஞான சம்பந்தர் வாக்கு.

போதியார் பிண்டியாரென்றிவர் பொய்ந்நூலை
வாதியா வம்மினம்மா வெனுங்கச்சியுள்
ஆதியார் மேவியாடுந் திருவேகம்பம்
நீதியாற் றொழுமின்நும் மேல்வினை நில்லாவே.

திருமுறை 1—12—10

# திருவள்ளுவரின் வாழ்வியல் நோக்கு

ந. ரா. முருகவேள், M.A., M.O.L.

## முன்னுரை :

திருவள்ளுவர் தமிழகத்தில் தோன்றியருளிய சான்றோர்கள் பலருள்ளும் தலைசிறந்த ஒருவராவர். திருவள்ளுவர் அருளிச் செய்த திருக்குறளின் கருத்துக்களையும், சொற் பொருள்களையும், அவருக்குப் பின்னர் வந்த சான்றோர்கள் அனைவருமே, மிகவும் வியந்து போற்றி உவந்து தழுவிக் கொண்டுள்ளனர். அருளியற் சான்றோர்களாகிய ஆழ்வார்களும் நாயன்மார்களும் கூட, திருவள்ளுவரின் கருத்துக்களை ஆங்காங்குத் தத்தம் பாடல்களில் எடுத்துப் போற்றியுள்ளனர்.

திருவள்ளுவர் சிறந்த கவிஞர் ; ஒப்புயர்வற்ற நீதி நூல் ஆசிரியர்; மிகச் சிறந்த தத்துவ ஞானி; இலக்கியப் பேராசிரியர்; அரசியல் அறிஞர்; பொருளியல் மேதை; பல்கலைக் குரிசில்; உலகுக்கே ஒரு பெரும் வழிகாட்டி! காலமும் இடமும் கடந்து சாலவும் நிலைபெற்று, ஞாலமே புகழ்ந்து வியக்கும் திருக்குறள் என்னும் செந்தமிழ்ப் பெரு நூலை இயற்றி அளித்த பெருவள்ளல் அவர்! பழமைக்குப் பழமையாகவும், புதுமைக்குப் புதுமையாகவும் அவர்தம் அருளுரைகள் அமைந்து பொலிந்து சிறந்து விளங்குகின்றன.

## பொது மறை :

உலகப் பெரும் சமயத் தலைவர்களும், சான்றோர்களும் கூறியுள்ள சிறந்த கருத்துக்கள் எல்லாம், திருக்குறளில் செறிந்து கிடக்கக் காண்கின்றோம். திருவள்ளுவர் எல்லாச் சமயத்தவரும் உவந்து ஏற்றுக் கொள்ளும் வகையில், உயர்வற உயர்ந்த உண்மைகளை, நடுநிலை பிறழாமல் நன்கு இனிது சுவை மிக விளக்கியருள்கின்றார். அவர்தம் நூல், நவில்தொறும் நயம் பயக்கின்றது; தொட்டனைத் தூறும் மணற் கேணி போலக் கற்றனைத்தூறும் நற் கருத்துக்களை உடையதாக மிளிர்கின்றது. ஒரு நாடு-ஒரு காலம்-ஒரு சமயம்-ஒரு மொழி -ஓர் இனம் என்பனவற்றிற்கே உரியதாகி விடாமல், எல்லாக் காலமும், நாடும், மொழியும், சமயமும், இனமும் ஆகியவற்றைச் சேர்ந்த மக்கள் அனைவருக்குமே உரிய, மாபெரும் பொதுமறை நூலாகத் திருக்குறள் திகழ்கின்றது.

வாழ்க்கையின் ஒவ்வொரு கூறுபற்றியே நூல்கள் எல்லாம் பொதுவாக விளக்கும். வாழ்க்கையின் பல திறக் கூறுகளையும் முழுவதாக ஒருசேர, முன்னொடுபின் முரண்படாமல் விளக்கும் திறனில், திருக்குறளுக்கு இணையாக ஒரு நூலும் இல்லை எனத் துணிந்து கூறலாம். இல்லறத்தான், துறவறத்தான், அரசன், அமைச்சன், நண்பன், பகைவன், போர் வீரன், கற்றான், கல்லாதான், கள்ளுண்பான், சூதாடுவான், இரவலன், புரவலன், உழவன், வணிகன், ஆண், பெண் முதலிய அனைவர்க்குமே அறிவுரைகள் கூறும் அரும்பெறற் சமுதாயப் பெரு நூலாகத் திருக்குறள் சிறந்து திகழ்கின்றது. அறம் பொருள் இன்பம் என்னும் முப்பெருந் தலைப்பில், எப்பெரும் பொருளையும் உள்ளடக்கிக் குறைவிலா முழு நிறைவாய் விளக்கும் துறையில், தெய்வப் புலவர் திருவள்ளுவருக்கு நிகராவார் எவருமே இலர்! இத்தகைய ஆசிரியர் திருவள்ளுவர் இயற்றிய திருக்குறளை, நாம் பல துறைகளிலும் ஆராய்ந்துணரும் கடப்பாடு உடையவர்கள் ஆவோம். ஆதலின், அவர் கடைப்பிடித்த வாழ்வியல் நோக்கக் கொள்கைகள் யாவை? என ஆராய்ந்தறிய முற்படுதல், நம்மனோர்க்கு மிகவும் நலம் பயப்பதே யாகும்.

## சமரச ஞானச் சான்றோர் :

திருவள்ளுவர் தமது சமயத்தைச் சார்ந்தவரே என்றும், திருக்குறள் தமக்கே சிறப்பாக உரிய நூல் என்றும், பல்வேறு சமயத்

தவரும் உரிமைகொண்டாடிவருகின்றனர். ஆனால், அவரோ, தமது நூலின்கண் எந்தச் சமயம் பற்றியும் குறிப்பாகவேனும் கிளந்து கூறக் காண்கிலேம். எந்த ஒரு சமயத்தையும் சாராமல், எல்லாவற்றிற்கும் பொதுவான அடிப்படைக் கொள்கைகளை மட்டுமே, சமயங் கடந்த சமரச ஞான நிலையில், திருவள்ளுவர் கூறிச் செல்லக் காண்கின்றோம்.

இந் நாளில் நம் இந்திய நாட்டில் எத்தனையோ பல சமயங்களும், சமயக் கோட்பாடுகளும், அவற்றிற்குரிய ஒழுகலாறுகளும் நிலவி வருகின்றன. திருவள்ளுவர் இவற்றுள் ஏதேனும் ஒன்றனையேனும் சார்ந்தவராகத் தெரியவில்லை. திருவள்ளுவரின் காலத்தில், இந்நாளைய சமயங்களும், சமயக் கோட்பாடுகளும், ஒழுகலாறுகளும் இருந்தனவா என்று கூறுதற்குரிய சான்றுகள் ஏதும் இல்லை. இவைகள் யாவும் திருவள்ளுவருக்குப் பின்னரே நாளடைவில் காலப்போக்கில் படிமுறையே வளரலுற்றன என்று தெரிகின்றது.

இற்றைக்கு இரண்டாயிரம் ஆண்டுகட்கு முற்பட்டிருந்த சமய நிலையும், இப்போது உள்ள சமயங்களின் நிலையும், தம்முள் ஒரு தன்மையுடையன அல்ல. உலக இயற்கைப் பொருள்களெல்லாம், காலந்தோறும் வேறுபட்டுச் செல்லுதல் போலவே, சமயங்களும் காலநிலைக்கு ஏற்ப வெவ்வேறு வகையில் வேறுபட்டுச் செல்லும் தன்மை அடைந்துள்ளன. ஆதலின், இக்காலத்தில் உள்ள சமயங்களுள் ஒன்றன்பால் வைத்துத் திருவள்ளுவரின் சமயம் இதுவே என்று முடிவு கட்டித் துணிந்துரைத்தல் சாலாது. எனவே, திருவள்ளுவர் இயற்றியருளிய திருக்குறளின்கண் ஆங்காங்கு வரும் நுண்ணிய அரிய குறிப்புக்களைத் தெள்ளிதின் ஆராய்ந்தே, அவர்தம் வாழ்வியல் நோக்கு (Philosophy) இன்னதென, நாம் ஒருவாறு அறிதல் கூடும். ஆதலின், அம்முறை பற்றி இங்கு ஒரு சில கருத்துக்களை மட்டும் இயன்ற வரை முயன்று காண்போம்.

*(1)* திருவள்ளுவர் கடவுள் ஒருவர் உண்டு என்னும் கொள்கையுடையவராகக் காணப்படுகின்றார். திருக்குறளில் உள்ள 'கடவுள் வாழ்த்து' என்னும் பகுதியால் மட்டுமேயன்றி, வேறு பிற சான்றுகளாலும் இவ்வுண்மை புலனாகின்றது. 'உலகு இயற்றியான்', 'வகுத்தான் வகுத்த வகை', 'உலகத்தார் உண்டு என்பது இல்லென்பான் வையத்து அலகையா வைக்கப்படும்', 'முறைசெய்து காப்பாற்றும் மன்னவன் மக்கட்கு இறை என்று வைக்கப்படும்' என வரும் குறள்கள் இதனை வலியுறுத்தும்.

*(2)* கடவுள் ஒருவர் உண்டு என நிறுவும் ஒரு சான்றாகவே, அவர் 'வான் சிறப்பு' என்னும் ஒரு தலைப்பை அமைத்திருப்பதாகத் தெரிகின்றது. 'மாரி வறப்பில் தருவாரும் இல்லை; சிறப்பில் தணிப்பாரும் இல்' என்றபடி, மழை மிகுதியாகப் பெய்தாலும் நம்மால் தடுக்க இயலாது; பெய்யாமலே இருந்துவிட்டாலும் நம்மால் அதனைப் பெய்விக்க முடியாது. ஆதலின், கடவுளின் அருளாற்றலை யுணர்த்துவனவற்றுள் மழையும் ஒன்று எனத் திருவள்ளுவர் கருதுகின்றார் எனலாம்.

*(3)* கடவுளின் உருவம் பற்றித் திருவள்ளுவர் ஏதும் விவரமாகக் கூறிற்றிலராயினும், கடவுளின் திருவடியைப் பற்றிக் குறிப்பிட்டிருத்தலால், கடவுளுக்கு அருவமேயன்றி உருவமும் உண்டு எனத் திருவள்ளுவர் கருதுதல் புலனாகின்றது. *(1)*

*(4)* 'சிறப்பொடு பூசனை செல்லாது' என்பதனால், கோயில்களையும், அக்கோயில்களில் நிகழும் நாள் வழிபாடு (நித்தியம்), சிறப்பு விழாக்கள் (நைமித்திகம்) முதலியனவற்றையும், திருவள்ளுவர் உடன்படுதல் காணலாம்.

*(5)* இறைவனின் அருளினாலும், அவன் வகுத்தருளிய இயற்கை நியதியாகிய ஒழுங்கு முறையினாலுமே உலகம் இயங்கி வருகின்றது; உயிர்களெல்லாம் வாழ்ந்து வருகின்றன. 'அவனன்றி ஓர் அணுவும் அசையாது' என்பதனைத் திருவள்ளுவரும் வற்புறுத்துகின்றார். 'ஊழ்' என்னும் தலைப்பினை, அறத்துப் பாலுக்கும் பொருட்பாலுக்கும் நடுவில், ஓர் இயலாகவே திருவள்ளுவர் அமைத்து வைத்திருத்தல் இவ்வுண்மையைத் தெளிவிக்கும். நாம் அறியாமலே நம் வாழ்க்கையை உருவாக்கு

---

(1) "In short, the idea of God is incurably and necessarily anthropomorphic."

—W. T. STACE,
*Religion and the Modern Mind*, p. 9-10

கின்ற தெய்விகப் பேராற்றல் ஒன்று திண்ணமாக உள்ளது. 'ஊழிற் பெரு வலியாவுள', 'வகுத்தான் வகுத்த வகையல்லால் கோடி தொகுத்தார்க்கும் துய்த்தல் அரிது' என்னும் குறட்பாக்களும் இங்குச் சிந்திக்கத் தக்கன. (''There is a divinity that shapes our ends''—Shakspere)

(6) இறைவனிடம் மட்டுமேயன்றி, அவனது அருள் பெற்ற சான்றோர்கள் மாட்டும் திருவள்ளுவர்க்கு மிக்க மதிப்பும் ஈடுபாடும் உள்ளமை, 'நீத்தார் பெருமை' என்னும் தலைப்பால் அறியப்படும். 'நிறைமொழி மாந்தர் பெருமை நிலத்து மறைமொழி காட்டிவிடும்' என்னும் குறளால், 'தொண்டர்தம் பெருமை சொல்லவும் பெரிதே' என்பதனைத் திருவள்ளுவரும் உடன்படுகின்றனர் எனலாம். ''நாம் நம் நம்பிக்கையைக் கடவுள் மேலும், கடவுளின் அருள் பெற்ற அடியார்கள் மேலும் அமைக்கின்றோம்'' ('' We build our trust on God and God-like men''-Alfred Tennyson) என்பது, திருவள்ளுவர்க்கு உடன்பாடே எனத் தெரிகின்றது.

(7) பொருளையும் இன்பத்தையும் பற்றி மிக மிக விதந்து கூறி விளக்கிய போதிலும், அவை இரண்டும் அறத்தின் வழியாகவே வருதல் வேண்டும் என்றும், அறமே அவ்விரண்டினும் மிக்க வலிமையுடையதாகும் என்றும், திருவள்ளுவர் மிகவும் வலியுறுத்திக் கூறுகின்றார். 'அன்பிலதனை அறம் காயும்', 'அறம் பார்க்கும் ஆற்றின் நுழைந்து' என்பன போன்ற குறள்களால், அறத்தையே கடவுள் என்றும், அறவாழ்வே சமய வாழ்வு என்றும்; அறவோர் ஆகிய அருளாளரே சமயச் சான்றோர்கள் என்றும் திருவள்ளுவர் குறிப்பிடுகின்றார் எனலாம்.

(8) 'வானோர்', 'அமரர்', 'இமையார்', 'புத்தேளிர்', 'தேவர்' என்பன போன்ற சொற்களால், முழு முதற் கடவுளின் வேறாக, அவர்தம் அருளைப் பெற்ற தெய்வ கணங்கள் ஆகிய தேவர்கள் பலர் உளர் என்பதும், அவர்கள் வாழும் உலகம், வானுலகம் முதலிய பெயர்களால் வழங்கப் படும் என்பதும் புலனாகின்றன.

(9) 'உயிர் உடம்பின் நீக்கியார்', 'உடம்பொடு உயிரிடை நட்பு' என்பன போன்ற குறள்களால், உடம்பே உயிர் என்பாரை மறுத்து, உடம்பின் வேறாக உயிர் என்பதொன்றுண்டு, உடம்பும் உயிரும் வெவ்வேறு இயல்புடையன, என்பன போன்ற கருத்துக்களைத் திருவள்ளுவர் உணர்த்துகின்றார்.

(10) 'எழுமையும் ஏமாப்புடைத்து', 'எழுபிறப்பும் தீயவை தீண்டா' என்னும் குறள்களால், பிறந்த உயிர்மீளப் பிறவாது என்பாரை மறுத்துத் திருவள்ளுவர் உயிர்க்குப் பல பிறவிகள் மாறி மாறி வரும் என உணர்த்துகின்றார்.

(11) 'இருள் சேர் இருவினை', 'வினைப் பகை வீயாது பின்சென்று அடும்', 'தவமும் தவமுடையார்க்கு ஆகும்' என்பனவற்றால், நல்வினை தீவினையாகிய பாவ புண்ணியங்களையும், அவற்றிற்கேற்ப உயிர்கள் இன்ப துன்பங்களை வழுவாது அடைதலையும், திருவள்ளுவர் தெற்றெனத் திறம்தெரித்து விளக்குகின்றார்.

(12) 'மறுமையும் இம்மையும் இன்பம் தரும்', 'எழுமையும் தான்புக்கு அழுந்தும் அளறு', 'பெறுவர் பெருஞ் சிறப்புப் புத்தேளிர் வாழும் உலகு' என்னும் குறள்களால் சுவர்க்கம் நரகம், இம்மை மறுமை ஆகியவற்றையும் திருவள்ளுவர் உடன்படுதல் உணரலாம்.

(13) 'பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல்', 'ஊனைக் குறித்த உயிரெல்லாம்' என்பவற்றால் உயிர்கள் பல என்பதும்; 'மன்னுயிர் ஓம்பிஅருளாள்வார்', 'மன்னுயிர்க்கு இன்னா செயல்' என்பவற்றால், உயிர்கள் அழியாத் தன்மையன என்பதும் பிறவும் தெளியப்படும்.

(14) 'ஆதி பகவன் முதற்றே உலகு' என்பதனால், கடவுளே உலகம் அன்று, உலகம் வேறு, கடவுள் வேறு என்பது தெளிவிக்கப் பெறுகின்றது.

(15) 'காமம் வெகுளி மயக்கம் இவை மூன்றன் நாமம்கெடக் கெடும் நோய்', 'அவா என்ப எல்லா உயிர்க்கும் தவாஅப் பிறப்பீனும் வித்து' என்பனவற்றால், உயிர்களின் பிறப்பிறப்புக்களுக்குக் காரணமாவன பலவும் சுட்டப்பெற்றுள்ளன.

(16) 'சார்புணர்ந்து சார்புகெட ஒழுகின் மற்றழித்துச் சார்தரா சார்தரும் நோய்' என்பதனுல், உயிர்களைப் பற்றியுள்ள மலமாசுகள் ஆகிய குற்றங்களும், அவைகளினின்று உயிர்கள் தப்பியுய்தற்குரிய சரியை கிரியை யோகம் ஞானம் முதலிய பலவகைச் சமய ஒழுகலாற்று நெறி முறைகளும், அவற்றைக் கடைப்பிடித்து ஒழுகுவதனுல் உயிர்கள் எய்தும் நலங்களும் குறிப்பிடப்படுகின்றன.

(17) 'சுவை ஒளி ஊறு ஓசை நாற்றம் என்ற ஐந்தின் வகைதெரிவான் கட்டே யுலகு' என்னும் குறளால்; நிலம் நீர் தீ வளி விசும்பு என்னும் இயற்கை முதற்பொருள்களும், அவற்றிற்குக் காரணமான நுண்பொருள்கள், அறிகருவிகள், தொழிற்கருவிகள், அகக்கருவிகள் முதலிய (Meta Physics) தத்துவ ஆராய்ச்சிச் செய்திகளும், அனுபவங்களும் உண்டு என உணர்த்தப் பெறுகின்றன.

(18) 'பொறிவாயில் ஐந்தவித்தான் பொய்தீர் ஒழுக்க நெறி' 'ஐந்தவித்தான் ஆற்றல்' என்பனவற்ருல், ஒழுக்கநெறியாகிய சமய வாழ்வும், அதனுல் விளையும் ஆற்றல் ஆகிய பயனும் பிறவும் தெளியப்படும்.

(19) 'ஐயத்தின் நீங்கித் தெளிந்தார்க்கு வையத்தின் வானம் நணிய துடைத்து' என்னும் குறளால், மெய்யுணர்வு பெற்ற மேலோர்கள் ஆகிய சீவன் முத்தர்கள் நிலை, செவ்விதின் விளக்கப் பெற்றது.

(20) 'ஒன்னுர்த் தெறலும் உவந்தாரை ஆக்கலும் எண்ணில் தவத்தான் வரும்' என்பதனுல், தவ வாழ்வினுல் விளையும் பேராற்றல் விளங்கும்.

(21) 'உண்ணுமை வேண்டும் புலால்', 'அருளாட்சி ஆங்கில்லை ஊன்தின்பவர்க்கு' என்பவற்ருல், புலால் உண்ணுமை, உயரிய சமய வாழ்விற்கு இன்றியமையாத ஒரு பண்பாதல் வற்புறுத்தப்பட்டது.

(22) இல்லறம் துறவறம் என்னும் இருவகை நெறியாலும் இறையருளைப் பெறலாம் ; இவை இரண்டும் தம்முள் ஒன்றினென்று முரண்படுவன அல்ல; இல்லற வாழ்வின் வளர்ச்சிப் பயனே துறவறம்; எல்லா உயிர்களிடத்தும் அன்பு செலுத்தி நலம் புரியும் பெரும் செயலும் பண்புமே, செந்தண்மை (சீவகாருண்யம்), என்னும் சிறந்த உண்மைகள் பற்பல, திருக்குறளில் செவ்விதின் விளக்கப் பெற்றுள்ளன.

(23) சமய வாழ்வுக்கு ஒரு ஞானசிரியனின் துணை இன்றியமையாதது. ''குருவருள் இன்றித் திருவருள் இல்லை''. அது பற்றியே 'பற்றுக பற்றற்ருன் பற்றினை' என அறிவுறுத்துகின்ருர் திருவள்ளுவர். 'பற்ருற்ருன்' என்னும் சொல், ஞானசிரியனுகிய குருவினைக் குறிப்பதாகும். குருவின் உபதேசமாகிய திருமொழியால், நாம் பெறுதற்குரிய பேற்றினையே, 'இழுக்கலுடையுழி ஊற்றுக்கோல் அற்றே ஒழுக்கமுடையார் வாய்ச்சொல்' என்பதனுல் திருவள்ளுவர் குறித்தருளினுர் எனக் கொள்ளுதலும் பொருந்தும்.

(24) மக்களின் வாழ்க்கையில் சமய ஒழுகலாறு அல்லது கடவுள் வழிபாடு என்பது மிக மிக இன்றியமையாதது; மனக் கவலைகளை மாற்றுதற்குரிய ஒரே வழி கடவுளை வழிபடுவதுதான் எனக் கட்டுரைக்கின்ருர் திருவள்ளுவர்.

(25) எவ்வுயிர்க்கும் சிறு தீங்கும் செய்யாமல் இருத்தல், சிறந்த சமய நெறிப் பண்பாகும். 'உயிர்க்கு உறுகண் செய்யாமை அற்றே தவத்திற்கு உரு' என்பது திருக்குறள். இதனையே 'மன்னுயிர் ஓம்பி அருளாள்தல்' எனப் பிறிதோர் இடத்தும் சிறப்புறக் கூறுவர் திருவள்ளுவர். சிற்றுயிர்களுக்குத் தீங்கு செய்யாமை மட்டுமன்று, அவைகளுக்கு நலஞ் செய்து பாதுகாத்தலும் இன்றியமையாதது என்பது கருத்து. 'மனத்துக்கண் மாசு இலன் ஆதல்' என்றதும், இத்தகைய உயர்ந்த சமய வாழ்வையே யாகும்.

(26) எல்லாப் பொருள்களிலும் இறைவனைக் காண்டல் என்பது, சமய வாழ்வில் மிக மேலான உயர்ந்த சிறந்த பெருநிலை. ஞானிகள் எல்லாப் பொருள்களிலும் கடவுளைக் காண்பார்கள். ''சீவன் முத்தர் சிவமே கண்டிருப்பர்; பரமே பார்த்திருப்பர் பதார்த்தங்கள் பாரார்'' என்று ஞானிகளின் இயல்பினைச் சிவஞான சித்தியார் கூறும். ஞானிகளுக்கு எல்லாம் இறைமயமாய், தெய்வ வடிவமாகக் காணப்

பெறும். இத்தகைய இறையருளனுபவ ஞானப் பெரு நிலையையும் திருவள்ளுவர் குறிப்பிடுகின்றார். 'எப்பொருள் எத் தன்மைத் தாயினும் அப்பொருள் மெய்ப் பொருள் காண்பதறிவு' என்பது திருக் குறள். 'எப்பொருளின் கண்ணும் மெய்ப் பொருளைக் (கடவுளைக்) காணப்பெறுவது ஞானம்' என்பது அதன் கருத்து.

*(27)* திருக்குறள் ஒரு நீதி நூல், ஒழுக்க நூல் என்பதனை யாவரும் அறிவர். அவ் வளவில் மட்டுமே, அதன் பெருமை அமை வதன்று. உயரிய நீதிகளையும் ஒழுக்கங்களை யும் புத்தர் பெருமானும் கூறிச் சென்றார். ஆனால் அவர் இறைவனின் இயல்பு பற் றியோ, உயிரின் இயல்பு பற்றியோ ஏதும் விளக்கிக் கூறினார் இல்லை. ''உயிரிரக்கம்'' ஆகிய சீவகாருண்யம் என்பதனை மட்டுமே, புத்தர் பெருமான் பெரிதும் அறிவுறுத்திப் போந்தார். ஆதலின் பௌத்தம், ஒரு நல்லொழுக்க நெறியே யன்றிச் சமயம் ஆகாது என்பர் சிலர். *(2)*

*(28)* ஒரு சிலர் கடவுளும் சமயமும் எதற்கு? நல்லவர்களாக இருந்தால் அதுவே போதாதா? என வினவுகின்றனர். ஒழுக்கம் சமய வாழ்விற்கு வேண்டப்படுவ தேயாயினும், வெறும் ஒழுக்கம் மட்டுமே சமய வாழ்வு அன்று. ஒழுக்கம் தரும் உயர்வினும், ஒழுக்கத்துடன் கூடிய சமய வாழ்வு தரும் உயர்வு, மிக மிகப் பெரியது என்பது அறிதற்குரியது. *(3)*.

*(29)* ''வெறும் கிரியையும் சடங்கும் மட்டுமே நிறைந்துள்ள சமயம், நமக்கு மன நிறைவை அளித்தல் இயலாது. அவ்வாறே வெறும் உயிரிரக்கமும் சமூகத்தொண்டும் ஆகியவற்றை மாத்திரமே வற்புறுத்து கின்ற சமயத்தினாலும், நாம் மன அமைதி அடைதல் அரிது. இவற்றிற்கெல்லாம் மேலாக மனிதனின் ஆன்ம தாகத்தைத் தணிக்க வல்லதாகத் திகழ்வதே உண்மைச் சமயமாகும்.'' அதுபற்றியே திருவள்ளுவர் சடங்கும் கிரியையும் சமூகத் தொண்டும் போன்றனவற்றை விவரித்துத் தம்முடைய திருக்குறளின்கண் ஏதும் விளம்பிற்றிலர். மனிதனின் ஆன்ம தாகத்தைத் தணிக்க வல்ல சமயம் பற்றிய கருத்துக்களையே, மெய்யுணர்வு, அவாவறுத்தல் முதலிய பகுதிகளில் திருவள்ளுவர் அறிவுறுத்திப் போந்தார். *(4)*.

## தெய்வப் புலவர்

இங்ஙனம் மிகச் சிறந்த முறையில் முதன் முதலாக நூல் வழக்கின்கண் வைத்து விதி முகமாகத்தெய்வமுண்மையையும், தெய்வ வழிபாட்டையும் நிறுவிய சிறப்புக்குரியவர் திருவள்ளுவரேயாவார். திருவள்ளுவருக்கு முன்னரும் தெய்வக்கொள்கையும் வழி பாடும் சிறப்புற நிலவி வந்தனவாயினும், நமக்குக் கிடைத்துள்ள தமிழ் இலக்கிய நூற்றொகுதியை ஆய்ந்துணர்ந்தால், இச் சிறப்புக்கு முதன் முதலாக உரியவர், திரு வள்ளுவரே என்பது தெற்றெனத் தெரி கின்றது. அது பற்றியே அவருக்குத் 'தெய்வப் புலவர்' என்னும் சிறப்பியற் பெயர் வழங்குவதாயிற்று எனலாம். *

---

(2) " Buddhism in its purity ignored the existence of a God ; it denied the existence of a soul. It was not so much a religion as a code of ethics."

—*Winfred Stephens,*

*Legends of Indian Buddhism, p.7*

(3) " Call it what you will, there is in most human lives an attitude toward the Determiner of Destiny which simply is not to be identified with social righteousness or any other kind of morality. Religion, if taken seriously and rationally ,will be deeply moral ; but it is not mere morality."

—PROF. J. B. PRATT,

*The Religious Consciousness*


(4)" Religion which is merely ritual and ceremonial can never satisfy. Neither can we be satisfied by a religion which is merely humanitarian or serviceable to mankind ; Man's craving is for the spiritual."

—SAMUEL M. SHOEMAKER.

## முடிவுரை

'தெய்வப் புலவர்' என்னுந் தொடருக்கு, 'மனிதராய் நம்மனோர் போலக் கல்வி கற்றுவந்த எளிய புலமை யுடையவரல்லர், தெய்வத் தன்மை வாய்ந்த சிறந்த பெரும் புலவர்' என்னும் குறிப்பிற் சிலர் பொருள் கூறுவர். அது பொருந்துவதே யாயினும், உண்மைப் பொருள் அதனின் வேறு எனலாம். காக்கையைப் பாடிய காரணத்தாற்பெண்பாற்புலவர்ஒருவர்'காக்கை பாடினியார்'' என வழங்கப்பெற்றாற் போல, தெய்வ முண்மை நிறுவித் தெய்வ வழிபாட்டை நான்முகத்தான் விதித்து வற்புறுத்தி யருளிய தனிமுதற் பெரும் புலவர் என்னும் காரணம் பற்றியே, திருவள்ளுவர் 'தெய்வப் புலவர்' என விதந்தெடுத்துச் சிறப்பிக்கப் பெற்றார் எனத் தெளிந்து கொள்ளுதல், மிக்க பொருத்தமும் சிறப்பு முடையதாகும். ஆதலின், தெய்வப் புலவர் திருவள்ளுவர் பெருமானின், வாழ்வியல் நோக்கும் கொள்கைகளும் பற்றித் தெள்ளிதின் ஆராய்ந்துணர்ந்து கொண்டு, நாம் அவற்றை நன்கினிது கடைப்பிடித் தொழுகி, வையத்து வாழ்வாங்கு வாழ்ந்து, நலம்பலவும் எய்தி மகிழ்ந்து உய்ய முற்படுவோமாக!

—ஆசிரியர்.



திருப்பெண்ணுடகம் அருள்மிகு பிரளயகாலேசுவரர் திருக்கோயில் திருக்குட நன்னீராட்டுப் பெருவிழாவில், ஆணையர் திரு. கே. எஸ். நரசிம்மன், B.A., B.L., I.A.S., துணை ஆணையர் திரு. ஏ. வேங்கடாசலம், B.SC., B.L., உதவி ஆணையர் திரு. முருகன் முதலிய பெருமக்கள் கலந்து கொண்டு சிறப்பித்தல்.

# தவம்

மாட்சிமிகு திரு. எஸ். மகராஜன் அவர்கள், B.A., B.L.,
நீதிபதி, உயர்நீதி மன்றம், சென்னை.

மனித மனம் அலட்டிக் கொண்டே இருக்கிறது, ஒரு நிலையில் நிற்பதில்லை. போதாக்குறைக்கு மனித உடலிலே ஐந்து மடைகள் வைக்கப்பட்டிருக்கின்றன. ஐம் புலன்களாகிய மடைகள். இம் மடைகள் வழியாக உலகச் செய்திகள், மனசுக்கு உள்ளே பாய்ந்த வண்ணமிருக்கின்றன. புறச் செய்திகள் வந்து பாயாமலிருக்கும் போதே, இந்த மனம் மறுகுவதும், மயங்கு வதுமாயிருக்கும். வெளிச் செய்திகள் வேறு மனசைத் தாக்கியவுடன், சொல் லவே வேண்டியதில்லை. ஒரே குரங்காட்டந் தான்.

இந்தக் குரங்காட்டத்தை மட்டுப் படுத்தி மனசை ஒரு நிலையில் நிறுத்துவது தான் தவம். தவத்தின் மூலம் சிதறுண்டு கிடக்கும் சக்திகள் ஒருமுனைப்படுகின்றன; என்றும் இல்லாத ஆற்றல் தவத்தால் நமக்குக் கிட்டுகிறது.

''நில்லென்று சொல்லி மனம்
நிலைநிறுத்த வல்லார்க்குக்
கொல் என்று வந்தவன்
குடியோடிப் போனனே.''

என்று சொன்னுர் ஒரு சித்தர். நோற்ற லால், அதாவது தவத்தால் ஏற்படும் ஆற்றல் எப்படிப்பட்டதென்ருல் கூற்றத் தையே அது உதைத்துத் தள்ளிவிடுமாம்.

''கூற்றம் குதித்தலும் கைகூடும் நோற்றலின்
ஆற்றல் தலைப்பட் டவர்க்கு.''

என்று சொன்னுர் வள்ளுவர்.

நம் உள்ளத்தில் தூய்மையும் கட்டுப் பாடும் வளர வளர, நம் எண்ணத்துக்கே வலுவேறுகிறது. உலக நிகழ்ச்சிகளையே பாதிக்கும் சக்தி நம் கருத்துக்களுக்கு ஏற் படுகிறது. சட உலகத்தில்அணுகுண்டுக்கு இருக்கும் ஆற்றலைக் காட்டிலும் வன்மை யுடையது நோன்பிருந்து,மனசைக் கட்டுப் படுத்தியவனுடைய எண்ணம். பகைவர் களை அழிக்கும் சக்தி அதற்கிருக்கிறது. நண்பர்களுக்கு ஆக்கம் கொடுக்கும் சக்தி யும் அதற்கிருக்கிறது. இந்த உண்மையை ஒரு குறள் கூறுகிறது.

''வேண்டிய வேண்டியாங்கு எய்தலால்
செய்தவம்
ஈண்டு முயலப் படும்''

தவத்தின் சக்தி இவ்வளவு சிறப்பானது என்று தெரிந்தும், அதை மேற்கொள்ளா மல் இருக்கிருர்களே மக்கள்! இதன் கார ணம் என்னவென்று வள்ளுவர் அதிசயிக் கிருர். அவருக்குச் சிரிப்பு வருகிறது. நகைச்சுவையோடு ஒரு காரணத்தைக் கற் பிக்கிருர். ''தவம் செய்யும் துறவிகளுக்கு உணவு முதலிய வசதிகள் செய்ய வேண் டும். அவர்களைப் போற்ற வேண்டும், நாமும் தவம் செய்யத்தொடங்கிவிட்டால் துறவிகளைப் பேணுவதற்கு ஆள் இல்லாமல் போகுமே என்று நினைத்து, அவர்கள் தவத்தைக் கைவிட்டு விட்டார்களோ! தவசிகளை மதிப்பது அவர்களுடைய தவத் துக்காக. அப்படியானுல் தவசிகளை மதிப் பதிலேயே பொழுதைப் போக்கிவிட்டு, தவச் செயலைச் செய்வதை அவமதிக்க லாமா? என்று கேட்கிருர்.

''துறந்தார்க்குத் துப்புரவு வேண்டி
மறந்தார்கொல்
மற்றை யவர்கள் தவம்?''

சுவையான கேள்விதான் இது.

# அமுதக் கவி

'அருள்மொழியரசு'
திருமுருக கிருபானந்த வாரியார் அவர்கள்

இராமாயணத்தைத் தமிழிலே நமக்குப் பாடிக் கொடுத்தவர் கம்ப நாடர். அவர் கவிச் சக்கரவர்த்தி. தமிழிலே அவர் செய்த இராமாயணம் பெரிய அமுதக் கருவூலம். அதில் ஒரு பாடலை இங்கு நினைவு செய்வோம்.

கார்காலம் போனவுடன் வருகிறேன் என்று சென்ற சுக்ரீவன், வந்தானில்லை. இரிசியமூகப் பருவதத்தில் தங்கியிருந்த இராமர் தன் தம்பியை நோக்கி, 'தம்பீ! சுக்ரீவன் சொன்ன சொல்லை நிறைவேற்றத் தயங்குகின்ருன் போலும். அவன் மனத்தை யறிந்து வா!' என்று கட்டளையிடுகின்ருர். அங்கே ஒரு பாடல் :

நஞ்சமன் னவரை நலிந்தா லது
வஞ்ச மன்று, மனுவழக் காதலால்
அஞ்சிலம் பதில் ஒன்றறி யாதவன்
நெஞ்சில் நின்று நிலாவ நிறுத்துவாய்
—கம்பர்.

முதல் வரிக்கு இரண்டு பொருள்கள் :

நஞ்சம் அன்னவரை-விஷம் போன்ற கொடியவர்களை நாம் கொன்ருல், அது குற்றமன்று ; அரச கர்மமே யாகும். பயிரைக் கெடுக்கின்ற புல்லைப் பிடுங்கி எறிய வேண்டும். களை யெடுக்காதொழியின் பயிர் அழியும்.

மற்ருென்று :

நைஞ்ச மன்னவர்-தருமத்தை விட்டு நலிந்த சிற்றரசரை அடக்குவது பேரரசருக்கு உரிய கடமைதான் ; அது மனுவழக்கு.

மூன்ருவது வரிக்கு :

(1) அஞ்சிலம் பதில்-ஒன்று அறியாதவன் : அஞ்சில் அம்பதில் ஒன்று அறியாதவன் ; அஞ்சிலும் அறியான், ஐம்பதிலும் அறியாதவன்.

(2) அஞ்-சிலம்பு-அதில் ஒன்று : அழகிய மலையில் வாழும் விலங்குகளில் ஒன்று குரங்குதானே என்று பொருள். சிலம்பு-மலை.

(3) அஞ்சு-இல்-அம்பு-அதில்-ஒன்று-அறியாதவன் : அஞ்சுதல் இல்லாத பல அம்புகள் உண்டு. வாலியைக் கொன்ற அம்பு போல் பலவுள. அவற்றில் ஒன்றையும் அறிந்தானில்லை.

(4) அஞ்சு-இல்-அம்பு-அதில்-ஒன்று-அறியாதவன் : இல்-மனைவி ; அம்பு-கண்ணீர்.

அஞ்சுகின்ற இல்லாளாகிய சீதை வடித்த கண்ணீர்த் துளிகளில் ஒன்றையேனும் அவன் அறிந்தானில்லை.

'விழியம்பு ஒழுக மெத்திய மாதரும் வீதி மட்டே' என்ற பட்டினத்தார் பாடலாலும் அறிக.

(5) அஞ்சிலம்-பதில்-ஒன்று-அறியாதவன். வாலிக்கு நம்மைத் துணை பற்றியது போல், நம்மை வெல்ல ஒருவனைத் துணை பிடித்தாலும் பிடிப்பான். ஆகவே, அதற்கு நாம் அஞ்சிலம்-அஞ்ச மாட்டோம். பதில் ஒன்று அறியாதவன்-செய்த உபகாரத்திற்குப் பதில் நன்றி செலுத்தத் தெரியாதவன்.

(6) அஞ்சு-இல்-அம்பது-அதில் ஒன்று அறியாதவன் : தமிழ்க் கணக்கில் ஐம்பது 'ருய'. அஞ்சு-'ரு'. இது இல்லையானுல், 'ய'. இது பத்து. அஞ்சில்லாதது. பத்து. பத்தில் ஒன்று-தசாவதாரத்தில் ஒன்று என்பதை அறியவில்லை. வெறும் மனிதனுக நினைக்கில் தசாவதாரத்தில் ஒன்று என்பதை உணர்த்துவாய்.

(7) அஞ்சு-இல்-அம்பது :

அஞ்சு இல்லாத அம்பது-(45) நாற்பத்தஞ்சு. அது ஒரு மண்டலம். இந்த மண்டலத்தில் ஒன்றும் அறியாதவன் : அறியாதவனுக்கு அறிவிப்பது நமது கடமை.

(8) அஞ்சு-இல்-அம்பது : அஞ்சு ரு இல்லையானுல், ய ; ய என்பது ஆக்ஞா ஸ்தானம்.

மூலாதாரத்தில்—ஓம்
சுவாதிஷ்டானத்தில்—ந
மணிபூரகத்தில்—ம
அநாகதத்தில்—சி
விசுத்தியில்—வ
ஆக்ஞையில்—ய


எனவே 'ய' என்ற எழுத்துள்ள ஆக்ஞை; புருவ நடு. அறிவு உள்ள இடம். அந்த இடம் பழுதுபடுமானால், உணர்த்துதல் வேண்டும். ஆகவே அவனுக்கு நீ சென்று உணர்த்து.

(9) அஞ்சு-இல்-அம்பது :
அஞ்சு 'டு' அது இல்லையானல்,
ந—ஆணவ மலம்
ம—திரோத மலம்
சி—சிவம்
வ—அருள்
ய—ஆன்மா.

ஆன்ம வர்க்கத்துள் ஒருவனாகிய அவனுக்குச் சென்று அறிவுறுத்து.

(10) அஞ்சில்—அம்பதில்—ஒன்று :
அஞ்சும், அம்பதும், ஒன்றும் சேர்ந்தால் 56 ; பிரபவ முதல் ஆண்டுகளை எண்ணினால் 56-வது ஆண்டு துந்துபி. துந்துபி என்ற எலும்பை லட்சுமணா நீ காலால் எற்றி விண்ணளவு அகற்றியதையும் அறிந்தானில்லை. அதனை அவனுக்கு நினைவு செய்.

இங்ஙனம் சிந்திக்கச் சிந்திக்கப் பல வகைகளில் நுண்ணிய பொருள்களையுணர்த்துகின்ற இந்தச் சிறந்த இனிய பாடலை, ஓர் அழகிய நல்ல அமுதக் கவி என்று கூறலாம் அல்லவா? இத்தகைய எத்தனையோ பல நல்ல அமுதக் கவிகள், கம்பராமாயணத்தில் உள்ளன. அவைகளையெல்லாம் கற்றுணர்ந்து அன்பர்கள் இன்புறுவார்களாக!



சோளிங்கபுரம், திருமலைப்படி விழாவில் தவத்திரு திருவலம் சிவானந்த மௌன சுவாமிகள் அவர்களுக்கு மாலையணிவித்து, அறங்காவலர் குழுத் தலைவர் திரு. கே.எம். நடராசன், B.A.,B.L., அவர்கள் வரவேற்புரை நிகழ்த்துதல் (1-1-74)

# செய்திச் சுருக்கங்கள்!...

## குடும்ப நல நிதி அளிப்பு

தமிழ்நாடு அரசால் கடந்த 1-1-74 முதல் அமுலுக்குக் கொண்டு வரப்பட்ட, பணியாற்றும் நாளில் இறந்து விடும் அரசுப் பணியாளர்களுக்குக் குடும்ப நல நிதியாக ரூ. 10,000 அளிக்கும் திட்டத்தின் கீழ், அறநிலையத் துறையில் கடைநிலை ஊழியராகக் கடந்த 30 ஆண்டுகள் 9 மாதங்கள் பணியாற்றிய திரு. சி. சுப்பராயலு, சென்ற 11-4-74-ல் மறைந்தார். அவரது குடும்பத்திற்குக் குடும்ப நல நிதியாக ரூ. 10,000-க்கான காசோலையினை மறைந்த, திரு சுப்பராயலுவின் துணைவியார் திருமதி முத்தம்மாளிடம், இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை அலுவலகத்தில், 26—4—74 அன்று அறநிலையத்துறை அமைச்சர் மாண்புமிகு மு. கண்ணப்பன் அவர்கள் வழங்கினர்.

* * * * * *

## திருப்பணித் துவக்க விழா

இராமநாதபுரம் மாவட்டம் திருவில்லிபுத்தூர் அருள்மிகு வைத்திய நாத சுவாமி திருக்கோயில் திருப்பணித் துவக்கவிழா, கடந்த 14-3-74 ஆம் நாள் அன்று நடைபெற்றது.

5000 ஆண்டுகளுக்கு முற்பட்டு ''மகுடஆகம'' விதிமுறைகளின்படி அமைந்துள்ள இத் திருத்தலத்தைச் சுமார் ரூ. நான்கு இலட்சம் செலவில் புதிப்பிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

இவ்விழாவிற்கு இராசபாளையம் தொழில் அதிபர் திரு பி.ஆர். இராம சுப்பிரமணியராஜா பி.எஸ்ஸி. அவர்கள் தலைமையில், தமிழ்நாடு இந்து அறநிலையத்துறை ஆணையர் உயர்திரு கே.எஸ் நரசிம்மன் பி.ஏ.பி.எல்., ஐ.ஏ.எஸ். அவர்கள் திருப்பணியைத் துவக்கி வைத்தார்கள்.

விழாவில் மதுரைத் துணை ஆணையர் திரு. ம.அ. முருகேசன் பி.ஏ.பி.எல். அவர்கள் சிறப்புரை ஆற்ற, திருமுருக கிருபானந்த வாரியார் அவர்கள் வாழ்த்துரை வழங்க, விழா இனிதே நடந்தேறியது.

* * * * * *

## பெருமங்கள நன்னீராட்டு விழா

மதுரை அருள்மிகு மீனுட்சி சுந்தரேசுவரர் திருக்கோயில் பெருமங்கள நன்னீராட்டு விழா நடைபெற்றுப் பதினேராண்டுகள் ஆகின்றன. வருகின்ற 26-6-74 புதன்கிழமை காலை 6 மணிக்கு மேல் 7.15 மணிக்குள் பெருமங்கள நன்னீராட்டு விழா நடைபெறவுள்ளது.

சிறப்பு மலர் ஒன்றினை விழாக் குழுவினர் வெளியிட உள்ளார்கள். இவ்விழாவினை ஒட்டி ரூபாய் பத்து இலட்சம் செலவில் திருப்பணி வேலைகள் மிகச் சிறப்பாக நடைபெற்று வருகின்றன.

* * * * * *

# அருள்மிகு மீனுட்சி சுந்தரேசுவரர் திருக்கோயில், மதுரை

## அஷ்டபந்தன, சுவர்ண பந்தன மகா கும்பாபிஷேகம்

**26-6-1974 புதன்கிழமை காலை 6 மணிக்கு மேல் 7·15-க்குள்**

அருள்மிகு மீனுட்சி சுந்தரேசுவரர் திருக்கோயில் பெரு மங்கள நன்னீராட்டு விழா (கும்பாபிஷேகம்) நடைபெற்றுப் பதினேராண்டுகள் ஆகின்றன. அருள்மிகு மீனுட்சி அம்மன் சுவர்ண பந்தனத் தகடுகளைப் புதுப்பித்து அஷ்டபந்தன, சுவர்ண பந்தனம் செய்யவும், திருக்கோயில் மேல்தளங்களுக்குத் தட்டோடு (Pressed Tiles) போட்டுப் புதுப்பித்தும், கோபுரக் கலசங்களில் பழுதடைந்தவைகளைப் புதுப்பித்தும், திருமதில்களைச் சுற்றிலும் புதிதாக வேலி அமைத்தும் (Railing garden), பன்னிரண்டாவது ஆண்டில் அம்மன், சுவாமி மற்றும் எல்லாப் பரிவார தேவதைகளுக்கும் அஷ்டபந்தனம் செய்து, ஆனந்த ஆண்டு ஆனி மாதம் 12-ஆம் நாள் புதன்கிழமை (26-6-1974) காலை 6 மணிக்கு மேல் 7.15 மணிக்குள் பெருமங்கள நன்னீராட்டு (மகா கும்பாபிஷேகம்) செய்யத் திருக்கோயில் அறங்காவலர் குழு தீர்மானம் செய்திருக்கின்றது.

ஆகவே அதற்கான திருப்பணி வேலைகள் ரூ. 10 இலட்சம் செலவில் நடைபெறுகின்றன. திருப்பணிக்கு நிதி வாரி வழங்கி அங்கயற்கண்ணி, ஆலவாய் அண்ணல் அருள் பெறுமாறு வேண்டுகிறேம். திருப்பணி நன்கொடைத் தொகைகளுக்கு வருமான வரி விலக்கு அளிக்கப்பட்டிருக்கிறது. திருப்பணி நன்கொடைகளைத் திருக்கோயில் நிர்வாக அதிகாரிக்கு நேரிடையாகவும், கீழ்க் குறித்த வங்கிகள் மூலமாகவும் அனுப்பலாம். சுவர்ண பந்தனத்துக்குத் தங்கக் காணிக்கை செலுத்தலாம்.

1. ஸ்டேட் பாங்க் ஆப் இந்தியா.
2. இந்தியன் ஓவர்சீஸ் பாங்க்
3. இந்தியன் பாங்க்
4. பாங்க் ஆப் இந்தியா
5. தேனு பாங்க்.
6. பாங்க் ஆப் மதுரை
7. பாங்க் ஆப் பரோடா
8. சென்ட்ரல் பாங்க் ஆப் இந்தியா
9. மதுரை மாவட்டக் கூட்டுறவு மத்திய வங்கி.
10. இராமநாதபுரம் மாவட்டக் கூட்டுறவு மத்திய வங்கி.

-600 008.
158593

கும்பாபிஷேகத்தை ஒட்டி வெளியிடப்படவிருக்கும் மலருக்கு வணிகப் பெருமக்கள் தங்கள் விளம்பரங்களை அளித்து ஆதரவு தர வேண்டுகிறேம்.

கட்டண விகிதம்: உள் முழுப் பக்கம் ரூ. 1,000-உள் அரைப்பக்கம் ரூ. 500.

என். எஸ். இராமச்சந்திரன், பி.ஏ.,பி.எல்.,
உதவி ஆணையர்-நிர்வாக அதிகாரி.

திரு. எல். நாராயணன் செட்டியார்,
அறங்காவலர் குழுத்தலைவர்.

திரு. என். பொன்னப்பன்.
திரு. டி. தியாகையா.
திரு. ஆர். கோபால்சாமி.
திரு. கே.எஸ். இராமகிருஷ்ணன், எம்.எல்.ஏ.
அறங்காவலர்கள்.

# அரசு ஊழியர் குடும்ப நல நிதி அளிப்பு



இந்து சமய அறநிலைய ஆட்சித் துறையில் கடைநிலை ஊழியராகப் பணி புரிந்து அண்மையில் காலஞ் சென்ற திரு. சுப்பராயலு என்பவரின் துணைவியாருக்கு, அறநிலைய அமைச்சர் மாண்புமிகு. மு. **கண்ணப்பன்** அவர்கள் ரூ. 10,000-க்கான காசோலையை வழங்கினர்.

Published by the Commissioner, Hindu Religious and Charitable Endowments (Admn.) Dept., Madras-600034
Printed at Tamil Arasu Press, Madras-600002. Editor : N. R. Murugavell, M.A., M.O.L.